DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர் இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

பஞ் சொக்கலிங்கம்
வீடு விற்க
416.786.2463
416.PUNCH ME
416punchme@gmail.com
RE/MAX ACE

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1339 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 3, 2021

# ஒன்றாரியோ மாகாண அமைச்சர் றேமண்ட் சோவின் (Raymond Cho) 30 வருட பொதுச் சேவையை பாராட்டி எடுக்கப்பெற்ற விழா





ஒன்றாரியோ மாகாணத்தின் முதியோர் விவகாரங்கள் மற்றும் அணுகுமுறைகள் தொடர்பான அமைச்சர் கௌரவ றேமண்ட்சோ அவர்களின் 30 வருட மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பொதுச் சேவையை பாராட்டி ஸ்காபுறோ வாழ் தமிழ் அன்பர்களால் எடுக்கப்பெற்ற விழா கடந்த 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மார்க்கம் வீதியில் அமைந்துள்ள நீல்கிறிஸ் உணவக மண்டபத்தில் ச நடைபெற்றது.

விழாவை ஏற்பாடு செய்த கட்டட ஆலோசகர் ரஞ்சன் (ரென்டி) அவர்கள் விழாவைத்தொகுத்து வழங்கினார். மாகாணபாராளுமன்ற உறுப்பினர்கள் லோகன் கணபதி மற்றும் அரீஸ் பாபிகியன் "உதயன்" லோகேந்திரலிங்கம், ஸ்காபுறோ நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் பிரதமகுரு அகியோர் உரையாற்றினார்கள்.

ஆரம்பத்தில் உரையாற்றிய அமைச்சர் றேமண்ட் சோ அவர்கள் இத்தனை வருட கால தனது தொடர்ச்சியான மக்கள் சேவைக்கும் தன்னைத் தேர்ந்தெடுக்கவும் பக்கக் துணையாக இருந்த ஸ்காபறோ வாழ் தமிழ் மக்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

# இனவழிப்புக்காக சர்வதேச நீதிமன்றத்தை தமிழர்கள் நாடலாமா?

**தீபச்செல்வனின் கட்டுரை உள்ளே..**




இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்றும் அதற்குச் சர்வதேச விசாரணையே தீர்வு என்றும் தமிழ் மக்கள் கோரி வருகிறார்கள். இனப்படுகொலைப் போர் நடந்து பன்னிரண்டு வருடங்கள் ஆகின்ற நிலையில் நீதிக்கான நகர்வுகள் மந்த கதியிலேயே இருக்கிறது. போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களோ நீதி-யை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இனவழிப்பினால் பாதிக்கப்பட்ட மக்கள் நீதிக்காக போராடியே மாண்டு வருகின்றனர். ஐக்கிய நாடுகள் சபை அமைப்பின் நடவடிக்கைகளோ தன்னரசியலுக்கு உட்பட்ட நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த விதத்திலும் நம்பிக்கைகளைத் தரவில்லை.

*(உள்ளே விபரமான கட்டுரை 14ம் பக்கத்தில்)*

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

*இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524*

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON AD TEAM

Carefirst Family Health Team

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்


- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

### Clinic Location:

**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com





## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### Renovation Workers Wanted

Workers needed for the following jobs:

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call: **416-706-8160**

### காரைக்குடி செட்டிநாடு உணவகத்தில் வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் கென்னடி - லோறன்ஸ் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள காரைக்குடி செட்டிநாடு உணவகத்திற்கு தோசை மற்றும் பரோட்டா தயாரிக்க நல்ல சமையல் வல்லுனர்கள் உடனடியாகத் தேவை.
சிறிது அனுபவம் விரும்பத்தக்கது.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
அத்துடன் Kitchen Helper, Dishwasher தேவை.

**Call: (416) 701-0003**

### திருமண மையம்

கனடா, அமெரிக்கா, ஸ்ரீலங்கா & மற்ற நாடுகள்.
மணப்பெண் / மணமகன்
திருமணம் / மறுமணம்
தமிழ் & தெலுங்கு & மலையாளம் & மற்ற மொழிகளும்.
அந்த அந்த நாட்டிலும் & இந்தியாவில் இருந்து மாறி வருபவர்களும் உள்ளனர்.

ஹரி ஐயர் ஜோதிடர்
**24 hours -- 7 days**
**Whatsapp: + 91 86673 25268**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### WALK-OUT BASEMENT FOR RENT

**Steeles / Staines** சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் இரண்டு அறைகள் கொண்ட **walk-out basement** உடனடியாக வாடகைக்கு உள்ளது. கார் **parking** ஒன்று வழங்கப்படும்.
தமிழர் கடைகள், பாடசாலைகள் மற்றும் பஸ் வசதிகள் ஆகியன அருகில்.
தனியாக **washer & dryer** ஆகியன வழங்கப்பெறும்.

தொடர்புகளுக்கு:
**(416) 579-3022 அல்லது (647) 521-8022**

### HOUSE FOR RENT

ஸ்காபுறோவில்
**Morningside / Sheppard** சந்திப்பிற்கு அருகில் உள்ள வீடு Dec 15ம் திகதி தொடக்கம் வாடகைக்கு உண்டு.
4 அறைகள் மற்றும் அனைத்து வசதிகளும் உண்டு.
**Basement** இதில் அடங்காது.

மேலதிக விபரங்களுக்கு:
**(416) 912-1572 அல்லது (416) 299-4904**

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public

250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### Condo Cleaning
### வேலை வாய்ப்பு

**Leslie/ Hwy 7.** இற்கு அருகில் **Condo Experience Heavy Duty Cleaner** தேவை.
திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை
வேலை நேரம் **8am to 5 pm**
18 டாலர்கள் மணித்தியாலத்திற்கு வழங்கப்படும் .
தொடர்புகளுக்கு
**மனோ 416-722-2914**

### CAREGIVER WANTED (LIVE-IN)

- Looking for a Male caregiver to look after a 91-year-old father and 78-year-old mother
- The language requirement will be English and Tamil
- Someone who is caring, trustworthy and who would live with them like a part of the family
- Previous experience, related training and passion for the job will be an asset
- Salary will be negotiated
- Interested candidates, please email your resume to **nmaithely@gmail.com**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# உதயன் கதிரோட்டம்

## தமிழர்களாக இருப்பினும் ஆட்சிக்கு வரும் அரசாங்கத்தின் நலனைக் கவனிக்கும் கயவர்களாக இருக்கின்றார்களே?

2009ம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தம் ‘விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்கம் கொண்டதாகவே அமையப்போகின்றது என்று எமது தமிழ் மக்கள் எண்ணித் தவித்தார்கள். எத்தனையோ நாட்டு இராணுவப் படைகள் வானிலும் தரையிலும் கடலிலும் முகாம்களை அமைத்து மூர்க்கத் தனமான நடத்திய தாக்குதல்களால் மண்ணிலும் விண்ணிலும் அதிர்வுகள் ஏற்பட்டன.

இறுதி யுத்தத்தில் அப்பாவி தமிழ் மக்களும் அறிவு சார்ந்த தமிழ் கல்வியாளர்களும் புத்திஜீவிகளும். தாய்மார்களும். குழந்தைகளும் கொன்றழிக்கப்படவுள்ளார்கள் என்பதை அறியாத எமது மக்கள். தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் தவித்துக் கொண்டிருந்தபோது, கொத்துக் கொத்தாக எமது மக்களும் போராளிகளும் அவர் தம் குடும்பத்தினரும் இனப் படுகொலை செய்யப்பட்டார்கள்.

அன்றிலிருந்து நகர்ந்து சென்ற நாட்கள் நரகமாகமே இருந்தன எமது மக்களுக்கு. முகாம்களில் பல்வேறு துன்பங்களை அனுபவித்த முன்னாள் போராளிகளும் மக்களுமாக பட்ட வேதனைகளைக் கண்டு காற்றே கதறியழுததாக இலக்கியப் படைப்புக்கள் காட்சிப்படுத்தியுள்ளன.

மறுபக்கத்தில் ‘காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடித் தேடி ஒவ்வொரு முகாமின் வாசல்களிலும் காலங்களைக் கடத்தியவர்கள் பின்னர் போராடத் தொடங்கினார்கள். ஆனால் அவர்கள் தொடர்ந்து நடத்தி வருகின்ற போராட்டங்கள் அவர்கள் உறவுகளைப் மீளவும் பெற்றுத் தரத் தவறிவிட்டன. மாறாக போராட்டத்தை நடத்திய சாத்வீகப் போராளிகள் தங்கள் உயிர்களை போராடும் களத்திலேயே இழந்தார்கள்.

மறுபக்கத்தில் தமிழ் மக்களின் துயரத்தையும் அவலங்களையும் இல்லாமற் செய்து அவர்களுக்கு நிம்மதியைத் தேடித் தருவோம் என்று வாக்குறுதிகளை கொடுத்து. வாக்குகளைப் பெற்றவர்கள். ஆட்சி அமைக்கும் தென்னிலங்கைச் அரசியல்வாதிகளின் அடிவருடிகளாக மாறிக்கொண்டிருந்தார்கள்.

தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களையும் இழப்புக்களையும் மறந்து, அவர்கள் அதிகார பலத்தையும் பணபலத்தையும் அனுபவிக்கத் தொடங்கினார்கள். அதனால் தமது கடமைகளை மறந்தவர்களாக மாறி தமிழ் மக்களையே உதாசீனம் செய்பவர்களாக காட்சியளித்தார்கள்.

இந்த காட்சிகள் தான் இப்போதும் தொடர்கின்றன என்பதே உண்மை என்பது நிதர்சனமாகத் தெரிகின்றுத.

ஆனால் 2009க்குப் பின்னர் இத்தனை ஆண்டுகள் கழிந்த பின்னர் பல உண்மைகளை எமது மக்கள் அறிந்து கொள்ளத் தொடங்கியுள்ளார்கள். தமிழ்த் அரசியல்வாதிதகள் என்று சொல்லப்படும் சம்பந்தர்.சுமந்திரன். மாவை சேனாதிராஜா. சிவஞானம் ஸ்ரீதரன் போன்றவர்கள் உட்பட பல தமிழ் அரசியல்வாதிகள் அரசாங்கத்தின் அடிவருடிகளாகவே மாறிய வண்ணம் தங்கள் நலன்களை மட்டுமே கவனித்து வருகின்றார்கள்.

அவர்கள் தமிழர்களாக இருப்பினும் ஆட்சிக்கு வரும் அரசாங்கத்தின் நலனைக் கவனிக்கும் கயவர்களாகவே செயற்படுகின்றார்கள் என்பது நன்கு தெளிவாகின்றது.

இது இவ்வாறிருக்க.தற்போதைய வட மாகாண ஆளுனர் ஜீவன் தியாகராஜா ஒரு தமிழர். ஆனாலும் அவர் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வைத் தேடித்தராமல் ஒரு இராணுவ அதிகாரி போன்று செயற்படுகின்றாரா என்ற கேள்வி தற்போது வட மாகாண மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் மாதகலில் காணி அளவீட்டு பணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் முகமாக நடந்து கொள்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டோம் என வடக்கு ஆளுநர் கூறியதாக வெளியான செய்தியை அடுத்து வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக கடந்த புதன்கிழமை காணி உரிமையாளர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நிலத்தை பறிப்பதும் எம் உயிரைப் பறிப்பதும் ஒன்றே, எமது நிலம் எமக்கு வேண்டும்,காணிகளை சுவீகரிக்கதே, ஆளுநரே காணி அபகரிப்புக்கு உடந்தையாகாதே போன்ற பல்வேறு கோசங்கள் போராட்டக்காரர்களால் எழுப்பபட்டது. போராட்டம் இடம்பெற்ற அப்பகுதியில் பொலிசாரும், இராணுவத்தினரும், புலனாய்வுப் பிரிவினரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஆனாலும் நாம் முன்னர் குறிப்பிட்ட தமிழ் அரசியல்வாதிகள் சுமந்திரன் போன்றவர்கள் அந்த இடங்களுக்கு அருகே கூடச் செலலவில்லை. எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் அவர்களோடு அருகில் இருந்த எவ்வித எதிர்ப்பையும் காட்டாமல் தங்கள் சுகத்தை அனுபவிப்பதே தொன்னூறு வீதமான தமிழ் அரசியல்வாதிகளின் நாளாந்த செயற்பாடாக உள்ளது என்புத மிகவும் உண்மையானது.

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 142ஆவது குருபூஜை நிகழ்வு இலங்கையில் சிறப்பாக நடைபெற்றது



இலங்கையிலும் இந்தியாவிலும் சைவத்தையும், தமிழையும் கண்ணெனக் காத்து அறநெறியில் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 142ஆவது குருபூஜை நிகழ்வு, இம்முறை நாடளாவிய ரீதியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கடந்த சனிக்கிழமை நாடளாவிய ரீதியிலே இந்நிகழ்வை அனுஸ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருந்தது.

கொழும்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பிரதானமாக முன்னெடுக்கப்பட்ட நிகழ்வுகளோடு வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 142ஆவது குருபூஜை நிகழ்வு, ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூஜை நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் இந்த ஏற்பாடுகளை செய்திருந்தார். அம்பாறை மாவட்டத்திற்கான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 142ஆவது குருபூஜை தினவிழா 27ஆம் திகதி சனிக்கிழமை காலை காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக கலந்து கொண்டு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் உரையாற்றுகையில் ”நல்லைநகர் நாவலர் பெருமானும், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரும் இலங்கைத் திருநாட்டின் இருபெரும் ஆன்மீக சொத்துகள். இருவரது பணிகளையும் இளம்சந்ததியினருக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை எமக்குள்ளது” எனத் தெரிவித்தார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்தப் பணிமன்றமும் இணைந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூஜை தினவிழாவை காரைதீவில் ஏற்பாடு செய்திருந்தன.

காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக்கள் திருமுன்னிலை வகிக்க, காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கேற்றல், நந்திக்கொடியேற்றல், அறநெறி கீதம், குருபூஜை என்பன நடைபெற்றன.

இந்த நிகழ்விலே ஆன்மிக அதிதிகளாக காரைதீவு ஸ்ரீ மகாவி‘ஸ்ணு ஆலயகுரு சிவஸ்ரீ சி.தியாகராஜக் குருக்கள், காரைதீவு ஸ்ரீ நந்தவனச் சித்திவிநாயகர் ஆலயகுரு சிவஸ்ரீ இ.மகேஸ்வரக் குருக்கள் ,காரைதீவு ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி ஆலயகுரு சிவஸ்ரீ சி.சாந்தரூபன் குருக்கள், பெரியநீலாவணை ஸ்ரீ மகாவி‘ணு ஆலயகுரு சிவஸ்ரீ ந.பத்மலோஜன் சர்மா, காரைதீவு ஸ்ரீ மாவடிக் கந்தசுவாமி ஆலயகுரு சிவஸ்ரீ ச.கோவர்த்தனன் சர்மா, நாவிதன்வெளி ஸ்ரீ முருகன் ஆலயகுரு சிவஸ்ரீ சுபாஸ்கர் சர்மா ஆகியோர் கலந்து கொண்டு ஆசீர்வதித்தனர்.

மணிமண்டபத்தில் அரங்க நிகழ்வின் போது நாவலர் பெருமான் மற்றும் விபுலாநந்த அடிகளாருக்கு மாலை அணிவித்து, சமயகுருமாரால் வேதபாராயணமும் தீபாராதனையும் நடத்தப்பட்டன. அறநெறி மாணவர்களின் நாவலரின் பன்முகதரிசனம் மற்றும் உரைகள் இடம்பெற்றன.

அங்கு மேலதிகஅரசஅதிபர் ஜெகதீசன் மேலும் உரையாற்றுகையில் ”எப்போதும் சிவசின்னங்களை அணியும் ஐந்தாம் பெரும் குரவர் அவர். சைவத்திற்கும் தமிழுக்குமாக வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர். பைபிளை மொழிபெயர்க்கின்ற ஆங்கிலப் புலமை அவருக்கிருந்தது. ஆறுமுகநாவலர் பெருமான், விபுலாநந்த அடிகள் ஆகியோரது ஆத்மாக்கள் எங்களை வழிநடத்துகின்றன என்ற நம்பிக்கைஇருக்கிறது.

நாம் சமய குரவர்களை வணங்குகின்றோம். அவர்கள் வாழ்ந்த முறைகளை படித்திருக்கின்றோம். அதேபோன்று இவர்கள் வாழ்ந்து காட்டியுள்ளனர். விபுலாநந்தரும் நாவலரும் 19ஆம் நூற்றாண்டில் அவதரித்து பலசேவைகளை சமூகத்திற்காக ஆற்றியவர்கள் . அதற்காகவே இலங்கையின் தேசியவீரர்கள் என்ற அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. தபால்தலையும் வெளியிடப்பட்டிருக்கிறது. அன்றைய மேலைத்தேய அடக்குமுறை காலகட்டத்தில் பல சவால்களுக்கு மத்தியில் பெரும் பணிகள் செய்த பெருமகான்களை நாம் மறக்க முடியாது.

தமிழகத்தில் பெருமானது பேச்சுத் திறமை, கதாப்பிரசங்கத்தை கேட்டு வியந்து அவரை பல்லக்கில் ஏற்றி திருவாவடுதுறை ஆதீனம் “நாவலர்“ என்ற பட்டத்தை வழங்கியமை இலங்கைவாழ் மக்களுக்கு பெருமையானது.

இந்து கலாசார திணைக்களம் அம்பாறை மவட்டத்தில் சிறந்த ஆன்மீக கலைகலாசார விழுமியங்களின் பயிற்சி நிலையமாக இந்த விபுலாநந்த மணிமண்டபத்தை அங்கீகரித்திருக்கிறது. இங்கு இவ்வாறு தொடர்ச்சியாக சமய ஆன்மீக நிகழ்வுகள் நடந்தேறி வருவது மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்குமுரியது. அதற்காக பணிப்பாளர் உமாமகேஸ்வரன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஜெயராஜி பிரதாப் போன்றோரைப் பாராட்டலாம்.

சைவத் தமிழர்களுக்கென்று ஒரு மதிப்புமிகு அடையாளம் தந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான். பல்துறை ஆளுமை மிக்க தீர்க்கதரிசனப் பார்வை கொண்ட பெருமகனார் நமக்காகச் செய்த அரும்பணிக்கு சைவத் தமிழுலகம் என்ன கைம்மாறு செய்தாலும் ஈடாகாது” என்றார்.

ஆன்மிக அதிதிகள், விஷேட அதிதிகள் எனப் பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்விலே மாணவர்களின் ஆளுமைத்திறனை வெளிக்கொணர்வு நிகழ்வுகளும் அவர்களுக்கான பாராட்டு நிகழ்வும் இடம்பெற்றன.


CONGRATULATIONS
CANADA
UTHAYAN
ON YOUR
25th
Anniversary!
COUNCILLOR
JENNIFER
MCKELVIE
STAY IN TOUCH!
4630 KINGSTON ROAD, UNIT 20
TEL.: 416-338-3771
COUNCILLOR_MCKELVIE@TORONTO.CA

# சுமந்திரனின் வெளிநாட்டு பயணம் தமிழருக்கு எதிரானது என்கிறது காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



சுமந்திரனின் வெளிநாட்டு பயணம் தமிழருக்கு எதிரானது.

இன்று தமிழர்களின் கார்த்தினக புனித நாளில் புனிதர்களை தலைவணக்கிறோம்.

காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளைக் கண்டுபிடிக்கக் கோரி எமது தொடர் போராட்டம் இன்று 1744 ஆவது நாளாகும்.

24 ஆண்டுகளுக்கும் மேலாக காணாமல் ஆக்கப்பட்ட தனது குழந்தையை தேடிய திரு. அ. இராமையா அவர்கள் நேற்று சாவடைந்தார்.

இந்த நாளில், திரு.இராமையாஅவர்களுடன் எங்கள் போராட்டத்தின் போது இறந்த மற்ற 109பெற்றோர்களுக்கும் நாமும் வணக்கம் செலுத்த விரும்புகிறோம்.

சிங்கள அரசிடம் இருந்து விடுதலைக்காக உயிர்நீத்த தமிழ் மக்களுக்கு வணக்கம் செலுத்த முடியாது என வவுனியா நீதிமன்றத்தின் உத்தரவு, இந்த நாளில் நாம் அமைதியாக இருப்பது மிகவும் கடினம்.

சுமந்திரனின் அமெரிக்கப் பயணத்தைப் பார்ப்போம். அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா ஆகிய நாடுகள் தங்களை அழைத்ததாக எங்களிடம் பொய் சொன்னார்.

அமெரிக்க வெளியுறவுத்துறையின் ட்விட்டர் செய்தியில், இது பெரும்பாலும் அமெரிக்க வெளியுறவுத்துறையில் உள்ள பயிற்சியாளர்களால் எழுதப்பட்டது என்பதை நாம் காணலாம். இந்த ட்விட்டர் செய்திகள் சுமந்திரன் வந்ததற்கு நன்றி சொல்லவில்லை அல்லது அமெரிக்கா அவர்களை அழைத்ததாகக் குறிப்பிடவில்லை.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சுமந்திரனை அமெரிக்கா அழைக்கவே இல்லை. சுமந்திரனும் இலங்கை அரசாங்கமும் இணைந்து நடத்திய பெரிய நாடகம் அது. அமெரிக்கா அவரை அழைத்திருந்தால் அதற்கான ஆதாரத்தை காட்டுங்கள்.

இலங்கையைப் பாதுகாப்பதற்காக அவர் அமெரிக்கா சென்றார் என்று மூன்று ஆதாரங்களுடன் அவரது பயணத்தை முடிக்கலாம்.

1. கனடாவில் உள்ள முஸ்லிம்களிடம் சுமந்திரன் கூறியபோது, தான் ஒருபோதும் சிங்கள மக்களுக்கு எதிராக எதுவும் செய்யமட்டோம் என்கிறார். உண்மையில் அவர் இலங்கை இனக்கொலை வழக்கை ஐசிசி எடுக்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டார் என்று அர்த்தம். ஏனெனில் ஐசிசியில் உள்ள இலங்கை வழக்கானது சிங்கள இராணுவ அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளை காயப்படுத்தும். அவரது அமெரிக்கப் பயணம் இலங்கை தொடர்பான எந்தவொரு ஐ.சி.சி நடவடிக்கைகளை தடுப்பதற்க்கானது.

2. கனேடியத் தமிழர்களால் துரத்தப்பட்ட ரொறன்ரோ உரையில், சிங்களவர்கள் என்ன கொடுக்கத் தயாராக இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்வை ஏற்றுக்கொள்ளும் என சுமந்திரன் தெரிவித்திருந்தார். சுமந்திரன் ஒருபோதும் அமெரிக்க மத்தியஸ்தம் கோரவில்லை என்பதை இது காட்டுகிறது, மேலும் சுமந்திரன் எந்த அமெரிக்கா உதவியையும் நிராகரித்தாரா என்ற கேள்வி எமக்கு உள்ளது. இது சுமந்திரன் தீர்வை கேட்க்க இல்லை என்பதை காட்டுகிறது, அல்லது மீண்டும் ஜே.ஆர் வகை அரசியலமைப்பு. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், எந்த மாகாண சபைகளும் இல்லாத ஒரு ஒற்றையாட்சி அரசு.

3. சுமந்திரன் அழைப்பின்றி அமெரிக்கா சென்றார்.

இப்பயணத்துக்கான பணம் சுமந்திரனுக்கு எங்கிருந்து கிடைத்தது என்பது முக்கியமான கேள்வி. இது இலங்கைக்கு உதவ விரும்பும் சில சிங்கள உயரடுக்கினரால் வழங்கப்பட்டதாக நாங்கள் நம்புகிறோம்.

பணம் கொடுத்தவர்கள் சுமந்திரனின் பயணத்தின் நிகழ்ச்சி நிரலை கட்டுப்படுத்துவார்கள். ஆனால் சிங்களவர்களும் முலிம்களும் பயணத்தை ஆதரிக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

சிங்கப்பூரில் சமரவீரவைச் சந்திக்கச் சென்ற புலம்பெயர் தமிழ்க் குழுவி-னர் சுமந்திரனுடன் இருந்தமைக்கு இன்னொரு முக்கிய அம்சமும் உண்டு. GTF, USTAG, CTC, ATC, NTC, போன்ற புலம்பெயர் சமூகம் மற்றும் ஏனைய குழுக்கள் சுமந்திரனுக்கு ஆதரவானவை. அவர்களில் பெரும்பாலோருக்கு அரசி-யலோ, உலகில் விடுதலை பெற்ற நாடுகளின் சரித்திரமோ தெரியாது. நாம் அடிப்படை யதார்த்தத்தை எதிர்கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் அரசி-யல். சிங்கப்பூர் சந்திப்பு தமிழர்களை 5 ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளியது.

சரி, இறுதியாக இந்தக் கூட்டங்களை ஏற்பாடு செய்தது யார்? அமெரிக்காவின் முன்னாள் தூதர் ராபர்ட் பிளேக்கால் ஏற்பாடு செய்யப்பட்டதாக அமெரிக்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவர் தமிழர்களின் நண்பன் அல்ல, இனப்படுகொலைப் போரை ஊக்குவித்தார் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். இப்போது அவர் ஒரு பரப்புரை குழுவை நடத்துகிறார், இந்த கூட்டங்களை அமைப்பதன் மூலம் பரப்புரை குழுக்கள் பணம் சம்பாதிக்கின்றன.

ஒரு பரப்புரைக் குழுவின் உதவியுடன், கிளிண்டன் ஜனாதிபதியாக இருந்தபோது, $10,000 உடன் நீங்கள் கிளிண்டனுடன் வெள்ளை மாளிகையில் காபி சாப்பிடலாம். கூ20,000 உடன் நீங்கள் வெள்ளை மாளிகையில் உள்ள லிங்கன் படுக்கையறையில் தூங்கலாம்.

சுமந்திரன் தனது பயணம் பற்றி யாரிடமாவது தமிழர்களிடமோ அல்லது அவர்களது கட்சிக்காரர்களிடமோ பேசினாரா? இந்தப் பயணம் தமிழர்களை ஒடுக்க பல ரகசியக் குறியீடுகளைக் கொண்டிருந்தது.

இந்த செய்திக்குறிப்பை முடிப்பதற்கு முன், இலங்கையிலோ அல்லது வெ-ளிநாடுகளிலோ சுமந்திரன், தமிழர்களுக்கு நன்மையான செய்த ஒரு விஷயத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து ஒன்றைப் பெயரிடவும்.

தமிழரசு கட்சி சுமந்திரனை வெளியேற்ற வேண்டும், இல்லையெனில் தந்தை செல்வாவின் தமிழ் அரசு கட்சிக்கு எதிர்காலமே இல்லை.

நன்றி
கோ.ராஜ்குமார்
செயலாளர் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம்.

# போரில் இறந்தவர்களை அமைதியான முறையில் நினைவேந்த தமிழர்களின் உறவுகளுக்கு உரிமையுண்டு என்கிறது இலங்கையின் பிரதான எதிர்க்கட்சி

மாவீரர் நாளான கடந்த சனிக்கிழமையன்று வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் மேற்கொண்ட அராஜகங்களை சஜித் பிரேமதாச தலைமையிலான பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வன்மையாகக் கண்டித்துள்ளது.


"இது ஜனநாயக நாடு எனில் போரில் இறந்தவர்களை அமைதியான முறையில் நினைவேந்த அவர்களின் உறவுகளுக்கு உரித்துண்டு. அதை ஆயு-தமுனையில் அடக்க முயல்வது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கில் ஆயுதப் படைகள் நடந்துகொண்ட விதம் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் இராணுவ ஆட்சிக்கு இதுவொரு சிறந்த எடுத்துக்காட்டு" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ ஊடகங்களிடம் தெரிவித்தார்.

"வடக்கில் மக்களை மட்டுமல்ல ஊடகவியலாளரையும் படையினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம். அதே-வேளை, சிலர் கைதுசெய்யப்படும் உள்ளனர். இந்த அராஜக நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றோம். இறந்தவர்களை நினைவேந்த அனைவருக்கும் உரிமை உண்டு. இதில் இன, மத, மொழி வேறுபாடு காட்டக்கூடாது" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.



"நாட்டில் தற்போது நடப்பது காட்டாட்சி என்பதை வடக்கு, கிழக்கில் நேற்று அரச படைகள் நடந்துகொண்ட விதம் எடுத்துக்காட்டுகின்றது. போரில் இறந்தவர்களை அமைதியாக நினைவேந்த பல இடங்களில் நீதிமன்றமே அனுமதி வழங்கிய நிலையில் அதை-யும் மீறி இராணுவத்தினருடன் சேர்ந்து பொலிஸார் நடந்த கொண்ட விதத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். நாட்டில் இன ரீதியில் - மத ரீதியில் - மொழி ரீதியில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமெனில் தமிழர்களுக்கும் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். அவர்களை உள ரீதியில் மேலும் காயப்படுத்தக்கூடாது" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

# தமிழக மீனவர் ராஜ்கிரணின் இறந்த உடலையும் அவமதித்து சிங்கள இனவெறியைக் காட்டுவதா? — சீமான் கண்டனம்



இலங்கைக்கடற்படையினரால் கொலைசெய்யப்பட்ட தமி-ழக மீனவர் ராஜ்கிரணது உடலை அந்நாட்டு அரசு உடற்கூறாய்வு செய்தப்பின், வெறுமனே உடலைப்பொட்டலம் கட்டி, ஆடைகளின்றி அனுப்பி அவமதித்திருப்பது ஆத்திரத்தை ஏற்படுத்துகிறது. தமிழக மீ-னவரின் இறந்த உடல் மீதும் இனவெறியைக் காட்டும் சிங்கள அரசப்பயங்கரவாதத்தின் இக்கோரச்செயல் வன்மையானக் கண்டனத்திற்குரியது.

இலங்கையின் யாழ்ப்பாணம் மருத்துவக்கல்லூரியில் நடைபெற்ற மீனவரது உடற்கூறாய்வுக்குப் பின்னர், சர்வதேச விதிகளையோ, நடைமுறைகளையோ துளியும் பின்பற்றாது ஆடைகளற்ற வெற்றுடலாகவே மீனவரது உடலை அனுப்பிய செய்தியானது தமிழகத்தில் நடைபெற்ற உடற்கூறாய்வின்போது தெரியவந்திருப்பது அடக்கவியலா பெருங்கோபத்தையும், உள்ளக்கொதிப்பையும் தருகிறது. இது தமிழர்கள் மீதான தீரான வன்மத்தையும், கொடும் இனவெறியையுமே காட்டுகிறது. இதுதொடர்பாக, இலங்கை அரசின் இந்தியத்தூதரகத்தையும், இந்திய வெளியுறவுத்துறையையும் கேள்விக்குள்ளாகி, அவற்றைச் சார்ந்தவர்களை நேரில் விளக்கமளிக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையானது உத்தரவிட்டும்கூட ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசும், தமிழகத்தை ஆளும் அரசும் இதுவரை வாய்திறக்காது அமைதிகாப்பது வெட்கக்கேடானது!

குஜராத் அருகே பாகிஸ்தான் நாட்டுக்கடற்படையினரால் கொலைசெய்யப்பட்ட மராத்திய மீனவருக்காக பாஜக அரசு கண்டனம் தெரிவிக்கிறது. அந்நாட்டுக்கடற்படை இராணுவத்தின் மீது குஜராத் அரசு வழக்குத் தொடுக்கிறது. அதேபோல, கேரளத்தில் இரு மீனவர்கள் கொலைசெய்யப்பட்ட விவகாரத்தை சர்வதேச நீதிமன்றம்வரை கொண்டு செல்ல வழிவகை செய்தது அம்மாநில அரசு. ஆனால், தமிழகத்தில் இதுவரை 850க்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கைக்கடற்படையால் பச்சைப்படுகொலை செய்யப்பட்டும் மத்திய, மாநில அரசுகள் அதற்குப் பெரியளவில் எவ்வித எதிர்வினையுமாற்றாது அலட்சியப்படுத்துவதும், தமிழ் மீனவர்களின் உயிரைத் துச்சமெனக் கருதிக் கடந்துசெல்வதுமான வரலாற்றுத்துரோகத்தினை தமிழக மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். ஆகவே, மீனவர் ராஜ்கிரண் படுகொலைக்கான நீதியை இனியும் பெற்றுத்தராது ஒன்றிய அரசும், மாநில அரசும் காலங்கடத்தினால், அதற்கான எதிர்வினைகளைக் கட்டாயமாக மக்கள் மன்றத்திலே இரு அரசுகளும் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "அரசியலின் மறைக்கப்பட்ட கதைகள் கூறும் கதை" நூல் பிரதமர் மகிந்தாவுக்கு வழங்கப்பெற்றது



"அரசியலின் மறைக்கப்பட்ட கதைகள் கூறும் கதை" நூல் அதன் ஆசிரியர் குணபால திஸ்ஸகுட்டிஆராச்சி அவர்களினால் திங்கட்கிழமை (29) அன்று முற்பகல் அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களில் பல்வேறு பதவிகளை வகித்த காலப்பகுதியில் கேட்ட அறிந்த இலங்கை அரசியலின் மறைக்கப்பட்ட ஆபத்தான, சுவாரஸ்சமான மற்றும் பல்வேறு சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு குணபால திஸ்ஸகுட்டிஆராச்சி அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார்.

1981 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் ஹம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்தி சபையின் நிறைவேற்று உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டு, 1989 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து முதல் முறையாக பாராளுமன்றத்திற்கு தெரிவான குணபால திஸ்ஸகுட்டிஆராச்சி அவர்கள் 1990 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் மற்றும் பாராளுமன்ற விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

குணபால திஸ்ஸகுட்டிஆராச்சி அவர்கள் களனி பல்கலைக்கழகத்தில் வெகுசன ஊடகப் பிரிவில் பட்டம் பெற்றவராவார்.

# மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 17,167 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை முழுமையாக பாதிப்பு



மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக 2021 ஆம் 2022 ஆம் ஆண்டிற்கான பெரும்போக பயிர்ச் செய்கையில் சுமார் 17,167 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை முழுமையாக அழிவடைந்துள்ள தாக மன்னார் மாவட்ட கமநல திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ஏ.மெரின் குமார் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 5555 ஏக்கர், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 2400 ஏக்கர், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 4345 ஏக்கர், மடு பிரதேச செயலாளர் பிரிவில் 825 ஏக்கர் மற்றும் மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் 4042 ஏக்கர் நெற் செய்கை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் தற்போது வரை 17,167 ஏக்கர் வயல் நிலங்கள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளது.என அவர் மேலும் தெரிவித்தார்.

- மன்னார் நிருபர்

# முல்லைத்தீவில் ஊடகவியலாளர் மீது இராணுவம் மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் – குறித்து விசாரணைகள் வேண்டும் என்கிறார் இரா.சாணக்கியன்




முல்லைத்தீவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊடகவியலாளர் ஒருவர் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து நீதியானதும், சுயாதீனமான துமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில் செய்தி அறிக்கையிடலில் ஈடுபட்ட ஊடகவியலாளர் மீது கடந்த 27ஆம் திகதி மிலேச்சத்தனமான முறையில் திட்டமிட்ட வகையில் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முள்ளியவாய்க்கால் கிழக்கில் வசித்து வரும் குறித்த ஊடகவியலாளர் கடந்த 27 ஆம் திகதி செய்தி சேகரிப்பிற்காக முல்லைத்தீவு சென்று அங்கிருந்து வீடு திரும்பிய நிலையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் பெயர் பலகையினை ஒளிப்படம் எடுத்த நிலையிலேயே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட நான்கு இராணுவத்தினர் ஊடகவியலாளரை கேள்வி கேட்டு அடையாளப்படுத்த சொல்லி கோரிய வேளை குறித்த ஊடகவியலாளர் அடையாள அட்டையினை எடுத்து காட்ட முற்பட்ட வேளையில் படையினர் ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்திய படையினர் இராணுவ சீருடையிலும் கடமை அல்லாத நேரத்தில் இராணுவம் அணியும், இராணுவ சீருடையான அரை காச்சட்டையுடனும் ரி சேட்டுடனும் நின்று தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடத்தில் இராணுவம் தாக்குதலுக்காக பயன்படுத்திய பச்சை பனை மட்டை ஒன்றில் முள்ளு கம்பிகள் சுற்றப்பட்ட ஆயுதம் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் மூன்று இராணுவத்தினரால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டதுடன், பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர். இது வெரும் கண்துடைப்பு கைதாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

இந்த தாக்குதல் சம்பவம் குறித்து நீதியானதும், சுயாதீனமானதுமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெறும் சம்பவங்களை பார்கின்ற போது, எம்முள் அச்ச உணர்வு ஒன்று தோன்றுவதுடன், நாடு இராணுவ மயமாக்கலினை நோக்கி நகர்கின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது. இதனை கூட்டமைப்பு என்ற வகையில் பலமுறை உரக்கச்சொல்லியிருக்கின்றோம்.

இதுகுறித்து இராணுவத்தளபதி மற்றும் அமைச்சர் சரத் வீரசேகர ஆகியோர் மௌனம் காக்கின்றமை வருத்தமளிக்கின்றது. குறித்த இருவரும் இதுதொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

தற்போதைய அரசாங்கத்தின் கடந்த ஆட்சிக்காலத்தின் போதும் மிக மோசமான ஊடக அடக்குமுறைகள், ஊடகவியலாளர்களைக் கடத்திப் படுகொலை செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இந்தநிலையில் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட மாட்டார்கள் என கூறி தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. எனினும் தற்போதைய அரசாங்கத்தில் ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகள் மீண்டும் அதிகரித்துள்ளன.

குறிப்பாக பிழைகளை சுட்டிக்காட்டுகின்ற ஊடகவியலாளர்கள் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்படுகின்றார்கள். இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

எமது மக்களுக்கும் சுதந்திரமில்லை ஊடகவியலாளர்களுக்கும் சுதந்திரம் இல்லை. சுதந்திர ஊடக முடக்கமானது ஒரு நாட்டின் முடக்கத்துக்கு ஒப்பானது. அரச சார்பான தமிழ் அரசியல்வாதிகள் இவ் அரசின் இவ்வாறான செயல்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதும் பக்கச் சார்பாக செயல்படுவதும் அவர்களுக்கு சார்பாக செயல்பாடுகளை சரி எனவும் நிறுவிக்கொண்டுள்ளார்கள்.

இந்த அரசின் காலத்திலேயே எம் மக்கள் பல இன்னல்லகளை அதிகளவாக அனுபவித்தனர் அனுபவித்துக்கொண்டும் வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் முப்படைகள் மற்றும் பொலிஸார் இணைந்து ரோந்து நடவடிக்கை





முப்படை மற்றும் பொலிஸார் இணைந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் பரிசோதனை செயற்பாட்டினையும் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுத்துள்ளனர்.

இலங்கையின் அனைத்து நிர்வாக மாவட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடற்பரப்புகளில் பாதுகாப்பைப் பேணுவதற்காக நாட்டின் அனைத்து ஆயுதம் தாங்கிய முப்படையினருக்கும் அழைப்பு விடுக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த திங்கட்கிழமை (22) அன்று வெளியிட்டிருந்திருந்தார்.

இதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, சவளக்கடை, மத்திய முகாம் பொலிஸ் நிலையங்கள், பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை மற்றும் கல்முனை இராணுவ மகாம் உள்ளிட்ட இடங்களில் பணியாற்றும் பாதுகாப்பு தரப்பினர் இச்செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நாட்டில் வெகுவாக அதிகரித்துவரும் கொரோனா அலையை கட்டுப்படுத்த இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் ஒரு கட்டமாக திடீர் சோதனைகளை முப்படையினர் உள்ளிட்ட பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இத் திடீர் சோதனையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துவது, தலைக்கவசம் அணியாது செல்வது, ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது, அதிவேகமாக செல்வது, குடிபோதையில் வாகனம் ஓட்டுவது தொடர்பில் கண்காணிக்கப்பட்டு தண்டப்பணம் விதிக்கப்பட்டு வீதி ஒழுங்குமுறை தொடர்பான ஆலோசனைகள், முகக்கவசம் அணியாது சென்றவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு எச்சரிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கனடிய செய்திகள் Canadian News

# கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் விடுத்துள்ள அறிக்கை

கடந்த 27ம் திகதி கனடாவில் மார்க்கம் பெயர்கிறவுண்ட்ஸ் என்னும் மைதானத்தில் கொட்டகை அமைத்து "தமிழர் நினைவெழுச்சி நாளை" ஏற்பாடு செய்த "கனடிய தமிழர் நினைவெழுச்சி அகவம்" விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பெற்றுள்ளது.



கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள் அறிக்கை - 27.11.2021.

கார்த்திகை -27.

கார்த்திகை-27. மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் தமது இனிய இளைய உயிர்களை ஈகம் செய்த அனைத்து மாவீரர்களுக்கும் வீர வணக்கம் செலுத்தும் வீர வணக்க நாள். எமது பிள்ளைகளை நினைந்து, நினைந்து, நிறையும் விழிகளுடனும், அவர்கள் தம் நினைவில் நனைந்து நனைந்து வழியும் துளிகளுடனும் வணங்கி எழும் புனித நாள். துயிலும் இல்லங்களில் அறி துயில் கொள்ளும் எமது மானமா மறவர்களைத் தொழுதெழும் தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள். தாயகக் கனவை நெஞ்சினிலும், தமிழரின் வாழ்வை இலக்கினிலும் தாங்கி," களமாடிக் களமாடிக் கனல் ஏந்தி நின்றவரின் கல்லறைகளில் காந்தள் மலர் வைத்துக் கை தொழும் கார்த்திகைத் திருநாள். காற்றாகி, மூச்சாகித், தீயாகி, வேராகி, வித்தாகி, உயிராகி, உயிரின் உயிர்ப்பாகி உறுதியின் உறைவிடத்தில் உறைபவரை மீண்டும், மீண்டும் உணர்ந்து மீள் எழுச்சி கொள்ளும் நன்னாள் மாவீரர் நாள்.

தமிழீழத் தேசியத் தலைவர். மேதகு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தமிழீழம் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார். "தொடரான பூகோள நிலப் பரப்பையும், வரையறுக்கப் பட்ட எல்லைகளையும் கொண்ட வட கிழக்கு மாகாணங்கள் அடங்கிய தமிழர் தாயகத்தையே தமிழர் :தாயகம் என்று குறிப்பிடுகின்றோம்.. இந்த மாநிலம் வரலாற்று ரீதியாக அமையப் பெற்ற தமிழ் பேசும் மக்களின் குடி நிலம் ஆகும். இதனைக் கூறு போட முடியாது."

தேசியத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் பூகோள ரீதியான முக்கியத்துவம், வரையறுக்கப் பட்ட எல்லை, வட கிழக்கு மாகாணங்கள் அடங்கிய தமிழர் தாயகம், வரலாற்று ரீதியாக அமையப் பெற்ற தமிழ் பேசும் மக்களின் குடிநிலம் என்ற எமது மண் சார்ந்த வாழ்வு, அடக்கி ஒடுக்கப் பட்ட போது சொந்த மண்ணின் விடியலுக்காகவும், எமக்கான சுதந்திர நல் வாழ்வுக்காகவும் தம்மைக் கொடை செய்தவர்கள் இந்த மாவீரர்கள்.

இந்த மாவீரகளது கனவை எமது நெஞ்சினில் ஏந்தி, எம்மாலான பணிகளை நாம் எல்லோரும் இணைந்து, கனடாவில் முன்னெடுத்து வருகின்றோம். நாம் வாழும் கனடிய மண்ணில் கட்டமைப்புக்களாகவும், கனடியத் தமிழ் மக்களாகவும் இணைந்து இந்த நாட்டில் முன்னெடுத்த விடயங்களில் நாம் முன்னேற்றம் அடைந்து வருகின்றோம்.

1. கனடியப் பாராளுமன்றத்தில், 2019 யூன் மாதம் 19 ஆம் திகதி அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களாலும் ஐக்கிய நாடுகள் அவை தமிழின அழிப்பை விசாரிக்க வேண்டும் என்ற தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப் பட்டது
2. ஒன்ராரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் தமிழ் இன அழிப்புக் கல்வி வாரமாக மே11 இல் இருந்து18ஆம் திகதி வரை சட்டம் நிறைவேற்றப் பட்டது.
3. பிரம்டன் மற்றும் ரொரன்ரோ மாநகரங்களில் மே 18 தமிழின அழிப்பு நாளாகத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.
4. தமிழீழத்தில் தமிழின அழிப்பு இடம் பெற்றது, மற்றும் அதற்கான அனைத்துலக விசாரணை இடம் பெற வேண்டும் என்று கனடாவில் அனைத்துக் கனடிய அரசியல் மட்டங்களிலும் ஏற்பட்ட இந்தக் கருத்துருவாக்கத்துக்காகத் தங்களது



5. ஆதரவினைக் கொடுத்த அனைத்து மட்ட அரசியல் தலைவர்கள், உறுப்பினர்கள், மற்றும் இந்தத் தீர்மானங்களை முன்னெடுத்தவர்கள் அனைவருக்கும் நாம் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

நாம் வாழும் இந்தக் கனடிய மண்ணுக்கு நாம் மீண்டும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்,

அகவமானது, கனடியத் தமிழர் சமூகத்தின் சார்பில், அனைத்துக் கட்டமைப்புக்களோடும் இணைந்து நின்று மாவீரர் நாளை மிகப் பெரிய வீர வணக்க நாளாக முன்னெடுத்து வருகின்றது. தாயகத்தில் எமது மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில், அடிப்படை வசதிகள் எதுவுமின்றி, அன்றாடம் அல்லற் பட்டு வாழ்ந்து வருகின்றார்கள். கோவிட் 19 பெருந்தொற்றுக் காலச் சூழலாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் சொல்லவொணாத் துன்பங்களுக்குட்பட்டு மிக நீண்ட காலமாகத் துயர் சுமந்து வாழும் எமது உறவுகளின் துன்பவாழ்வு அகன்று அவர்களுக்கு அமைதியான நல் வாழ்வு அமையத் தாயகம் சார்ந்த எம்மால் முடிந்த பணிகளை நாம் செய்ய வேண்டும்.

எமது மாவீரர்கள், இனப்படுகொலை செய்யப் பட்ட எமது மக்கள், எரியூட்டப்பட்ட உடமைகள், இழந்துபோன எமது அருமந்த வாழ்வு, திட்டமிடப்பட்டுக் கை மாறும் காணிகள், ஊடுருவும் பன்னாட்டு அரசியல் என்று தொடர்ச்சியாக இழப்புகள் பலவற்றைக் கடந்து வந்து கொண்டிருக்கும் தமிழினமாகிய நாம் எனது தாகத்தை நோக்கி ஒற்றுமையுடன் பயணிப்போம் என்று இன்றைய நாளில் உறுதி எடுப்போமாக.

தாயகத்தில், கார்த்திகை 27இல் தமது பிள்ளைகளை நினைந்து விளக்கேற்ற முடியாத நிலையிலும், துயிலும் இல்லங்களுக்குச் சென்று வழிபட முடியாத நிலையிலும் எமது மக்கள் உள்ளார்கள். இலங்கை அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டுள்ள பல அடக்கு முறைகளுக்கு மத்தியிலும் யாழ். பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தியுள்ளார்கள். தமது தந்தையருக்கான, அன்னையருக்கான,சகோதரர்களுக்கான, சகோதரர்களுக்கான, மாவீரர் வழிபாட்டைச் செய்ய முடியாத அடக்குமுறைச் சூழல் மிகுந்த மனவேதனைக்குரியது ஆகும். இவர்கள் எல்லோருக்காகவும் நாம் ஒன்றிணைந்து நின்று எமது பிள்ளைகளுக்கான வீர வணக்கத்தைச் செலுத்தி, மாவீரகளது இலக்கை நோக்கிய எமக்கான கடமைகளைத் தொடர்ந்து செய்வோம் என்று உறுதி எடுத்துக் கொள்வோமாக.

"நாம் எமது சத்திய இலட்சியத்தில் பற்றுறுதி கொண்டு உறுதி கொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால் எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது"

தமிழீழத் தேசியத் தலைவர்.மேதகு. வேலுப்பிள்ளை பிரபாகரன்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.
கனடா."








## After-School Program Funding for Scarborough-Agincourt Students

# மாணவர்களை பாடசாலை நேரத்திற்கு பின்னரான செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் அமைப்புக்களுக்கான நிதி ஒதுக்கீடு




Dec. 1st, 2021. Scarborough-Agincourt MPP, Aris Babikian, joined Ms. Lee Soda, Agincourt Community Services Association (ACSA) Executive Director, and staff to make a $369,600 funding announcement to Scarborough-Agincourt students for the after-school programs to support safe and supervised activities for students during the school year in priority neighborhoods across our community. The program helps kids stay active and engaged, improves academic performance, and encourages leadership skills through activities such as sport, recreation, and physical activity, personal wellness, anti-bullying, nutrition education, and internet safety. Students in 9 Scarborough-Agincourt schools will benefit from this timely funding.

This funding announcement for Scarborough-Agincourt schools is part of the government investment of $13.5 million through the Ontario's After School Program to support 110 organizations that provide activities for children living in high-priority neighborhoods across the province.

--------------------------------------------

ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் அவர்களது சிபார்சின் பேரில். அவரது தொகுதிக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதி. அவர்கள் தங்கள் பாடசாலை நேரத்திற்கு பின்னரான செயற்பாடுகளில் ஈடுபடும் வண்ணம் ஊக்குவிக்கும் வகையில் சேவை வழங்கும் நிறுவனமான Agincourt Community Services Association (ACSA) இன் மூலமாக சேவைகளை வழங்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிதி ஒதுக்கீடு தொடர்பாக மக்களுக்கு அறியத்தரும் வகையில் நேற்று முன்தினம் புதன்கிழமையன்று மாலை ஒரு சிறிய வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த வைபவத்தில் ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் உட்பட Agincourt Community Services Association (ACSA) அமைப்பின் இயக்குனர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி நிதி ஒதுக்கீட்டின் பிரகாரம் Agincourt Community Services Association (ACSA) அமைப்பிற்கு $369,600 நிதி வழங்கப்பட்டுள்ளது. ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு சேவையாற்ற Agincourt Community Services Association (ACSA) அமைப்பிற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது இந்த நிதியானது. ஒன்றாரியோ மாகாண அரசினால் மாகாணத்தில் உள்ள 110 சேவை வழங்கும் அமைப்புக்கள் ஊடாக பல பாடசாலை மாணவர்களுக்கு பயனுள்ளதாக செயற்பாடுகள் 13.5 million டாலர்கள் ஒதுக்கீடு செய்யப்பெற்று மாணவர்கள் பயன்படும் வகையில் செயற்பாடுகள் ஆரம்பமாகவுள்ளன.



இந்தியா செய்திகள்
India News

# ஜோதி நரசிம்மன் எழுதிய "அத்தியூர் விஜயா" நூல் வெளியீட்டு விழா — விழுப்புரத்தில் சிறப்பாக நடைபெற்றது



அத்தியூர் விஜயா நூல் வெளியீட்டு விழா - விழுப்புரத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் 1000க்கும் மேற்பட்ட பழங்குடி இருளர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

மேலும் கனடா உதயன் தமிழக செய்தியாளர் அருண் கதாதரன் கலந்து கொண்டு எழுத்தாளர் ஜோதி நரசிம்மனுக்கு கனடா உதயன் சார்பாக வாழ்த்துகளை தெரிவித்தார். விரைவில் ஜோதி நரசிம்மன் எழுதிய அத்தியூர் விஜயா நாவல் நமது கனடா உதயன் இதழில் தொடராக வெளிவரவுள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் விழாவில் நூலை பெற்று நாடாளுமன்ற உறுப்பினர் வாழ்த்துரை வழங்கினார். அதேபோல் முனைவர் துரை. ரவிக்குமார், இரா. ஜனகராஜ், விழுப்புரம் நகரமன்ற முன்னாள் தலைவர் வழக்கறிஞர் சுசீலா, சென்னை, பிரபா கல்விமணி, ப. இ.பா.ச, சகோதரி லூசினா, புனித அன்னாள் கல்வி சுடர் வழகறிஞர் ஷெரீப், விழுப்புரம், வே.அ. இரமேஷ்நாதன், இயக்குநர், இளைஞர்களுக்கான சமூக விழிப்புணர்வு மையம், த.பாலு, ஓய்வு பெற்ற ஆசிரியர் கவிஞர் மு.ராமமூர்த்தி விழுப்புரம், பொன்.மாரி, பழங்குடி இருளர் கல்வி அறக்கட்டளை ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினார்கள்.



நூல் ஆசிரியர் பா.ஜோதி நரசிம்மன் ஏற்புரையும், மு.நாகராஜன் நன்றியுரையும் வழங்கினார்கள். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பை முருகப்பன் ராமசாமி அவர்கள் செய்திருந்தார்.

**தமிழ் எழிலன் பதிப்பகம்**
**பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்கம்**



# திருமாவளவனின் "சிறுபிள்ளைத் தனம்" தமிழகமெங்கும் பரவி வரும் செய்தியும் படங்களும்

வெள்ள சேதத்தை உணர்த்திட படகில் சென்ற அண்ணாமலையை உள்நோக்கத்தோடு விமர்சனம் செய்தவர்கள், இந்த நிகழ்விற்கு வாய் மூடி அமைதி காக்கக்தான் செய்வார்கள். இது தான் தமிழக அரசியல் என்கிறார் தமிழைக பாஜகசெய்தி தொடர்பாள நாராயணன் திருப்பதி, தொடர் கன மழையினால் சென்னையின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்துவிட்டது. கீழ் தளங்களில் குடியிருப்போர் பெரிதும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவனின் வேளச்சேரியில் உள்ள அவரது வீட்டில் முழங்கால் அளவுக்கு தண்ணீர் புகுந்துவிட்டது . அவர் வெளியே காரில் ஏறி செல்ல வேண்டும் என்பதற்காக அவருடன் இருப்பவர்கள் வரிசையாகச் நாற்காலியை வைக்க அதி ஏறி வருகிறார் திருமாவளவன். பின்னர் நாற்காலியின் மேல் திருமாவளவன் நின்றுகொண்டிருக்க, அவருடன் இருப்பவர்கள் அந்த நாற்காலியை இழுத்துக் கொண்டு செல்கிறார்கள்.

இதற்குத்தான் நாராயணன் திருப்பதி அவ்வாறு தெரிவித்திருக்கிறார். அவர் மேலும், தன் வீட்டிலிருந்து வெளியே வந்து தன் காலணி தண்ணீரில் நனைந்து விடா வண்ணம் பலருடைய உடலுழைப்பை உபயோகித்து சேர்களில் நடந்து வந்து திருமாவளவன் அவர்கள் காரில் ஏறி அமர்ந்தது வன்மையாக கண்டிக்கத்தக்கது. ஒரு அரசியல் தலைவர் எவ்வாறு நடந்து கொள்ளக்கூடாது என்பதற்கு உதாரணம் திருமாவளவன். இனி, அரசியலில் எளிமை, தூய்மை என்ற கருத்துகளை சொல்லும் தார்மீக உரிமையை இழந்து விட்டார் திருமாவளவன் அவர்கள். அதே போல், ஒடுக்கப்பட்டவர்களுக்காக இருப்பதாக சொல்லிக்கொண்டு, தொண்டர்களின் உடலுழைப்பை உறிஞ்சிய அவரின் செயலை கண்டிக்காத அரசியல்வாதிகள் இனி தங்களை தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் தகுதியை இழந்து விட்டார்கள். பல ஊடகங்கள் இது குறித்து மௌனம் காப்பது அவற்றின் நடுநிலைத் தன்மையை தோலுரித்து காட்டி விட்டது. சமூக அநீதியின் முத்திரை. மக்கள் பார்த்து கொண்டிருக்கிறார்கள். காலம் பதில் சொல்லும் என்கிறார்.



# மத்திய பிரதேச மாநிலத்தில் 6 வயது குழந்தையை தூக்கி சென்ற சிறுத்தை..துரத்திச் சென்று கால்களை பிடித்து சுழற்றிய வீரத்தாய்





பழங்குடியின பெண் ஒருவர் சிறுத்தையிடம் சிக்கிய தனது 6 வயது மகனை தனியாக போராடி பத்திரமாக மீட்டுள்ளார். இந்த செய்தி வைரலாகி வருகிறது. மத்திய பிரதேச மாநிலத்தில் சித்தி மாவட்டத்தில் உள்ளது சஞ்சய் காந்தி தேசிய பூங்கா அருகே இருக்கும் கிராமம். இந்த பூங்கா சுற்று வட்டார பகுதியில் இருக்கும் பாடி ஜிரியா கிராமத்தில் வசித்து வருபவர் கிரண் பாய்கா.

இவர் பாய்கா பழங்குடியினத்தை சேர்ந்தவர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் தனது கணவரின் வருகையை எதிர்பார்த்து வீட்டின் வாசலில் தனது 4 குழந்தைகளுடன் காத்திருந்தார்.

அப்போது அங்கு சிறுத்தையின் நடமாட்டம் இருந்துள்ளது. இதை கிரண் கவனிக்கவில்லை. கைக் குழந்தையை மடியில் வைத்திருந்தார். 6 வயது ராகுல் மற்றும் மற்ற இரு குழந்தைகளும் கிரணுடன் தந்தைக்காக காத்திருந்தனர். அப்போது தூரத்தில் பதுங்கியிருந்த சிறுத்தை மெதுவாக வந்தது.

ராகுல் மீது பாய்ந்தது அப்போது கண்ணிமைக்கும் நேரத்தில் 6 வயது குழந்தை ராகுல் மீது பாய்ந்தது. அந்த குழந்தையை கவ்விக் கொண்டு ஓடியது. இதனால் அதிர்ச்சியடைந்த கிரண், தன்னிடம் இருந்த கைக் குழந்தையை இன்னொரு குழந்தையிடம் கொடுத்துவிட்டு சிறுத்தையிடம் உள்ள ராகுலை மீட்க ஓடினார். இருட்டு சூழ தொடங்கிய நிலையில் புதருக்குள் இருந்த சிறுத்தையை கிரண் பார்த்துவிட்டார். அதன் கால்கள் ராகுல் மீது இருந்தன. இந்தக் காட்சியை கண்ட கிரண் சிறுத்தை மீது பாய்ந்துள்ளார். பின்னர் தனது முழு பலத்தையும் பயன்படுத்தி குழந்தையை சிறுத்தையிடம் இருந்து மீட்டுள்ளார். ராகுலை தூக்கிக் கொண்டு ஓடிய போது சிறுத்தையும் துரத்தியது. அப்போது அவரை சிறுத்தை தாக்கியது. உடனே சிறுத்தையின் கால்களை பிடித்து இழுத்து தள்ளியுள்ளார். அதற்குள் இவரது குரல் கேட்டு கிராமத்தினர் கூடினர். உடனே சிறுத்தை ஓடி சென்று மறைந்துவிட்டது. இதையடுத்து மயக்கத்தில் இருந்த கிரணையும் ராகுலையும் கிராம மக்கள் மருத்துவமனையில் சேர்த்தனர். ஒரு குழந்தையை தாயை காட்டிலும் கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொள்ளும் நபர்கள் யாருமில்லை என்பதற்கு இதுதான் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

கனடிய செய்திகள்
Canadian News

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கனடிய கிளையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் என். ஏ. சுமந்திரன் அவர்களுடனான மெய்நிகர் சந்திப்பு



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கனடிய கிளையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற கடந்த 28-11-2021 ஞாயிற்றுக்கிழமையன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் அவர்களுடனான மெய்நிகர் சந்திப்பு ஆரம்பத்திலிருந்து இறுதி வரை எவ்வித இடையூறுமின்றி நடைபெற்றது.

அவரிடத்தில் கேட்கப்பட வேண்டிய கேள்விகள் எழுத்து மூலமாகப் பெறப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் அவர்களிடத்தில் கையளிக்கப்பட்டது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இந்தியாவுக்கு சட்டவிரோதமாக சென்று வருகின்றவர்களினால் மன்னாரில் எச்.ஐ.வி தொற்று அதிகரிக்கும் சாத்தியம் என்கிறார் விசேட வைத்திய அதிகாரி

இந்தியாவுக்கு சட்டவிரோதமாக கடல் வழியாக சென்று வருகின்றவர்கள், மற்றும் போதைப்பொருள் பாவனையினாலும் மன்னார் மாவட்டத்தில் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக பாலியல் நோய் மற்றும் எச்.ஐ.வி மருத்துவ விசேட வைத்திய அதிகாரி தக்சாயினி மகேந்திரநாதன் தெரிவித்தார்.

உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வியாழக்கிழமை (2) காலை நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவுக்கு சட்டவிரோதமாக கடல் வழியாக சென்று வருகின்றவர்கள், மற்றும் போதைப்பொருள் பாவனையினாலும் மன்னார் மாவட்டத்தில் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றது.

இதனை கட்டுப்படுத்த சுகாதார துறையினர் தமது தடுப்பு நடவடிக்கை வேலைத்திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த நடவடிக்கைகளுக்கு மக்களுடைய ஆதரவை எதிர் பார்த்துள்ளோம். மக்கள் இவ்விடயத்தில் விழிப்புடன் இருந்து எமது சுகாதார துறைக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை 11 எச்.ஐ.வி தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒரு தொற்றாளர் இவ்வருடம் 2021 ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்டுள்ளார்.என அவர் மேலும் தெரிவித்தார்.



உலக எயிட்ஸ் தினத்தையொட்டி மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் இன்றைய தினம் வியாழக்கிழமை (2) காலை 9.30 மணி தொடக்கம் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தலைமையில் விழிப்புணர்வு கருத்தரங்கு இடம் பெற்றது.

குறித்த கருத்தரங்கில் வைத்தியர்கள்,அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகள், பொலிஸார் , ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

# கார் விபத்தில் சிக்கியது; தமிழக சுகாதாரத்துறைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் காயமின்றி தப்பினார்



தமிழக அரசின் சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் சென்ற கார் மதுரை விமான நிலைய தடுப்புச் சுவரில் மோதி விபத்துக்குள்ளானது. இதில் ராதாகிருஷ்ணன் காயமின்றி உயிர் தப்பினார்.

மதுரை விமான நிலையத்தில் ஒமைக்ரான் கொரோனா வைரஸ் பரிசோதனை மைய ஆய்வு நிகழ்ச்சியில் வியாழக்கிழமை (2) கலந்துகொண்ட சுகாதாரத்துறைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களை சந்தித்துவிட்டு காரில் ஏறி திருச்சிக்கு அவசர அவசரமாகப் புறப்பட்டார்.

அப்போது விமானநிலையப் பகுதியில் சென்றுகொண்டிருந்த போது கார் எதிர்பாராத விதமாக அங்கிருந்து தடுப்புச் சுவரில் இடித்து விபத்து ஏற்பட்டது. காரின் முன்பகுதி சேதமடைந்த நிலையில் சுவரில் மோதி நின்றது.

அதிர்ச்சியடைந்த போலீசாரும், அவருடன் சென்ற மற்ற கார்களில் வந்தவர்களும் இறங்கி ஓடிச் சென்று பார்த்தனர்.

நல்லவேளையாக, சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணனுக்கு காயம் ஏற்படவில்லை. அவர் உடனடியாக காரை விட்டு இறங்கி ஓட்டுநருக்கு காயம் ஏற்பட்டுள்ளதா என விசாரித்தார்.

விபத்து ஏற்படுத்தியதற்காக, ஓட்டுநர், "மன்னித்துவிடுங்கள்" என்று சுகாதாரத்துறை செயலரிடம் வருத்தம் தெரிவித்தார்.

அதற்கு அவர், "பரவாயில்லை, கவலைப்படாதீங்க, உங்களுக்கு எதுவும் அடிபடவில்லையே" என்று நலம் விசாரித்துவிட்டு. காவல்துறையினரை அழைத்து ஓட்டுநருக்கு உதவச்சொன்னதுடன், "நான் வேறு காரில் செல்கிறேன், பதட்டப்படாமல் இருங்கள்" என ஓட்டுநருக்கு ஆறுதல் கூறிச் சென்றார்.

இதனையடுத்து சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் மாற்று வாகனத்தில் திருச்சிக்கு சாலை மார்க்கமாக புறப்பட்டுச் சென்றார்.

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
ALL DEBT SOLUTIONS CR PLAN
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.



எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577
4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்ட உலகளாவிய தமிழ்த் தேசிய அரசியல் பேரியகமே தற்போது தமிழ் மக்களுக்கான காலத்தின் தேவை

## மாவீரர் நாள் செய்தியில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன்

"தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்ட உலகளாவிய தமிழ்த் தேசிய அரசியல் பேரியகமே தற்போது தமிழ் மக்களுக்கான காலத்தின் தேவை. அத்துடன் இலங்கை அரசினது தமிழினவழிப்பு முயற்சியினைத் தடுத்து நிறுத்த, தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல தாயகத் தமிழ் மக்கள், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள், தமிழக மற்றும் உலகத் தமிழ் மக்கள் ஓரணியில் அணிவகுத்து நின்று செயற்படுதல் என்பதும் அவசியமானது". இவ்வாறு தனது இவ்வருடத்திற்கான மாவீரர் நாள் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன். தற்போதைய பல்துருவ உலக ஒழுங்கினை தமிழர்கள் எதிர்கொள்ளுதல், இந்தியாவினதும் ஈழத்தமிழர்களதும் நலன்கள் என பல்வேறு சமகால விடயங்களையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

*மேற்படி மாவீரர் நாள் செய்தியின் முழுவிபரம் : பின்வருமாறு*

இன்று தேசிய மாவீரர் நாள். தமிழீழ தேசத்தின் விடுதலைக்காய் தமது இனிய உயிர்களை ஈகம் செய்த நமது மாவீரர்களை நாம் எமது இதயக்கோயில்களில் வைத்துப் பூசிக்கும் நாள்.

தமிழீழ மக்களின் விடுதலை வேட்கையினை தம் நெஞ்சக்கூட்டினுள் சுமந்து, நெருப்பாறுகள் பலவற்றைக் கடந்து, போர்க்களத்தில் தம் பெரும் வீரத்தை நிலைநிறுத்தி, தமிழீழ தேசத்தின் இருப்பை, அத் தேசத்தின் சுதந்திரத்துக்கான துடிப்பை உலகப்பரப்பில் ஓங்கி முரசறைந்த நம் தேசப் புதல்வர்களின் திருநாள்.

தமிழீழ மக்கள் சிங்கள பௌத்த பேரினவாதப் பூதத்தின் பிடியிலிருந்து விடுபட்டு தேசிய சுதந்திரம் அடைந்தவர்களாக, சமூக அநீதி நீங்கி, சமூகநீதி நிலவுகின்ற, பெண்அடிமைத்தனம் அகன்ற, சாதி, சமய, பிரதேச, பொருளாதார சமத்துவம் நிலவுகின்ற சமூகமொன்றில் சமூகவிடுதலை அடைந்தவர்களாக, உன்னத வாழ்வை வாழ வேண்டும் என்ற உயரிய கனவுடன் நம் மண்ணில் விதையாய் வீழ்ந்த நம் வீரர்களின் பெருநாள்.

மாவீரர்கள் இலட்சிய உறுதி நிரம்பியவர்களாகக் களமாடினார்கள். தமது இலட்சியம் மனித அறத்தின் அடிப்பிடையிலானது என்பதில் மிகுந்த தெளிவோடு போர்க்களத்தில் எதிரியை எதிர்கொண்டார்கள்.

நாம் எந்த மக்களது மண்ணையும் ஆக்கிரமிக்கவில்லை என்ற அறத்துணிவோடு, தமிழீழ தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள அரச ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராடுவது தமது வரலாற்றுக்கடமை என்ற தற்துணிவோடு களமாடினார்கள்.

தமிழீழ விடுதலைக்கான போராட்டம் தமிழீழ மக்களது அரசியல் உரிமை என்பதிலும், தமிழர் தேசத்தின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்துக்கு அனைத்துலக சட்டங்களில் இடம் உண்டு என்பதிலும் தளராத மனவுறுதி கொண்டு விடுதலைப் போராளிகளாய் களத்தில் நின்றார்கள்.

மாவீரர்களின் போராட்டம் அறநெறி வழி நின்றதால் எப்போதும் அவர்களது உறுதியும் ஓர்மமும் வானளாவி நின்றன. ஆட்பலத்திலும், ஆயுத பலத்திலும் பல்மடங்கு பலத்தைக் கொண்டிருந்த சிங்கள அரசின் பெரும்படைகளைத் துவம்சம் செய்து போர்க்களத்தில் பெருபெற்றிகள் பலவற்றை நமது மாவீரர்கள் குவித்தனர்.

போர்க்களத்தில் தார்மீகபலம் பொருட்பலத்தை விட மூன்று மடங்கு வலியது என்ற நெப்போலியனின் கூற்றுக்கு உதாரணமாக போர்க்களத்தில் நம் மாவீரர்கள் களம் கண்டார்கள்.

தமக்கென சுதந்திரமும் இறைமையும் கொண்ட அரசை அமைக்கும் தேசத்தின் சுதந்திர வேட்கையைச் சுமந்தவர்களாய், தமிழீழத் தேசத்தின் பெரும் கனவுக்கு உயிர் கொடுத்தவர்களாய் நமது மாவீரர்கள் நம் கண்முன்னே வாழ்ந்தார்கள். நம் மண்ணில் விதையாய்ப் புதைந்தார்கள்.

நமது மாவீரர்களின் போராட்டம் ஆக்கிரமிப்புக்கானதல்ல. மாறாக சிங்கள பேரினவாத அரசின் இனவழிப்பில் இருந்து தமிழீழ மக்களைப் பாதுகாப்பதற்கானது என்பதும் தமிழர் தேசத்தில் சமூகநீதியும் சமத்துவமும் நிலைக்கும் சமூகமொன்றைப் படைக்க வேண்டும் என்பதும் எவ்வாறு உண்மையோ அதுபோலவே நமது மாவீரர்களின் போராட்டம் அனைத்துலக மக்களுக்கு எதிரானதுமல்ல. மாறாக உலகெங்கும் வாழும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களுடன் தோழமையுணர்வு கொண்டு, உலகின் முற்போக்கான மாற்றங்களுக்கு ஆதரவு வழங்கும் உலகப்பார்வையின் வழிப்பட்டு நின்றது.

தர்மத்தின் சக்கரத்தில் இந்த உலக அரசியல் ஒழுங்கு சுற்றவில்லை. மாறாக நலன்களின் அச்சுகளிலேயே சுற்றுகிறது என்ற உலக அரசியல் குறித்த புரிதலுடனும், புவிசார்அரசியல் குறித்த கவனத்துடனும்தான் மாவீரர்கள் தமது விடுதலைப்பயணத்தைத் தொடர்ந்துள்ளார்கள். வாய்ப்புகள் வரும்போதெல்லாம் அனைத்துலக அரசுகளின் அக்கறையினைப் புரிந்து கொண்டு போராட்டத்தினை நெறிப்படுத்தி நின்றனர்.

உலக அரசுகளின் நலன்களையும் தமிழீழ மக்களின் நலன்களையும் இணைய வைக்கக்கூடிய வாய்ப்புகளையும் வெளிகளையும் கண்டு கொள்ள மாவீரர்கள் தயாராக இருந்தனர். ஆனால் உலக அரசுகளின் நலன்களுக்காக தமிழீழ மக்களின் நலன்களைக் கைவிடவோ அல்லது சமரசம் செய்யவோ மாவீரர்கள் தயாராக இருக்கவில்லை.

இதனால், உலக அரசுகளின் நலன் சமன்பாட்டில் அவர்களின் "நீதி" சிறிலங்கா அரசின் பக்கம் சரிந்தது. நமது மாவீரர்களையும், விடுதலை இயக்கத்தையும் பயங்கரவாதியாய் முத்திரை குத்தி அந்த உலக சமூகம் மகிழ்ந்தது. அரசியல் அங்கீகாரத்தை மறுத்தது. சிறிலங்கா அரசுடன் இணைந்து கொடிய இனவழிப்புப் போரை நிகழ்த்தினார்கள்.

இப் போரை எதிர்கொண்டு இறுதிவரை இலட்சியத்துக்காகப் போராடி நம் தேசத்தின் புதல்வர்கள் தம்முயிர் ஈந்தார்கள். தமிழீழ தேசத்தின் வரலாறாய் நிமிர்ந்தார்கள். நமது மாவீரர்கள் தமது தேசத்துக்கு, நமது தேசத்தின் அரசியற்பாதைக்கு வழிகாட்டியாய் இன்று நிற்கிறார்கள்.

நமது தேசத்தின் காற்றினில் கலந்து, நமது மக்களின் மூச்சினில் இணைந்து நமது தேசத்தைக் காவல் காத்து நிற்கிறார்கள். மாவீரர்கள் நினைவு நம் தேசத்தில் இருக்கும்வரை நம் தேசம் என்றும் தலைகுனியாது. எதிரியின் சூழ்ச்சிக்குள் சிக்கிச் சிதைவுறாது. இந்த உறுதியுடன் நாம் நமது மாவீரர்களுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வோம்.

இன்றைய தமிழீழத் தேசிய மாவீரர்நாளில் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுடன் இணைந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும் தலை வணங்கி, தாழ் பணிந்து நமது மாவீரகளுக்குத் தனது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

அன்பான மக்களே, நாம் மாவீரர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்பவர்கள். மாவீரர்களின் வரலாற்றை, அவர்களது வீரத்தை, ஈகத்தை, தமிழீழ மண்ணின் மீதும், மக்களின் மீதும் அவர்கள் கொண்ட பற்றைப், பாசத்தை நேரில் பார்த்தவர்கள்.

மாவீரர்களும் நமது விடுதலை இயக்கமும் பெண் சமத்துவம் நிலவ எடுத்த முயற்சிகள் குறித்தும், சாதி, சமூக, பிரதேச வேறுபாடுகளால் சமூக அநீதி வெளிப்படுவதைத் தடுப்பதற்கும், இயற்கையைப் பாதுகாப்பதற்கும், பொது மக்கள் சுகாதாரத்தையும் கல்வியையும் வாழ்வையும் மேம்படுத்துவதற்கும் எடுத்த முயற்சிகளுக்குப் பங்காளிகளாக நின்று கண்கண்ட சாட்சிகளாக வாழ்ந்தவர்கள்.

நமது தேசியத்தலைவரால் நிறுவப்பட்ட தமிழீழ நடைமுறையரசு நெருக்கடிக் காலங்களில் எவ்வளவு சிறப்பாகச் செயற்பட்டது என்பதற்கு 2004 ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 26 ஆம் நாள் ஏற்பட்ட சுனாமிப் பேரனத்தத்தை நமது தமிழீழ தேசம் கையாண்டமுறை உலகுக்கு முன்னுதாரணமாக இருந்ததையும் நேரில் கண்டவர்கள்.

தமிழீழ நடைமுறையரசின் ஆளுகைக்குள் நமது மக்கள் இருந்த காலத்தில் நள்ளிரவிலும் நமது பெண்கள் சுதந்திரமாய் உலவித் திரிந்தார்கள். போதைப்பொருள் பாவனையோ, ஏனைய சமூகச் சீரழிவுகளோ இல்லாத வாழ்வு நம் தாயகத்தில் இருந்தது. நடைமுறையரசின் நிர்வாகத்தின் மீதும், தமிழீழ காவற்துறைமீதும் மக்கள் நம்பிக்கை வைத்திருந்தார்கள். இவையெல்லாம் நம் கண்முன்னாலே நிகழ்ந்தவைதான்.

தமிழீழ அரசின் ஆளுகைக்குள் நமது தாயகம் இப்போது இருந்திருக்குமேயானால் தற்போதய கொரோனாப் பெருந்தொற்றுக்காலத்தில், தொற்றைக் கட்டுப்படுத்தி மக்கள் வாழ்வை வளப்படுத்துவதில் உலகுக்கு முன்னுதாரணமாக நம் தமிழீழத் தாயகம் விளங்கியிருக்கும்.

அத்தகை சிறப்புகள் கொண்ட நமது விடுதலை இயக்கத்தை, மாவீரர்களைப் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கும், முத்திரை குத்தும் முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்பது நமக்குப் பெரும் வேதனையைத் தருகிறது.

சிறிலங்கா அரசு மட்டுமல்ல உலகின் வலுமிக்க சில அரசுகளும் இதனைச் செய்கின்றன. இது அவர்களின் அரசியல் வியூகம் என்பது நமக்குப் புரிந்தாலும் இவற்றை எதிர்க்க வேண்டியது மாவீரர்களுக்கு நாம் செய்ய வேண்டிய வணக்கத்தின் ஒரு பகுதியாகவே நாம் பார்க்கிறோம்.

நமது போராட்டத்தின் அரசியல் நியாயத்தை நிலைநிறுத்தவும், நமது எதிர்காலத் தலைமுறைக்கு வரலாறு சரியாகச் சென்றடையவும் நமது மாவீரர்கள் மீது சுமத்தப்படும் பயங்கரவாதிகள் என்ற முத்திரைக்கு எதிராக நாம் செயற்பட்டாக வேண்டும். இம் முத்திரை குத்தும் முயற்சிக்கு எதிராக நாம் அரசியல், சட்ட, இராஜதந்திர வழிகளில் சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டியது நமது இன்றைய கடமையாகும்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மீதான பயங்கரவாத முத்திரையையும் தடையையும் அகற்றக்கோரி சட்டப் போராட்டங்களைத் தொடர்ச்சியாக நடாத்துவதற்குத் தீர்மானித்து எடுத்துவரும் நடவடிக்கைகளை இப்பின்னணியில் தான் விளங்கிக் கொள்ள வேண்டும்.

சிலர் இது அரசியற் பிரச்சனை. இதனை சட்டவழிமுறை மூலமாக வெல்ல முடியாது என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றனர். இது அரசியற் பிரச்சனை என்ற புரிதல் எமக்குண்டு. சட்டவழிமுறைப் போராட்டத்தை அரசியல் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே நாம் நோக்குகிறோம். நமது மாவீரர்கள் பயங்கரவாதிகள் அல்ல என வாதிடுவதற்கும் நிறுவுவதற்கும் கருத்துருவாக்கம் செய்வதற்கும் நாம் முயல்கிறோம்.

எமது அடுத்த தலைமுறையினருக்கும் நமது மாவீரர்கள் பயங்கரவாதிகள் இல்லை என்பதனையும் நமது சட்டப்போராட்டங்கள் மூலமும், இப் போராட்டங்களின் ஊடாக நாம் முன்வைக்கும் கருத்துக்கள் மூலமும் வெளிப்படுத்தி வருகிறோம்.

நமது இச் சட்டப்போராட்டங்கள் தற்போது பிரித்தானியா, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் நடைபெற்று வருகின்றன. பிரித்தானியாவில் நாம் மேற்கொண்ட சட்டப் போராட்டம் விடுதலைப்புலிகள் அமைப்பைப் பயங்கரவாத அரசாகச் சித்தரித்த வழிமுறை தவறு என்பதை நன்கு வெளிப்படுத்தியிருந்தது. இது பிரித்தானிய அரசுக்கு அழுத்தத்தையும் கொடுத்தது. இருந்த போதும் பிரித்தானிய அரசு தடையை அகற்றாது மீண்டும் அதைக் கொண்டு வந்துள்ளது. நாமும் அதனை எதிர்த்து மீண்டும் எமது சட்டப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.



பிரித்தானிய அரசு இந்தத் தடவை விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்தபோது தமிழீழத் தேசியக்கொடி மீது தடையேதும் இல்லை என்பதனை வெளிப்படுத்தியதானது எமக்குப் புதிய வாய்ப்பையும் வெளியையும் வழங்கியுள்ளது. இவ்வாய்ப்பை கையிலெடுத்ததன் மூலம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவையை சிறப்பு அமர்வு ஒன்றுக்காக சென்ற மாதம் அக்டோபர் 24 ஆம் நாளன்று கூட்டியிருந்தோம். அவ் அமர்வில் இனி வருங்காலத்தில் ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி தமிழீழத் தேசியக் கொடி நாளாக விளங்கும் எனத் தீர்மானித்து அறிவித்திருந்தோம்.

முப்பத்தொரு ஆண்டுகட்கு முன்னர் 1990 நவம்பர் மாதம் 21 ஆம் திகதி வரலாற்றின் இரண்டாவது மாவீரர் நாளையொட்டி தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் தமிழீழத் தேசியக் கொடி அறிமுகம் செய்யப்பட்டு ஏற்றி வைக்கப்பட்டது எமது தேசியக் கொடியின் வரலாறு. முப்பத்தொரு ஆண்டு காலமாக தமிழீழ தேசத்தின் தேசியக் கொடியாக மேன்மையுடன் விளங்கிவரும் இக் கொடிக்குரிய சிறப்பை மீள ஒருமுறை வலுவாக நிறுவவேண்டுமென்ற உந்துதலோடு, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இவ் வாரத்தின் துவக்கத்தில் சென்ற ஞாயிறு நவம்பர் 21 ஆம் நாளன்று முதலாவது தமிழீழ தேசிய கொடிதினத்தை உலகறிய முரசறைந்து நிறுவியுள்ளது. உலகின் பல முனைகளில் பல தமிழ் அமைப்புக்களின் சிறப்பான பங்குபற்றலோடு எமது இனத்தின், எமது தேசத்தின் கொடிதினம் கொண்டாடப்பட்டது பெருமைக்குரியது.

தமிழீழ தேசத்தின் மக்கள் அனைவரையும் உலகப் பரப்பில் பிரதிபலிக்கும் இக் கொடி ஈழத் தமிழினத்தின் இறைமையினதும், சுயநிர்ணய உரிமையினதும் வெளிப்பாடு. இது அன்னியரின் ஆட்சியிலும் பௌத்த சிங்கள மேலாதிக்கத்திலும் இருந்து விடுதலை பெற்று மீள்வதற்காகப் போராடிவரும் ஈழத்தமிழினத்தின் அளப்பரிய உயிர்க் கொடைகளை நினைவுறுத்தும் கொடி.

எமது உன்னதமான மாவீரர்களது உயிர்த் துடிப்பாக விளங்கிய பெருமைக்குரிய இத் தேசியக் கொடியினை அதற்குரிய அனைத்து மரியாதைகளுடனும் ஈழத் தமிழர் அனைவரும் தம் மனதிலும், தங்கள் மனைகளிலும், தாம் கூடும் இடமெங்கும் ஏந்தி வணங்கி ஏற்றமுடன் பறக்க விட வேண்டுமென இம் மாவீரர்நாளில் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

பிரித்தானியாவில் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எதிராக மீண்டுமொருமுறை விதிக்கப்பட்டுள்ள தடையை எதிர்த்து கடந்த ஒக்டோபர் மாதம் 2 ஆம் நாள் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது புதிய சட்டப்போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறது.

பிரித்தானிய அரசின் முடிவு தவறானது என்பதனை பிரித்தானிய மக்களுக்கும் உலகுக்கும் வெளிப்படுத்த நாம் இந்தச் சட்டப்போராட்டத்தைப் பயன்படுத்துவோம். மாவீரர்கள் நமக்கு வழங்கியுள்ள தார்மீக பலத்தின் துணையுடன் இப் போராட்டத்தல் நாம் வெற்றி பெறுவோம் என நம்புவோம்.

***(தொடர்ச்சி _11_ பக்கம்)***

(_10_ பக்கத் தொடர்ச்சி)

## "தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்ட உலகளாவிய தமிழ்த் தேசிய அரச – ியல் பேரியகமே தற்போது தமிழ் மக்களுக்கான காலத்தின் தேவை

-----------------------------------------

இந்தியாவிலும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எதிரான தடையை எதிர்கொள்ளும் சட்ட நடவடிக்கைளை நாம் ஆரம்பித்திருக்கிறோம். இச் சட்ட நடவடிக்கையின் ஊடாகத் தமிழீழ மக்களின் தேசியப்பிரச்சினைக்குத் தீர்வாகத் தமிழீழத் தனியரசு அமைய வேண்டியதன் அவசியம் குறித்தும் கருத்துருவாக்கம் செய்ய முயல்கிறோம்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட அமைப்பு அல்ல எனவும் இவ் அமைப்பு இந்தியாவில் செயற்படுவதற்கோ அல்லது தமிழீழத் தனியரசு குறித்துப் பரப்புரை செய்வதற்கோ தடையேதும் இல்லை எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளமை இச் சட்ட நடவடிக்கைகளால் எட்டப்பட்ட நன்மைகளில் ஒன்றாக நாம் கருதுகிறோம்.

அமெரிக்காவிலும் விடுதலைப்புலிகள் அமைப்பு சார்ந்த தடைக்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கிறோம். தடைவிதிக்குரிய காலம் முடிவடைந்தமையால் விடுதலைப்புலிகள் அமைப்பின் மீதான அமெரிக்கத்தடை தற்போது முடிவுக்கு வந்துள்ளது. மீண்டும் புலிகள் அமைப்பைத் தடைப்பட்டியலில் சேர்க்கக்கூடாது என நாம் எமது வாதங்களை சட்டரீதியாக முன்வைத்திருக்கிறோம். இது குறித்த முடிவை அமெரிக்க அரசு இதுவரை எடுக்கவில்லை.

அரசுகள் விரும்புகின்ற நிலைப்பாடுகளுக்கு எல்லா நேரங்களிலும் நீதிமன்றங்கள் உடன்பட்டு விடுவதில்லை. இதுவும் எமக்கு வாய்ப்பாக அமையக்கூடிய சந்தர்ப்பங்களை அதிகரிக்கும்.

சுவிஸ் நாட்டில் எமது தேசியச் செயற்பாட்டாளர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில் விடுதலைப்புலிகள் அமைப்பைக் குற்றவியல் அமைப்பாக அறிவிக்கும்படி சுவிஸ் அரசதரப்பு வாதாடியபோதும் நீதிமன்றம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு நடைமுறை அரசாக இயங்கிய விடுதலைப்புலிகள் அமைப்பைக் குற்றவியல் அமைப்பாகக் கருதமுடியாது என சுவிஸ் நாட்டு நீதிமன்றம் தெரிவித்திருந்தமையும் எமக்குச் சாதகமான விடயமாகவே அமைந்தது.

விடுதலைப்புலிகள் அமைப்பு தான் இராணுவ இலக்காக கருதிய இலக்குகளைத் தவிர ஏனைய பொதுமக்கள் இலக்குகள் மீது தாக்குதல் நடாத்தியதில்லை. புலிகள் அமைப்புக்கு எதிராக தடைகள் விதித்துள்ள நாடுகள் மீதும் தாக்குதல் நடாத்தியதில்லை.

யுத்தகாலத்தில் தனது கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் ஒரு நடைமுறையரசினை அமைத்து, அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வை மேம்படுத்த அனைத்துவகையான நடவடிக்கைகளையும் எடுத்த விடுதலையமைப்பு அது.

இவ் அமைப்பையும் மாவீரர்களையும் பயங்கரவாதிகளாகச் சித்தரிப்பது உலகெங்கும் வாழும் தமிழ் மக்களை அவமதிப்பது போன்றது. சிங்களத்தின் தமிழின அழிப்புக்குத் துணைபோகும் செயலாக அமைவது. தமிழ் மக்களுக்கான அரசியல் ஜனநாயக வெளியினை சுருக்கும் ஒரு நடவடிக்கையாக அமைவது.

இனவழிப்புக்கு உள்ளாகும் ஒரு மக்கள்கூட்டத்தின் குரலாய், நீதிக்காகப் போராடும் மக்களின் குரலாய் எமது விடுதலை இயக்கத்தின் மீதும் மாவீர்கள் மீதும் சுமத்தப்பட்டிருக்கும் பயங்கரவா முத்திரையினை அகற்றுமாறு தடைவிதித்துள்ள உலக நாடுகளை இன்றைய மாவீரர்நாளில் நாம் கோருகிறோம்.

அன்பான மக்களே, இன்றைய காலகட்டத்தில் பழைய ஒற்றை மைய உலக ஒழுங்கு (unipolar world) சிதைவடையும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இரு துருவ உலக அரசியல் ஒழுங்கில் (bipolar world) இருந்து 1989 ஆம் ஆண்டின் பின்னர் அமெரிக்கா தலைமையிலான ஒற்றை மைய உலகஒழுங்கு உலகில் தோற்றுவிக்கப்பட்டது.

தற்போது சிதையத் தொடங்கிய இவ் ஒற்றை மைய உலக ஒழுங்கு, பல்துருவ உலக ஒழுங்காக வளர்ச்சி அடையும் (multipolar world structure) என்ற கணிப்பு அரசியல் அறிஞர்களிடம் உள்ளது. அதற்கான அறிகுறிகளும் உலக அரங்கில் தற்போது தெரிகின்றன. உக்கிரேயின் தேசத்தில் ரஷ்யாவினது தொடர்ச்சியான தலையீடு நேட்டோ (NATO) நாடுகள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி வருவதும், தென் சீனக் கடலிலும் தாய்வானிலும் சீன தேசம் தனது அதிகாரத்தைக் காட்டி வருவதும் சிரிய மத்திய தரை கடல் பிராந்தியத்தில் அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான கொதி நிலையும் இச் சிதைப்பின் வலிந்து நிகழ்த்தப்படும் சமகால உதாரணங்களாக உள்ளன.

பல்துருவ அரசியல் ஒழுங்கில் பல அதிகாரமையங்கள் இருக்கும். பல்வேறு வகையான கூட்டுக்களும் அணிகளும் இருக்கும். அமெரிக்காவுக்கு மாற்றாக ரஸ்யா, சீனா போன்ற நாடுகள் வலுவான கூட்டுக்களை அமைத்துக் கொள்ளும். இந்தியா, பிறேசில் போன்ற நாடுகளும் இவ் அணிகளில் முக்கிய இடத்தை வகிக்கும். அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையில் நல்லுறவு இருக்கும் அதேவேளை போட்டிகளும் வலுக்கும். இத்தகைய பல்மைய உலக ஒழுங்கில் முரண்பாடும் உறவுநிலையும் ஒன்றோடு ஒன்று கைகோர்த்துச் செயற்படும் தன்மை வெளிப்படும் என்றே அறிஞர் பலர் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய உலக ஒழுங்கின் வளரச்சியில் ஒவ்வொரு கூட்டும் உலகில் உள்ள அரசுகளைத் தம் பக்கம் இழுத்துக் கொள்ள முயலும். இது சிறிலங்கா போன்ற ஒடுக்குமுறை அரசுகளுக்கும் சில வாய்ப்புகளை வழங்கும் நிலையை உருவாக்கக் கூடியது.

இத்தயைதொரு சூழலைச் சிறிலங்கா அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயலும். தனது நலன்களையும் உலகின் சக்தி வாய்ந்த நாடுகளின் நலன்களையும் ஒன்றிணைய வைத்து தனது நிலையை வலுவாக்க முயலும். தாயகத்தில் தமிழ் மக்கள் மீதான இனஅழிப்பை விரைவுபடுத்த முயலும். இந்த தமிழினவழிப்பு முயற்சியினைத் தடுத்து நிறுத்த, தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல தாயகத் தமிழ் மக்கள், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள், தமிழக மற்றும் உலகத் தமிழ் மக்கள் ஓரணியில் அணிவகுத்து நின்று செயற்படுதல் அவசியமானது.

ஈழத் தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்தின் வளர்ச்சி தாயகத்தில் வாழும் மக்களது எழுச்சியில் பெரிதும் தங்கியுள்ளது. தேர்தல் அரசியல் காரணமாக தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட அரசியற்கட்சிகளுக்கிடையேயும், கட்சிகளுக்குள்ளும் முரண்பாடுகள் வளர்ந்துள்ள இன்றைய சூழலில் அரசியல் கட்சிகளால் தமிழ் தேசிய அரசியல் இயக்கத்தை ஒருமைப்பாட்டுடன் தலைமை தாங்கி முன்னெடுக்க முடியாதநிலை உள்ளது. இதனால் தேர்தல் அரசியலில் ஈடுபடாத, தமிழ்த் தேசிய அரசியல் பேரியக்கமொன்றை உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

இத் தேசிய இயக்கம் தமிழர் தேசத்தின் அரசியற்சக்திகள் அனைத்தையும் ஒன்றிணைத்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக, சிங்களத்தின் இனவழிப்புக்கு எதிரான அனைத்துலக பொறிமுறைக்கு ஆதரவாக, தமிழர் தாயகத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு மேம்பாட்டுக்காக எழுச்சியுடன் செயற்படவேண்டும்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியில் இயங்கும் தமிழ் அமைப்புகள் ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தமக்குள் ஒருங்கிணைந்து கொள்ள வேண்டியது காலத்தின் அவசிய தேவை. தாயக மக்களதும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களதும் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து, தமிழக மற்றும் உலகத் தமிழ்த் தலைவர்களுடன் இணைந்து ஈழத் தமிழ் மக்களுக்கான தேசிய மற்றும் சமூக விடுதலைக்கான மூலோபாயங்கள், தந்திரோபாயங்கள் வகுக்கப்பட்டு அதன் அடிப்படையிலான செயற்திட்டம் வகுக்கப்பட வேண்டும்: இவ்வாறு வகுக்கப்படும் திட்டத்தை வழிநடாத்த தாயகம் புலம் பெயர் தமிழர் தமிழக மற்றும் உலகத் தமிழரைக்கொண்டு ஒரு வழிகாட்டிக்குழு அமைக்கப்பட வேண்டும்.

இவ்வகையான ஒரு கட்டமைப்பு உருவாக்கப் படுமானால் அது மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையினை அளிக்கும். தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டம் வீச்சுப் பெறும்.

இதனைச் சாத்தியப்படுத்துவது மிகவும் நிதானத்துடனும் சகிப்புத்தன்மையுடனும் பொறுப்பணர்வுடனும் செயற்படுவதன் மூலம்தான் நிகழக் கூடியது. மாவீரர்களை நாம் வணங்கி நிற்கும் இன்றைய நாளில் இத்தகையதொரு ஏற்பாட்டை நமக்குள் ஏற்படுத்திக் கொள்வது குறித்து நாம் அனைவரும் சிந்திப்பது பயன் தரக்கூடியது.

அன்பான மக்களே, நமது தமிழீழத் தாயகத்தில் தமிழர் தேசத்தின் இருப்பை வலுவாக்குவது மிகவும் அவசியமானது. தமிழர் தேசத்தினை வலுப்படுத்தல் அரசியற்செயற்பாட்டாளர்களுக்கு மட்டும் உரியதொரு பணியல்ல. தமிழ் மக்கள் ஒவ்வொருவர் முன்னும் உள்ள பணியேதான் இது.

தமிழர் தாயகத்தின் கல்விநிலையை உயர்த்துவது, தமிழ் மக்களது சுகாதாரநிலையை மேம்படச் செய்வது, தமிழர் தாயகத்தின் இயற்கையைப் பாதுகாப்பது, சமூக சமத்துவத்தைப் பேணுவது, பண்பாட்டு வாழ்வை மேம்பாடடையச் செய்வது, தொழில் முயற்சிகளை உருவாக்கி தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவது, விவசாய, கடற்தொழில் மற்றும் தொழில்துறைகள் வளர்ச்சியடைய உழைப்பது, சிந்தனைத்திறனை அதிகரிப்பது, மாவீரர் மேன்மையினைப் போற்றுவது, தமிழ் மொழியின், பண்பாட்டின், தமிழ் மரபுரிமையின் சிறப்பைக் கொண்டாடுவது - இவை போன்று நாம் நாளாந்த வாழ்வில் மக்களாகச் செய்யும் பணிகள் தமிழர் தேசத்தினை வளப்படுத்தும் என்பதனை நாம் மறந்து போய் விடக்கூடாது.

நாம் மிகவும் கூர்மையான சிந்தனையுடன் செயற்படுவதும், சிறிலங்கா அரசின் சூழ்ச்சிகளை தொடர்ச்சியாக அம்பலப்படுத்துவதும் அவசியமானது. இந்திய நாட்டினையும் இந்திய மக்களையும் நாம் நட்புச் சக்திகளாக வரித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நட்புச் சக்திகளிடம் எமது எதிர்பார்ப்பை நாம் உரத்துச் சொல்வதும் அவசியமானதாகும். தமிழ் மக்களின் தேசிய அரசியல் பிரச்சினைக்கு 13 வது திருத்தச் சட்டம் என்பது காலாவதியாகிப்போனதொன்று என்பதனைச் சொல்வதற்கு நாம் தயங்கக்கூடாது.

இலங்கை இந்திய ஒப்பந்தமும் 13 ஆம் திருத்தச் சட்டமும் ஒன்றல்ல என்பதனை தாயகத் தவைர்கள் இந்திய அரசிடம் வலியுறுத்திச் சொல்ல வேண்டும். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கடப்பாடு எழுத்தில் உள்ளதும், இணைப்பில் உள்ளவை குறித்ததும் மட்டுமன்றி தமிழர் தலைமைக்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் இணைந்ததுதான் என்பது வலியுறுத்தப்பட வேண்டும். 13 ஆம் திருத்தச்சட்டம் அரைகுறையாகக் கொண்டுவரப்பட்டு பின்னர் அதில் மாற்றங்கள் செய்யப்பட்டு குற்றுயிராக்கப்பட்டு ஒரு நடைப்பிணமாகத்தான் தற்போது இருந்து கொண்டிருக்கிறது.

சிறிலங்கா கலாச்சார ஒருமைப்பாடு என்ற மாயை மூலமும், இந்தியாவே முதல் (India first) என்ற கூற்றின் மூலமும் தன்னை இந்தியாவின் நட்பு நாடாக காட்டிக்கொள்ள முனைகிறது. சிறிலங்காவில் சீனா நிலைகொள்ளாமல் இருப்பது இந்தியா சிறிலங்காவில் நிலைகொண்டிருப்பதிலும் பார்க்க, இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு உகந்ததாக அமையும். சிறிலங்கா இந்தியாவின் உண்மையான நட்பு நாடே அல்ல. இந்த உண்மை இந்தியாவுக்கும் தெரியும். இலங்கைத்தீவின் அரசதிகாரம் சிங்கள தேசத்திடம் இருப்பதனால் இந்தியா தனது நலன்களை உறுதி செய்து கொள்வதற்காக சிறிலங்கா அரசுடன் உறவாடுகிறது.

இங்கு நாம் ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியா ஈழத் தமிழ் மக்கள் விடயத்தில் அக்கறை செலுத்துவது எம் மக்கள் மீது கொண்ட கருணையால் மட்டுமல்ல. இலங்கைத்தீவில் இந்தியா தனது நலன்களை அடைந்து கொள்வதற்கான கருவிகளகவும் நாம் பயன்படுகிறோம். ஈழத் தாயகத்தில் தமிழ் மக்கள் வலுமிக்க மக்களாக இல்லாது விட்டால் காலப்போக்கில் சிறிலங்கா மீது செல்வாக்கு செலுத்த தனக்குரிய வாய்ப்பினை இந்தியா இழந்து விடும். இந்த உண்மையினயும் நாம் வெளிப்படையாகவே இந்தியாவுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இதனால்தான் தமிழின அழிப்பை விரைவுபடுத்தி ஈழத் தமிழ் மக்களை வலுவிழந்த மக்களாக மாற்றுவதற்கு சிங்களம் பகீரத முயற்சி எடுத்து வருகிறது என்பதனையும் நாம் புரிந்துகொண்டு அதனை வெளிப்படுத்தவும் வேண்டும்.

இதனால் நாம் வலுவுள்ள மக்களாக நிலைத்து வாழ்வதற்குரிய நிலைப்பாட்டை நாம் இந்தியாவிடம் வலியுறுத்த வேண்டும். இது எமது நலன் சார்ந்தது மட்டுமல்ல, இந்திய நலன்சார்ந்த விடயமும்கூட.

ஈழத் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய தேசிய இனம் என்ற அங்கீகாரத்தையும், இலங்கைத்தீவின் வடக்கு கிழக்குப் பகுதிகள் தமிழ் மக்களது பாரம்பரியத் தாயகம் என்பதனையும் இந்திய அரசு பகிரங்கமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை தாயக அரசியல் தலைவர்கள் முன்வைக்க வேண்டும். இது ஏதேவொரு வகையில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிழிவாக வெளிப்பட்ட விடயங்கள்தான். ஆனால் நடைமுறையில் இதற்குரிய இடம் கிடைக்கவில்லை.

இந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் ஈழத் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்த வேண்டும். மறுபுறத்தில் புலம் பெயர்ந்த மக்களின் பிரதிநிதிகளாகிய நாம் சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழ அரசினை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்திச் செயற்படுவோம்.

இவ்விரு நிலைப்பாடுகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக நாம் உணரத் தேவையில்லை. தாயகத் தமிழ் கட்சிகள் திம்பு அடிப்படையினை வெளிப்படையாகப் பேசி, அரசியல் தீர்வுக்கு ஆதாரமாக அவை கொள்ளப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியுடன் செயற்பட, அதேவேளை அதன் அடுத்த பரிமாணத்துடன் புலம் பெயர்ந்து வாழும் மக்கள் செயற்பட எமக்கான அரசியல் வெளி பெரிதாகும்.

தேசியத் தலைவர் அவர்கள் தனது 2008 ஆம் ஆண்டு இறுதி மாவீரர்நாள் செய்தியில் இந்தியாவுடன் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு ஏற்பட்ட முரண்பாட்டுக்கான காரணத்தையும், இவ்வுறவு சீர்ப்படுத்தப்பட வேண்டிய தேவையினையும் வெளிப்படுத்தியிருந்தார். தேசியத் தலவரது அச் செய்தி இன்றும் காலப்பொருத்தம் உள்ளதாகவே இருக்கிறது.

மாவீரர்களை நாம் வணங்கி நிற்கும் இன்றையநாளில் தமிழ்நாட்டு மக்களதும் இந்திய மக்களதும் ஆதரவோடு நாம் எவ்வாறு தமிழீழத் தனியரசுக்கான இந்திய அங்கீகாரத்தை வென்றெடுக்க முடியும் என்பது குறித்து நாம் மேலும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

அன்பாக மக்களே, சிறிலங்கா அரசு தற்போது பல்வகையான நெருக்கடிகளுக்கு உள்ளானாலும் தமிழர் தேசத்தின் மீதான இனவழிப்பு இலக்கில் உறுதியாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஈழத் தமிழ் மக்கள் மாவீரர்களுக்கு தமது வணக்கத்தைச் செலுத்துவதற்கு தடைகள் விதிப்பதும், தமிழர் தாயகத்தை சிதைக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதும், தமிழ்த் தேசியச் சிந்தனையை மழுங்கடிக்கச் செய்வதும், இராணுவத்தை தமிழர் பகுதிகளில் நிலை கொள்ள வைத்து, தனது உளவு நிரலைத் தமிழர் தாயகப்பகுதிகளில் விரிவுபடுத்தி இராணுவ ஆட்சியினை நடாத்துவதுமாக தமிழர் வாழ்வைச் சிதைக்க முயல்கிறது.

இதனை போர்க்குணத்துடன் எதிர்த்து நின்று பௌத்த சிங்கள மேலாதிக்கத்துக்கு அடிபணியாத வீரமிக்க மக்களாக நாம் வாழ்வதே வரலாற்றில் தமிழ் மக்களின் இருப்பை உறுதி செய்யும். நாம் எவருக்கும் அடிபணிந்தவர்கள் அல்ல என்பதனையும் அதுபோல எமக்கும் எவரும் அடிபணிவதனையும் நாம் வெறுக்கவே செய்வோம் என்பதனையும் நாம் உலகுக்கு உரத்துச் சொல்லும் உன்னத மனிதர்களாக வாழ வேண்டும்.


உலகெங்கும் ஒடுக்குமுறைக்குட்பட்டிருக்கும் அனைத்து மக்களும் விடுதலை அடைய வேண்டும் என்று எண்ணும் உலகத் தோழமை கொண்ட மக்களாக நாம் வாழ வேண்டும். நமது மாவீரர்களின் கனவை நனவாக்கி, அவர்கள் கனவு கண்ட சுதந்திரமும் பாதுகாப்பும் கௌரவமும், சமத்துவமும் சமூகநீதியும் நிலவும் தமிழீழத் திருநாட்டில் நாம் வாழ வேண்டியதை எமது நியதியாக்குவோம்.

இவற்றையெல்லாம் நாம் எட்டுவதற்கு நமது மாவீரர்கள் நம்மை வழிநடாத்துவார்கள். இதயம் கனத்த நினைவுகளுடன் நாம் நமது மாவீரர்களை வணங்கி நமது பணிகளைத் தொடர்வோம் என உறுதி பூணுவோமாக!

நாம் எல்லோரும் சுதந்திரமாக எமது மண்ணில் வாழவேண்டும் என்ற உன்னத இலட்சியத்துக்காக வீரத்துடன் பெருங்களமாடி அறநெறி போற்றி தமிழர் மாண்பை உலகறியவைத்த மாவீரரை எம் தேசத்துக்கென ஈந்தளித்த அற்புதமான அனைத்து பெற்றோரையும் இவ்விடத்தில் சிரம் தாழ்த்தி வணங்கி எனது உரையினை நிறைவு செய்கிறேன்.

# வெடிக்கும் சிலிண்டர்கள் ?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



சமையல் எரிவாயு கொள்கலன் அதாவது காஸ் சிலிண்டர் வெடிப்பது என்பது தமிழ்ப் பத்திரிகைகளுக்கு புதியது அல்ல. இந்தியாவில் சீதனக் கொடுமை காரணமாக பெண்களைக் கொன்றுவிட்டு அப்பெண் சிலிண்டர் வெடித்து இறந்துவிட்டார் என்று கூறி பெண்ணின் கணவரும் அவருடைய உறவினர்களும் தப்ப முயற்சிக்கும் சம்பவங்கள் தொடர்பில் பல செய்திகளை நாம் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு கொலையை சமையலறை விபத்தாக உருமறைப்பு செய்வது என்பது குடும்ப வன்முறைகளில் மிகக் குரூரமான ஒன்று. சீதனக் கொடுமை தமிழகத்தோடு ஒப்பிடுகையில் ஈழத்தில் குறைவு. குறிப்பாக சீதனப்படுகொலை என்று வர்ணிக்கத்தக்க காஸ் சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் நமது நாட்டில் அனேகமாக இல்லை. எனினும் தமிழ் வாசகர்கள் படித்த சிலிண்டர் வெடிப்பு செய்திகளில் கணிசமானவை சீதனப் படுகொலையோடு தொடர்புடையவை. இது முதலாவது.

இரண்டாவதாக சிலிண்டர் வெடிப்பு பற்றிய செய்திகள் போர் காலகட்டத்தில் வெளிவந்தன. விடுதலைப் புலிகள் இயக்கம் எரிவாயு கொள்கலன்களில் வெடி மருந்தை அடைத்து படையினரின் வாகனத் தொடரணி மீது தாக்குதல்களை நடத்தினார்கள். சிலிண்டர் குண்டு தாக்குதல் என்பது ஈழப்போரில் படைத்தரப்புக்கு அதிகம் சேதத்தை விளைவித்து ஒன்றாகக் காணப்பட்டது. ஈழத்தமிழர்கள் சிலிண்டர் வெடிப்பை பற்றி கேள்விப்பட்ட இரண்டாவது வகைச் செய்தி இது.

மூன்றாவது வகைch செய்திகள் இப்பொழுது நாட்டில் நடப்பவைகள் பற்றியவை. இது ஈழத்தமிழர்களை விடவும் சிங்கள மக்களைத்தான் அதிகம் பாதித்த ஒன்றாக காணப்படுகிறது. அண்மைகாலமாக சமையலறை சிலிண்டர்கள் அல்லது எரிவாயு அடுப்புக்கள் வெடிப்பது பற்றிய செய்திகள் அதிகரித்த அளவில் வரத் தொடங்கியிருக்கின்றன.சிலிண்டர்கள் அரிதாகக் கிடைக்கும் ஒரு காலகட்டத்தில் கஷ்டப்பட்டு வாங்கிய அந்த சிலிண்டர் ஒரு குசினிக் குண்டாக மாறலாம் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் அதிக பீதியை உருவாக்கியுள்ளது.

இக்கட்டுரை எழுதப்படும் இந்நாள் வரையிலும் ஒரே ஒரு பெண்தான் கொல்லப்பட்டிருக்கிறார். சிலர் காயப்பட்டிருக்கிறார்கள். தமிழ் பகுதிகளில் மொத்தம் மூன்று சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் இச்சம்பவங்களில் மீதான கற்பனைகளும் வதந்திகளும் அதிகரித்த அளவில் மக்களை பீதிக்கு உள்ளாக்கியுள்ளன. குறிப்பாக அத்தியாவசிய பொருட்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாடு, விலை உயர்வு என்பவற்றின் பின்னணியில் அரசாங்கத்தின் மீது அதிகரித்துவரும் அதிருப்திகளின் விளைவாக சிலிண்டர் வெடிப்புச் செய்திகள் அதிகரித்த கவனத்தைப் பெறுகின்றன அல்லது பீதியூட்டுபவைகளாக மாறிவிட்டன.

இதில் பணக்காரர்கள் உடனடியாக இலத்திரனியல் அடுப்பு அல்லது மின் அடுப்புக்கு மாறிவிட்டார்கள். நவீன வீடுகளில் புகை போக்கிகள் கிடையாது. அது ஒரு பிரச்சினை. நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தவர்கள் மண்ணெண்ணை குக்கருக்கு மாறிவிட்டார்கள். சிலர் சிலிண்டரை சமையலறைக்கு வெளியே வைத்து, சுவரில் துவாரமிட்டு விநியோகக் குழாயை உள்ளே கொண்டு வருகிறார்கள். கிராமப்புறங்களில் வீட்டுக்கு வெளியே ஒரு தட்டியை இறக்கி சமைக்கலாம். தாராளமாக விறகில் சமைக்கலாம். எனினும் காஸ் குக்கருக்கு பழகிய ஒரு வாழ்க்கை சோதனைக்கு உள்ளாகும் பொழுது அரசாங்கத்துக்கு எதிராக பொது மக்களின் அதிருப்தியும் கோபமும் அதிகரித்து வருகின்றன. சமையலறை ஒரு ஆபத்தான இடமாக மாறிவிட்டது.

இது தொடர்பாக ஆராய குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைக்கு அழைப்பு விடுக்குமாறு சஜித் பிரேமதாச கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அரசாங்கம் வீட்டு உபயோகத்திற்காக 18லீட்டர் கலப்பின எரிவாயு உருளையை அறிமுகப்படுத்திய பின்னர் இந்த நிகழ்வுகள் தொடங்கின என்றும், இது மக்களை ஏமாற்றி பாரிய இலாபத்தை ஈட்டும் அரசின் தந்திரம் என்றும் அவர் கூறினார்.

"சமையல் எரிவாயுவின் விலை உயர்வே தற்போது வெடிப்பு சம்பவம் முக்கிய பிரச்சினையாக மாறக் காரணம்" என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார். கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். 2015 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 233 சமையல் எரிவாயு சிலிண்டர் தொடர்பான வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தனியார் நிறுவனத்தை மேற்கோளிட்டு இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். எரிவாயு தொடர்பில் பரிசோதனை செய்வதற்கு நாட்டில் சட்டப்பூர்வமான இரசாயன ஆய்வுக்கூடம் இல்லை. 1960 களில் இருந்து இந்நிலைமையே காணப்படுகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

அதே சமயம், நாட்டில் தற்போது விநியோகிக்கப்படுகின்ற சமையல் எரிவாயு சிலிண்டர்களில் வாயு அழுத்தத்தினை அதிகரிப்பதற்கான கலப்படம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் காரணமாக சிலிண்டர் மூடப்பட்டிருந்தாலும் கூட எரிவாயு கசிவு ஏற்படுவதாகவும், இதுவே வெடிப்பு சம்பவங்களுக்குக் காரணம் என்றும் பொது மக்கள் உரிமைகளை பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளார். சமையல் எரிவாயு சிலிண்டரை மூடிய பின்னர் அதன் குழாயை தண்ணீர் கொண்ட ஒரு பாத்திரத்தில் இடும் போது அதில் வாயுக் குமிழிகள் உண்டாவதை காண்பித்துள்ளதுடன், சிலிண்டர் மூடப்பட்டிருக்கின்ற போதிலும் வாயு வெளியேறுகின்றமையே இதற்கான காரணம் என்றும் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். சிலிண்டரில் வாயு அழுத்தம் அதிகரித்துள்ளமையால், பாவனையில் இல்லாத போதிலும் கூட வாயு கசிவதோடு, தொடர்ச்சியாக இடம்பெறும் வாயு கசிவினால் வெடிப்பு சம்பவங்கள் இடம்பெறுவதாக அசேல சம்பத் சுட்டிக்காட்டியுள்ளார்.

"எரிவாயு கலவையில் ஏற்பட்ட மாற்றங்களே அனைத்து வெடிப்புச் சம்பவங்களுக்கும் காரணம்" என்று தான் உறுதியாக நம்புவதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின்முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துசான் குணவர்த்தன டெய்லி மிரருக்கு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்..."ஜூன் 18 ஆம் திகதி லிட்ரோ எரிவாயு ஒழுங்குபடுத்துனருக்கு அப்பாற்பட்டதா? எனவும் ஓகஸ்ட் 25 ஆம் திகதி இலங்கையின் சமையல் எரிவாயு சந்தையில் குழுறல்கள் என்ற தலைப்பிலும் டெய்லி மிரர் பிரத்தியேக செய்திகளை வெளியிட்டிருந்தது. ஏப்ரல் மாதத்திலிருந்தே தெரியவராத காரணங்களிற்காக சிலிண்டரின் எரிவாயுக் கலவையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. லிட்ரோ நிறுவனமும் லாஃப் நிறுவனமும் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் அனுமதியின்றி இந்த மாற்றங்களை மேற்கொண்டுள்ளன. கடந்த ஏப்ரலில் இருந்து லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் சிலிண்டரின் வாயுக் கலவையை பியூட்டன் 80 : புரொபேன் 20 என்ற நிலையிலிருந்து முறையே பியூட்டன் புரொபேன் 50க்கு 50 என மாற்றியுள்ளன.வால்வுகளில் கசிவுகள் ஏற்படுகின்றன என வெளியான முறைப்பாடுகளுக்கு இதுவே காரணம்......இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் சித்திக சேனரட்ண ஆகியோருடன் நானும் ஏனைய அதிகாரிகளும் இலங்கை நுகர்வோர் அதிகார சபையில் இந்த வருடம் ஜூன் மாதத்தில் நடத்திய சந்திப்பின் பின்னர் நான் இந்த ஆபத்துக்கள் குறித்து எதிர்வு கூறினேன்......இலங்கை ஒரு வெப்பமண்டல நாடு என்பதால் எல்பி வாயுவில் குறைந்தளவு புரொபேனும் அதிகளவு பியூட்டனும் காணப்பட வேண்டும்" என்றும் துசான் குணவர்த்தன கூறியுள்ளார்.

வாயு கலவையை 50% புரொப்பேன் (Propane) மற்றும் 50% பியூட்டேன் (Butane) என மாற்றினால் வாயுக்கசிவு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என மொறட்டுவ பல்கலைக்கழக நிபுணர்கள் தெரிவித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். அண்மைய எரிவாயு தொடர்பான வெடிப்புகளுக்கு இதுவே வெளிப்படையாகக் காரணம் என்றுமவர் கடந்த புதன்கிழமை கூறியுள்ளார்.

மேற்படி குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளித்த லிட்ரோ எரிவாயு நிறுவனம் "பொது மக்களிடையே பீதியை ஏற்படுத்தும் வகையில் இதுபோன்ற கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. கிட்டத்தட்ட ஆறு மில்லியன் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தற்போது புழக்கத்தில் உள்ளன..... சமையல் எரிவாயுவின் தரம் தொடர்பில் தற்போது சமூக ஊடகங்களில் பரவிவரும் அறிக்கைகள் பொய்யானவை மற்றும் அடிப்படையற்றவை" என்றும் தெரிவித்தது. நிறுவனத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையூறு விளைவிப்பதற்காக சில பிரிவினர் எரிவாயுவின் தரம் தொடர்பில் தவறான தகவல்களை பரப்ப முயற்சிப்பதாக அந்நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளது. அதேசமயம் எரிவாயு சிலிண்டர்களின் கலவையில் சில மாற்றங்களைச் செய்து கடந்த ஜூலை மாதம் பல மாதிரிகளை அறிமுகப்படுத்தியதாக லிட்ரோ காஸ் நிறுவனத்தின் தொழிற்சாலை முகாமையாளர் திரு.ஐ.விஜேயரத்ன தொலைக்காட்சி சேவையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.எனினும்,சோதனை வெற்றியளிக்காததால் சிலிண்டர்கள் சந்தையில் இருந்து அகற்றப்பட்டதாக அவர் தெரிவித்தார். மேலும், சந்தையில் உள்ள எரிவாயு சிலிண்டர்களின் கலவையானது நிலையான தரநிலைகளுக்கு ஏற்ப இருப்பதாகவும் அவர் கூறினார். நாட்டில் ஏற்பட்டுள்ள அண்மைய சமையல் எரிவாயு தொடர்பான வெடிப்புகளுக்கு தரம் குறைந்த குழாய்கள், அடுப்புகள் மற்றும் பாவனையாளர்களின் அலட்சியப் பாவனையினால் ஏற்பட்டுள்ளதாக லிட்ரோ காஸ் லங்கா கடந்த புதன்கிழமை வெளியிட்ட விளம்பரம் ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

யார் எதைக்கூறினும் இது தொடர்பில் மக்களுடைய அச்சத்தை அகற்றும் செய்திகள் எதையும் அரசாங்கத்தால் கொடுக்க முடியாதிருக்கிறது என்பதே உண்மை. இந்த விடயத்தில் மட்டுமல்ல பல விடயங்களிலும் நாட்டு மக்களுக்கு அரசாங்கத்தால் நம்பிக்கையூட்ட முடியவில்லை என்பதே உண்மை. அரசாங்கத்துக்கு சோதனை மேல் சோதனை. கோத்தாபய ஆட்சிக்கு வந்தபொழுது பெருந்தொற்று நோயும் கூடவேவந்தது. ஏற்கனவே ஈஸ்டர் குண்டு வெடிப்பினால் நொந்து போயிருந்த பொருளாதாரம் மேலும் நொந்து நூலாகியது. போதாக்குறைக்கு தலை நகரை அண்டிய பகுதியில் கடலில் ரசாயன பொருட்களோடு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு கப்பல் தீப்பிடித்து எரிந்தது. அதனால் நாட்டுக்குள் வந்த கொஞ்சநஞ்ச உல்லாசப் பயணிகளும் கடல்லுணவை தவிர்க்க தொடங்கினார்கள். பெருந் தொற்று நோய் காரணமாக நாட்டுக்கு வருமானம் ஈட்டித்தரும் துறைகள் யாவும் படுத்துவிட்டன. இதனால் நாட்டின் அன்னிய செலவாணி கையிருப்பு மேலும் குறைய தொடங்கியது. அரசாங்கம் ஒரு தொகுதி பொருட்களின் இறக்குமதியை நிறுத்தியது. நிதியமைச்சராக பசில் ராஜபக்சவை நியமித்தது. வெளியுறவு அமைச்சராக ஜி எல் பீரிசை நியமித்தது. அமெரிக்காவுக்கு புதிய தூதுவராக மகிந்த சமரசிங்கவை அனுப்பியது. மேற்கு நாடுகளுக்கு விருப்பமானவர்களை இவ்வாறு பதவிகளுக்கு நியமித்ததன்மூலம் அரசாங்கம் ஏதாவது மாற்றத்தைக் கொண்டுவர முயற்சித்தது.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை படையினரிடம் கொடுத்து அந்த ஒரு விடயத்தில் மட்டும் அரசாங்கம் வேகமாக வெற்றிபெற்றது. ஆனால் தடுப்பூசியேற்றும் நடவடிக்கைகளை குறிப்பிடத்தக்க அளவுக்கு பூர்த்தி செய்தபின் நாட்டை திறந்தபோது ஏற்கனவே போராடத் தொடங்கியிருந்த தொழிற்சங்கங்கள் முழுவேகத்தோடு போராடத் தொடங்கின. அரசாங்கத்தால் தொழிற்சங்கங்களை ராணுவத்தை வைத்து அடக்க முடியவில்லை. போதாக்குறைக்கு பங்காளி கட்சிகளும் அரசாங்கத்துக்கு எதிராக திரும்பத் தொடங்கின. ஆட்சிக்கு உள்ளேயும் நெருக்கடி ஆட்சிக்கு வெளியேயும் நெருக்கடி. முடிவில் அண்மை வாரங்களில் அரசாங்கம் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பணிந்தது. அதற்குப் பின்னரும் ஏனைய தொழிற்சங்கங்கள் போராடப் போவதாக அச்சுறுத்துகின்றன. இரண்டு தொழிற்சங்கங்கள் பெற்ற வெற்றி ஏனைய போராடும் தரப்புக்களுக்கு உற்சாகமளிப்பதாக அமைந்துவிட்டது. இப்படிப்பட்டதொரு பின்னணியில்தான் காஸ் சிலிண்டர்கள் வெடிக்கத் தொடங்கின. ராஜபக்சக்கள் யுத்த வெற்றியை வணக்கத்திற்குரியதாக மாற்றி நினைவுத் தூபிகளைக் கட்டிக்கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் அரசாங்கத்தின் தோல்விகள் அடுப்படிவரை வந்துவிட்டன.

# யாழ்ப்பாணத்தில் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் நில அளவைக்கு வந்தவரை விரட்டியடித்த மக்கள்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



கடற்படை புலனாய்வாளர்கள், இராணுவ புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்களையும் தாண்டி செவ்வாய்கிழமை (30) மாதகல் கிழக்கு ஜே-150 கிராம சேவையாளர் பிரிவில் குசுமான்துறை பிரதேசத்திலுள்ள அக்போ இரண்டு கடற்படை தளத்திற்கான காணி சுவிகரிப்பு முயற்சி மக்களின் கூட்டு முயற்சியால் முறியடிக்கப்பட்டது.

குறித்த பிரதேசத்தில் காணி அளவீடு செய்ய வந்த நில அளவைத் திணைக்களத்தையும் குறித்த காணிக்குள் இறங்க விடாமல் குறித்த காணி உரிமையாளர்கள் பொதுமக்கள் அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்டோர் எதிர்ப்பை தமது வெளிப்படுத்தினர்.

குறித்த பிரதேசத்தில் இருந்து நில அளவை திணைக்களத்தினர் விலகி இருந்தாலும் சற்று தூரத்தில் அவர்கள் தமது வாகனத்தை நிறுத்தி இருந்தமையை காணமுடிந்தது. இதனையடுத்து குறித்த இடத்திற்குச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் இன்று காணி அளவிடமுடியாத நாங்கள் அதை செய்ய விடமாட்டோம் என்று தெரிவித்ததை அடுத்து அவர்கள் குறித்த பகுதியில் இருந்து விலகினர்.

இதனை தொடர்ந்து குறித்த காணி பிரதேசத்திற்கு சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். அரை மணி நேரத்தின் பின் குறித்த காணி அளவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற செய்தியினை அறிந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் குறித்த இடத்தில் அமர்ந்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

குறித்த எதிர்ப்பு நடவடிக்கையின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ஈஸ்வரபாதம் சரவணபவன், வலி தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் ஜெபனேசன் ,வலிதென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான ஜிப்ரிக்கோ, அனுஷன், ரமணன், சிவனேஸ்வரி, அச்சுதபாயன் ராஜினி உள்ளிட்டோரும் வலிவடக்கு பிரதேச சபை உறுப்பினர்களான சஜீவன், கலையமுதன் வேலணை பிரதேச சபைஉறுப்பினரான நாவலன் வலிமேற்கு பிரதேச சபை உறுப்பினரான ஜெயந்தன் மற்றும் தமிழ்த் தேசியம் சார்ந்த பிரமுகர்களும் பொதுமக்களும் காணி உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.





# நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை கூடுகின்றது

## தமிழர் தேசத்தின் மீதான சிங்கள அரசின் நில அபகரிப்பு உட்பட பல முக்கியமான விடயங்கள் இரு நாள் அமர்வுகளின் போது கலந்தாய்வு செய்யப்படவுள்ளது

"தேசமாய் சிந்தித்து நாட்டினை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வு இடம்பெற இருக்கின்றது.

எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்கள் இடம்பெற இருக்கின்ற இந்த அமர்வின் தொடக்க நிகழ்வில் சர்வதேச பிரதிநிதிகள் பலரும் பங்கெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழர் தேசத்தின் மீதான சிங்கள அரசின் ஆக்கிரிமிப்பு, நில அபகரிப்பு உட்பட பல முக்கியமான விடயங்கள் இரு நாள் அமர்வுகளின் போது கலந்தாய்வு செய்யப்படவுள்ளது.

இணைவழியே இடம்பெற இருக்கின்ற இந்த அமர்வுகளில் பல நாடுகளில் இருந்து மேற்சபை உறுப்பினர்கள், அரசவை உறுப்பினர்கள், வள அறிஞர்கள் என பலரும் பங்கெடுப்பர். ஒவ்வொரு அமைச்சுக்களும் தமது செயற்பாட்டு அறிக்கைகளை சமர்பிப்பர். கருத்துரை, கேள்வி-பதில் நேரடி அமர்வுக்குரிய பண்புகளுடன் இணைவழி அமர்வு இடம்பெறும்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் வலைக்காட்சி www.tgte.tv ஊடாக அமர்வின் முக்கிய அம்சங்களை நேரடியாக பொதுமக்கள் காணலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தலவாக்கலையிலும் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவம்





தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வோக்கர்ஸ் பகுதி மேல் கொத்மலை புதிய வீட்டுத் தொகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் புதன்கிழமை காலை 10:30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவத்தின் போது எவருக்கும் பாதிப்பு இல்லை எனவும் வீட்டின் சமையலறைக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தேநீர் தயாரிப்பதற்காக அடுப்பை பற்ற வைத்த பின் குறித்த நபர் வெளியில் சென்ற பின்னர் இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தலவாக்கலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இருவர் வைத்தியசாலையில் அனுமதி



புத்தளம் எரிவாயு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் காயமடைந்து இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நைனாமடம பகுதியிலுள்ள எரிவாயு ஆலை ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் இருவர் காயமடைந்து நீர்கொழும்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் 40 வயது மற்றும் 24 வயதுடைய இருவர் காயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். குறித்த சம்பவம் நேற்று (30) மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் ஆபத்தான நிலையில் காணப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மோட்டார் வாகனங்களுக்காக பயன்படுத்தப்படும் குளிரூட்டிகளை புதுப்பிக்கும் இடத்தில் இந்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்த இடத்தில் வேலை செய்து கொண்டிருந்த போதே வெடிப்பு ஏற்பட்டுள்ளமையால் குறித்த இருவருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது.

குளிரூட்டலுக்கு பயன்படுத்தப்படும் 5 அடி உயர நைட்ரஜன் அடங்கிய சிலிண்டரில் பொருத்தப்பட்டிருந்த குழாய் இவ்வாறு வெடித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# மன்னாரில் பூஸ்டர் தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கை முன்னெடுப்பு



மன்னார் மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாதம் நிறைவடைந்த வர்களுக்கான 3 வது பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில் புதன்கிழமை (1) காலை தொடக்கம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கொரோனா தடுப்பூசியின் இரண்டு டொஸ் களை பெற்ற மூத்த பிரஜைகளுக்கான மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் பணிகளே மேற்படி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில் இராணுவத்தினர், விமானப்படையினர் மற்றும் சுகாதார ஊழியர்களின் ஒத்துழைப்புடன் அதிகளவானவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தடுப்பூசிகளை பெற்று வருகின்றனர்.



எதிர் வரும் வாரம் வரை குறித்த தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# இனவழிப்புக்காக சர்வதேச நீதிமன்றத்தை தமிழர்கள் நாடலாமா?

- தீபச்செல்வன்

**இ**லங்கையில் நடந்தது இனப்படுகொலை என்றும் அதற்குச் சர்வதேச விசாரணையே தீர்வு என்றும் தமிழ் மக்கள் கோரி வருகிறார்கள். இனப்படுகொலைப் போர் நடந்து பன்னிரண்டு வருடங்கள் ஆகின்ற நிலையில் நீதிக்கான நகர்வுகள் மந்த கதியிலேயே இருக்கிறது. போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களோ நீதியை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இனவழிப்பினால் பாதிக்கப்பட்ட மக்கள் நீதிக்காக போராடியே மாண்டு வருகின்றனர். ஐக்கிய நாடுகள் சபை அமைப்பின் நடவடிக்கைகளோ தன்னரசியலுக்கு உட்பட்ட நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த விதத்திலும் நம்பிக்கை அளிக்கும்படியாக இல்லை. இந்த நிலையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை தமிழர்கள் எப்படி நெருங்குவது?

## இலங்கையில் இனவழிப்பு

இலங்கையில் ஈழத் தமிழ் மக்கள் வரலாறு முழுவதும் இனவழிப்பு செய்யப்பட்டு வருகின்றனர். இலங்கை 1948இல் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இலங்கை சுதந்திரத்திற்காக ஈழத் தமிழர்கள் பாடுபட்டனர். ஐக்கிய இலங்கையையும் விரும்பியதும் ஈழத் தமிழர்களே. இல்லையேல் அன்றே இலங்கை இரண்டு நாடுகள் ஆகியிருக்கும். ஐக்கிய இலங்கையை விரும்பிய ஈழத் தமிழர்களுக்கு சிங்கள அரசு இனவழிப்பை பரிசளித்தது. அஇதன் முதல் கட்டமாக தனிச்சிங்களச் சட்டம் 1956இல் கொண்டுவரப்பட்டது.

கலவரங்கள் என்ற பெயரில் 1956 முதல் இனவழிப்புக்கள் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டன. 1983 இல் பெருமெடுப்பில் இனவழிப்பு மேற்கொள்ளப்பட்டது. ஒரு இனத்தின் மக்கள் இலக்கு வைக்கப்பட்டு வகை தொகையாய் அழிக்கப்படுவதையே இனவழிப்பு என்று பன்னாட்டு வரைவிலக்கணங்கள் கூறுகின்றன. இனவழிப்புக்கு எதிராக ஈழத் தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்திப் போராடிய நிலையில், அந்தப் போராட்டத்திற்கு எதிரான கொடும் ஆயுதமாகவும் இனவழிப்பே பயன்படுத்தப்பட்டது. இலங்கை அரசு தமிழ் மக்களை அழிக்க முப்பதாண்டுகளாக பல்வேறு பெயர்களில் போரை அறிவித்து மேற்கொண்டமையும் இனவழிப்பின் பாற்பட்டதேயாகும்.

## இனப்படுகொலைத் தீர்மானங்கள்

இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்றும் அதற்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்றும் 2014இல் தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இலங்கைக்கு வெளியில் ஒரு ஜனநயாக சபை ஒன்றில் முதன் முதலில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் என்ற வகையில் இது முக்கியத்துவமானது. இனவழிப்பால் அடக்கி ஒடுக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களின் மனங்களில் எரிந்த கோரிக்கையை தொப்புள்கொடி உறவான தமிழகம் ஒன்றுபட்டு நிறைவேற்றியதுடன் அதனை இந்திய அரசுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் தெரியப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

அது மாத்திரமின்றி இனப்படுகொலை நடந்த மண்ணிலேயே இனப்படுகொலை குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். வடக்கு மாகாண சபையில் 2014ஆம் ஆண்டில் முன்னாள் முதல்வர் நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன் தலைமையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இலங்கையில் வரலாறு முழுவதும் இனப்படுகொலை நடந்தது என்றும் முள்ளிவாய்க்காலில் அது உச்சம் கொண்டது என்றும் அதற்கு பன்னாட்டு விசாரணை தேவை என்றும் வலியுறுத்தும் அந்தத் தீர்மானம் ஸ்ரீலங்கா அரசுக்கு பெரும் அழுத்தமாக அமைந்ததுடன் ஐக்கிய நாடுகள் சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டமையும் இங்கே நினைவு கொள்ள வேண்டியது.

## சர்வதேசத்தின் பாராமுகம்

ஶ்ரீலங்காவில் நடந்த இனப்படுகொலையை ஐக்கிய நாடுகள் சபை அணுகி வருகின்ற தன்மை மிகவும் விமர்சனத்திற்கு உரியதாகவும். குறிப்பாக அதன் பொதுச் செயலாளர்கள் தமது பதவிக் காலம் முடிந்தவுடன் இலங்கையில் பெருமளவான மக்கள் கொல்லப்பட்டமையை ஏற்பதும் நடந்தது இனப்படுகொலை என்று ஒப்புக்கொள்ள முயல்வதும் காலம் தாழ்த்தி நிகழ்கிறது. போர் நடக்கும் போது செயலாளராக இருந்த பான்கீமூன் பின்னாளில் இலங்கையில் பாரியளவு மக்கள் அழிக்கப்படுவதை தடுக்க முடியாமல் போய்விட்டது என்று கூறியிருந்தார். அதனை போர் நடக்கும்போதல்லவா அவர் கூற வேண்டும்.

அதேபோன்று இலங்கை அரசின் இனவழிப்பு ஒடுக்குமுறைகளை பற்றி இன்று பேசுகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை பதவியில் இருந்த போது உறுதியான அறிக்கைகளையோ, தீர்மானங்களையோ எடுக்கவில்லை. இது சர்வதேச சமூகத்தின் பாராமுகத்தின் வெளிப்பாடாகும். இலங்கையில் நடந்த இனப்படுகொலையை இன்னமும் இனப்படுகொலையாக ஏற்காமல் மனித உரிமை மீறல் என்றும் போர்க்குற்றம் என்றும் மதிப்பிடுவதன் வாயிலாக இலங்கையில் தொடர்ந்து இனவழிப்பு ஊக்குவிக்கப்படுகிறது.

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வழக்கு

இந்த நிலையில்தான், ஶ்ரீலங்காவின் இன்றைய அரச தலைவரும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் இனவழிப்புப் போரில் பெரும் முனைப்புடன் செயற்பட்ட அப்போதைய படைப்பிரிவு தளபதியும் இன்றைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான மேஜர் காமல் குணரத்தின உள்ளிட்ட ஶ்ரீலங்கா இராணுவ அதிகாரிகள்மீது இனவழிப்பு செயற்பாடுகளின் பாதிக்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேற பிரித்தானியாவில் உள்ள புலம்பெயர் தமிழர்கள் 200பேர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுநருடன் விண்ணப்பம் செய்துள்ள நிகழ்வானது தமிழர்களின் நீதியை வெல்லும் பயணத்தை வலுப்படுத்தும் தொடக்கப்புள்ளியாக கருதப்படுகிறது.

குளோபல் றைற்ஸ் கொம்பிளைன்ஸ் எல்எல்பி அமைப்பின் நிர்வாக இயக்குனரும் சட்ட வல்லுனரும் மாகாராணி சட்டத்தரணியுமான வேய்னி ஜோர்டாஸ் அவர்கள் இந்த வழக்கின் சட்டத்தரணியாக களமிறங்கியுள்ளமை இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகின்ற செயற்பாடாகும். ஐாவின் பரிந்துரையின்றி குற்றவியல் நீதிமன்றத்திற்கு செல்ல முடியர்த என்ற மூடுமந்திரத்தை உரோம் 15ஆவது சட்டச் சரத்தை கொண்டு ரோஹிங்ய மக்களுக்கான நீதியை பெற்றுக் கொடுக்கும் வழக்கில் இவர் முன்னிலையாகி வென்றிருந்தார். இந்த நிலையில்தான் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் நீதி வேண்டிய வழக்கை சட்ட வல்லுனர் வேய்னி ஜோர்டாஸ் கையில் எடுத்துள்ளார்.

## நீதியே காயங்களை ஆற்றும்

இதுபோன்ற முயற்சிகளை தமிழ் தலைவர்களும் ஈழ விடுதலையை வலியுறுத்துகின்ற அமைப்புகளும் புலம்பெயர் தேச அமைப்புக்களும் முன்னெடுக்க வேண்டும். மேற்போந்த வழக்குகள் வாயிலாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஶ்ரீலங்காவின் குற்றங்கள் தொடர்பான வாதங்களுக்கும் கவனங்களுக்கும் இடம் ஏற்படுகின்றது. இதுபோன்ற அணுகுமுறைகள் ஐநாவின் அணுகுமுறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தலாம். உண்மையில் ஐக்கிய நாடுகள் சபை தனது பாதுகாப்பு சபையின் மூலமாக உலகில் இன ரீதியாக ஒடுக்கப்படுகின்ற மக்களை பாதுகாக்க வேண்டும்.

இலங்கை அரசால் உயிர்களை இழந்து அங்கங்களை இழந்து இலங்கை அரசிடம் உறவுகளை காணாமல் போகக் கொடுத்து எஞ்சி வாழ்கின்ற மக்கள் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் இன்னமும் உயிர் வாழ்கின்றனர். இனப்படுகொலைக்கான நீதி ஒன்றே தமிழர்கள் பட்டிருக்கும் காயங்களுக்கான மருந்து. அதுவே இலங்கையில் பல தசாப்தங்களாக புரையோடியுள்ள இனப்பிரச்சினைக்கும் தீர்வைத் தரும். அதற்காக ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டிய தமிழர்கள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை அணுகும் முயற்சிகளில் ஆக்கபூர்வமாக ஈடுபட வேண்டும்.




# தொழிற்சங்கம் அமைத்தால் ஊழியர்களை பணி நீக்கும் ஏடிஜிக்கு எதிராக போராட்டம்

**தொ**ழிற்சங்கம் அமைப்பதில் ஈடுபட்ட காரணத்திற்காக பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை மீண்டும் பணியில் அமர்த்துமாறு, நிறுவன அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்து, கம்பஹா மாவட்டத்தில் உள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.




டிசம்பர் 1, 2021 புதன்கிழமை மாலை வத்துபிட்டிவல முதலீட்டு ஊக்குவிப்பு வலய நுழைவாயிலுக்கு முன்னால், தொழிலாளர் ஐக்கிய கூட்டமைப்புடன் இணைந்த ஒரு தொழிற்சங்கமான வணிக மற்றும் தொழில்துறை தொழிலாளர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, கடும் மழையையும் பொருட்படுத்தாது பல முன்னணி தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்திருந்தன. ஆடைத் தொழில், தோட்டத் துறை, சுற்றுலா மற்றும் உள்நாட்டு சேவை உள்ளிட்ட துறைகள் தொடர்பில் ஆராய்வதற்காக சமகால அடிமைத்தனம் தொடர்பான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபகாட்டோ தற்போது இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிலையிலேயே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

வணிக மற்றும் தொழில்துறை தொழிலாளர்கள் சங்கம் ஓகஸ்ட் 20, 2021 அன்று ஏ.டி.ஜி கையுறை தயாரிப்பு தனியார் நிறுவனத்தில் புதிய கிளையை நிறுவியது. வணிக மற்றும் தொழில்துறை தொழிலாளர் சங்கம், கிளை ஒன்றை அமைப்பதாக அறிவித்து நான்கு நாட்களுக்குள் நிறுவனம் 16 உறுப்பினர்களை பணி நீக்கியது.

ஏ.டி.ஜி கையுறை தயாரிப்பு தனியார் நிறுவனமானது, சர்வதேச சந்தைக்கு கையுறைகளை ஏற்றுமதி செய்யும் முன்னணி நிறுவனமாகும்.

தொழிற்சங்கங்களை நாசப்படுத்துதல் மற்றும் ஊழியர்களை பணிநீக்கம் செய்தல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளை குறித்த நிறுவனம் தொடர்ந்து மேற்கொண்டு வருவதகாவும், ஆனால் எந்தவொரு சட்டரீதியான விளைவுகளையும் அது எதிர்கொள்ளவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏ.டி.ஜியால் பணிநீக்கம் செய்யப்பட்ட அனைத்து ஊழியர்களும் தொற்று நோய் அச்சுறுத்தலுக்கு மத்தியில் கடந்த மூன்று மாதங்களாக வாழ்க்கையில் பல்வேறு போராட்டங்களை சந்திக்க நேரிட்டுள்ளதாக தொழிற்சங்கம் கூறுகிறது.

தொழிற்சங்கங்களை அழிப்பதில் ஏ.டி.ஜி ஒரு மோசமான நிறுவனம் என வர்ணித்த தொழிற்சங்கத் தலைவர்கள், 2018 இல், குறித்த நிறுவனம் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு ஆதரவாக செயற்பட்ட மற்றொரு தொழிற்சாலையில் சுமார் 300 தொழிலாளர்களை பணிநீக்கம் செய்ததாக வலியுறுத்தியுள்ளது.




நியாயமற்ற முறையில் பணிநீக்கம் செய்யப்பட்ட 16 ஊழியர்களை மீண்டும் பணியில் இணைக்க தலையிடுமாறு கோரி இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் டி.டபிள்யூ. சுபசிங்கவின் கையொப்பத்துடன், 22 தொழிற்சங்கங்கள் இணைந்து 2021 செப்டெம்பர் 21 ஆம் திகதி தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன. எனினும் அதற்கு வழங்கப்பட்ட பதில் குறித்து எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

பணிநீக்கம் செய்யப்பட்ட தொழிற்சங்க செயற்பாட்டாளர்களை மீண்டும் பணியில் இணைக்கும் வரை அப்பகுதியில் போராட்டம் தொடரும் என தொழிற்சங்க தலைவர்கள் தெரிவித்துள்ளனர். ஏடிஜி நிறுவனத்திற்கு எதிரான போராட்டத்திற்கு அண்மித்த கிராம மக்களும் ஆதரவு அளித்து வருவதாக பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். நிட்டம்புவ, வத்துபிட்டிவல, ரன்பொகுணகம, தித்தவெல்மங்க, மீவித்திகம்மன, மதுவெகெதர மற்றும் ஹொரகொல்ல பிரதேச மக்களும் எதிர்ப்புப் பதாகைகளை ஏந்தியவாறு, ஏ.டி.ஜிற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டும் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். தொழிற்சங்க உரிமை மீறலுக்கு எதிரான முதலீட்டு ஊக்குவிப்பு வலைய அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க, தொழில் அமைச்சர் உடனடியாக தலையீடு செய்யாவிடின், சர்வதேச தொழிலாளர் அமைப்பில் (ILO) முறைப்பாடு செய்யப்படும் என, போராட்டத்திற்கு ஆதரவளித்த தொழிற்சங்க தலைவர்கள் அரசாங்கத்தை எச்சரித்துள்ளதாக தொழிலாளர் ஐக்கிய கூட்டமைப்பின் (UNF) தலைவர் லீனஸ் ஜயதிலக கூறியுள்ளார்.

பொதுச் சொத்துக்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு நிலையத்துடன் இணைந்த தொழிற்சங்கங்கள் வத்துபிட்டிவலவில் உள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலைய நுழைவாயிலுக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தனியார் துறை ஊழியர் நிலையம், ஏ.டி.ஜி கட்டுநாயக்க நிறுவனங்களுக்கு இடையிலான ஊழியர் சங்க செயற்பாட்டாளர்கள், மகளிர் அமைப்புக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

***- புகைப்படம் அமில உடகெதர***



# 'Reconciliation Army' Denies Attack on Journalist but Pictures Speak Otherwise

**- Siva Parameswaran Senior International journalist (London)**

A simple photo for a suggestive shot by a journalist has become a serious eyesore for the Sri Lankan Military.

The Sri Lanka Army has now issued a veiled threat to journalists accusing them of attempting to tarnish their image; which is contrary to what happened in front of the public. As the video of the brutally beaten and bleeding journalist went into circulation, international condemnation started to pour in, the denial has come from the army.

Viswalingam Viswachandran, a freelance journalist for Tamil media was allegedly beaten up by soldiers on 27 November. He told colleagues who rushed to the scene that he was punished for filming the name board "Mullivaikkal". He pointed out the assailants who were caught on camera hurriedly walking away.



In a fairy tale statement, the army in trying to cover up the attack, instead accused - whom they described as 'so-called journalists' of seeking asylum and intended on tarnishing the image of the security forces in the North and East.

"Various Social Media platforms, largely with vested interests, along with some print media in the country published unverified, exaggerated and factually incorrect accounts of the said incident, in which the soldier in question had queried from the 'aggrieved' journalist as to why he was filming the location with troops on duty including the Mullivaikkal name board on the roadside".

However, the army has not given any explanation as to what's wrong in just filming a name board, when any number of its images and videos are anyhow available on the internet.

**International Condemnation**

Media watchdog Reporters Sans Frontiers (RSF) tweeted condemning the attack.

"V.Viswachandran, a journalist of Tamil origin, was simply taking a photo of billboard in the locality of Mullaivaikkal when he was attacked and beaten by four soldiers with a club covered in barbed wire".

Describing reports of the incident as a "carefully-orchestrated and maliciously planned plot", the army script blames the victim for the injuries.

"As the soldier began reaching the said journalist, he had begun withdrawing backwards while filming, but suddenly struck against his own motorbike that had remained parked a few meters away from the name board and fell over the same place where a barbed wire fence of a land also stood by the side of a muddy spot and found his hands 'bruised' ".



**Fairy tale and screenplay statement**

Eyewitnesses say this statement is no less than a fairy tale and a well written screenplay. The army says its findings comes after what it calls a comprehensive investigation by Sri Lanka Army and its Military Police. The Sri Lankan Military denying atrocities perpetrated by them is not new.

When the first-ever 'war crimes' video emerged, it was denied and described as fake, despite a Presidential commission recommending a probe, which ultimately never happened, and when a confidential medical investigation report was cited in another instance.

In the eyes of both the internal and international community, the credibility of the statements by the Army is very low. Strangely enough, it cites a Medico-Legal Examination Report, which is apparently confidential.

"On prima facie evidence, the Police took the three soldiers on duty at the location into custody and bailed them afterwards pending further investigations. In the meantime, the Medico-Legal Examination Report of the Mullaitivu District Hospital, issued on Sunday (28), hours before the hospital discharge of the said journalist, confirmed that he had been treated only for 'abrasion' and 'contusion' during his hospital stay, quite contrary to the alleged "barbaric attack with a palm stick wrapped in barbed wire" as concocted stories that went on viral alleged and called for international investigations".

The Sri Lankan Military denying credible evidence of atrocities committed is not new. When the first-ever war crimes war crimes video discovered- by Sri Lanka focus human rights website, Journalists for Democracy in Sri Lanka, JDS- showing uniform clad armed men shooting down a naked group of men it was denied as fake, despite a presidential commission recommending a probe, which ultimately never happened. The UN has confirmed the authenticity of the footage broadcast by UK based Channel 4.



In the eyes of both the internal and international community, the credibility of the statements by the Army is very low.

**Image issue**

The army claims that the incident was "poised to tarnish the image of the Security Forces in the North and East since gestures of healthy reconciliation and sound goodwill spirits between the people and the security forces in the past have impressively grown".

But, while the army speaks of sound goodwill spirits and healthy reconciliation the ground situation in the most war-affected district of Mullaitivu is that it has the largest concentration of army camps and check posts in the country.

Eyewitness say the army has scripted a screenplay press release. They say the press release is short of truth and ridiculous.

The Sri Lanka army along with the other security forces has continued to attack journalists and activists-in particular the North and East as they continue to speak about reconciliation.

# ஊடகவியலாளர்கள் மீது தொடரும் தாக்குதல்களுக்கு கடும் கண்டனம்

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)**

ஐ நா உயரதிகாரி ஒருவர் இலங்கையில் நிலவும் பணிச்சூழல்கள் குறித்த கலந்துரையாடல்களை மேற்கொண்டு வரும் நிலையில், வடக்கே, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊடகவியலாளர் ஒருவர் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார்.

சமகால அடிமைத்துவம், அதன் காரணங்கள் மற்றும் தீர்வுகள் குறித்த ஐ நா சிறப்பு பிரதிநிதி டொமோயா ஒபோகாடா இலங்கைக்கு வந்துள்ளார். பல்துறையிலுள்ள தொழிலாளர்களின் நிலையை அவர் ஆராய்கிறார்.

இந்நிலைலியிலேயே ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று விவரிக்கப்படும் ஊடகத்துறை மற்றும் செய்தியாளர்களின் மீதான அரசின் கடும்போக்கு நிலைப்பாடு, சகிப்புத்தன்மையற்ற நிலை மற்றும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் இடம்பெறுகின்றன.

நீத்தார் நினைவு நாளைப் போற்றுதல் தமிழ் மரபு மற்றும் கலாச்சாரத்தில் நீங்கா இடம்பெற்றுள்ள நிலையில், உள்நாட்டுப் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து அவர்களின் ஆத்மா சாந்தியடைய விளக்கேற்றும் நிகழ்வைத் தடுக்க ஒவ்வொரு ஆண்டு அரசு வலிந்து நடவடிக்கைகளை எடுத்து தமிழர்களின் மனங்களைப் புண்படுத்துகிறது.

அவ்வகையில் முல்லைத்தீவு ஊடக அமையத்தின் பொருளாளரும் சுயாதீன ஊடகவியலாளருமான விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் அவர்கள் இன்று 27.11.21 காலை முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் "முள்ளிவாய்க்கால்" எனும் அடையாளப் பெயர்பலகையினை செய்தி அறிக்கையிடலுக்காக ஒளிப்படம் எடுத்துக்கொண்டிருந்த வேளை இராணுவத்தினர் ஊடக பணிக்கு இடையூறு விளைவித்ததுடன் ஊடகவியலாளர் மீது முட்கம்பி சுற்றப்பட்ட பனை மட்டையால் மிக மூர்க்கதனமாக தாக்குல் மேற்கொண்டு சித்திரவதை புரிந்துள்ளனர்.

இதனால் வயிற்று புகுதி மற்றும் கை,கால் உள்ளிட்ட பகுதிகளில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். அத்துடன் ஊடகவியலாளரின் உடமைகளான ஒளிப்படக்கருவி, தொலைபேசி ஆகியவை படையினரால் பறிக்கப்பட்டு அவரது வாகனமும் சேதமாக்கப்பட்டுள்ளது.

பல சவால்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் மிக துணிச்சலுடன் ஊடகபணியினை ஆற்றிவந்த வி.விஸ்வச்சந்திரன் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டமையானது மிக மோசமான மனிதஉரிமை மீறல் என்பதுடன் ஊடக சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தலாகும் என்று முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்கள் அமையம் கண்டனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாக நாடெங்கும், குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதியில் பக்கசார்பற்ற வகையில் செய்தியகை சேகரிக்கச் செல்லும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து அதிகரிக்கின்றன. இது குறித்த முறைப்பாடுகள் பொலிஸ் மற்றும் ஜனாதிபதி வரையிலான உயர்மட்த்திற்கு அளிக்கப்பட்ட போதும், இதுவரை காத்திரமான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை. அரசின் இந்த நிலைப்பாடே, எந்த குற்றத்தையும் செய்துவிட்டு அதிலிருந்து தப்பிவிடலாம் என்கிற எண்ணபோக்கை ஏற்படுத்தியுள்ளது. முறைப்பாடு அளிக்கப்படும் போது அது விசாரிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் நடைபெற்றிருக்காது.

கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் நடவடிக்கையை இலங்கை அரசு திட்டமிட்டுச் செய்கிறது என்று செய்தியாளர்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர். இது ஊடக செயற்பாட்டிற்கு அடிக்கட்ட சாவு மணி என்று அவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் 44 தமிழ் ஊடகவியலாளர் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் கொலைசெய்யப்பட்டும் அதற்கான நீதிகள் தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்ற நிலையில் மீண்டும் தொடர்ச்சியாக தமிழ் இன அடையாளத்தினை கொண்ட ஊடகவியலாளர்கள் என்ற காரணத்தினால் தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களும் துன்புறுத்தல்களும், சித்திரவதைகளும் தமிழ் ஊடக பரப்பினை சேர்ந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வருவது கவலைக்குரிய விடையமாகும் என்று முல்லைத்தீவு ஊடக அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

ஊடக சுதந்திரத்தில் அக்கறையுள்ளவர்கள் மற்றும் சர்வதேச சமூகம் இதில் தலையிட்டு ஊடகம் மற்றும் ஊடகவியலாளர்களின் உரிமையை காத்திட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்திள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# முல்லைத்தீவில் தொடர் மழையால் 110 குடும்பங்கள் பாதிப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் கனமழை காரணமாக 110 குடும்பங்களைச் சேர்ந்த 326 நபர்கள் பாதிப்பு.

இதனடிப்படையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 23 அங்கத்தவர்களும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் 43 குடும்பங்களைச் சேர்ந்த 122 அங்கத்தவர்களும், வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 18 நபர்களும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 17 நபர்களும்,மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 46 குடும்பங்களை சேர்ந்த 142 அங்கத்தவர்களும் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 அங்கத்தவர்களுமாக 110 குடும்பங்களைச் சேர்ந்த 326 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தற்போதைய காலநிலை தொடர்பான புள்ளிவிபர தகவல்கள் குறிப்பிடுகின்றன.



# இலங்கையின் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச இந்தியாவிற்கு விஜயம்

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கையின் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச இந்தியா சென்றடைந்துள்ளார்.

இந்திய விஜயத்தின் போது நிதி அமைச்சர் இந்திய பிரதமர் உட்பட முக்கிய தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வார்.

அந்நிய செலாவணி கையிருப்பு நெருக்கடியால் இலங்கை எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளிற்கு தீர்வை காண்பதற்காக இந்தியாவிடமிருந்து கடன்கோருவதே நிதியமைச்சர் பசில் ராஜபக்சவின் இந்திய விஜயத்தின் நோக்கம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவிற்கான தனது விஜயத்தின் போது பசில் ராஜபக்ச இந்திய பிரதமர் மற்றும் நிதியமைச்சர் ஆகியோரைச் சந்திப்பதற்கு விருப்பம் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் அதிகளவு முதலீட்டை ஊக்குவிப்பதே நிதியமைச்சரின் விஜயத்தின் நோக்கம் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தாலும் அந்நிய செலாவணி கையிருப்பு பிரச்சினையால் இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்காக கடனை கோருவதே அவரது விஜயத்தின் நோக்கம் என சிரேஸ்ட அதிகாரிகள் தெரிவித்தனர் என மோர்னிங் குறிப்பிட்டுள்ளது.



# இலங்கையில் ஹெல்மட்டுடன் களமிறங்கிய சமையலில் ஈடுபடும் பெண்கள்



நாடு முழுவதும் பல பகுதிகளில் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்நிலையில் வீட்டில் இருக்கும் பெண்கள் தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதற்கமைய தற்போது பாதுகாப்பிற்காக பெண்கள் ஹெல்மட் பயன்படுத்த பழகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஹெல்மட் பயன்படுத்திய நிலையில் சமையலில் ஈடுபடும் பெண்களின் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

அதற்கமைய பலப்பிட்டிய வத்துகெதர பிரதேச வீடு ஒன்றில் பெண்ணொருவர் ஹெல்மட் பயன்படுத்தும் புகைப்படம் ஒன்று வெளியாகி உள்ளது.

# தலைமன்னார் துறை தமிழ் கலவன் பாடசாலை – லயில் கற்கும் 12 மாணவர்கள் உட்பட 15 பேருக்கு கொரோனா தொற்று

## மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன்

தலைமன்னார் துறை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 12 மாணவர்கள் உட்பட 15 பேருக்கு வியாழக்கிழமை (1) மாலை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

தலைமன்னார் வைத்தியசாலையில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளடங்களாக 50 பேருக்கு பீ.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது தலைமன்னார் துறை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் 12 பேருக்கும் பெற்றோர்கள் 3 பேர் உள்ளடங்களாக 15 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர் ஒருவருக்கு தலைமன்னார் வைத்தியசாலையில் ஏற்கனவே தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் குறித்த மாணவருடன் தொடர்புடைய மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போதே பாடசாலை மாணவர்கள் உள்ளடங்களாக 15 பேருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் குறித்த மாணவர்களுடன் தொடர்புடைய மாணவர்களை வீடுகளில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

- மன்னார் நிருபர்



# இலங்கையில் ராஜாங்க அமைச்சரின் செயலாளர் ஒருவர் திருடப்பட்ட மாடுகளுடன் பிடிப்பட்டார்



ராஜாங்க அமைச்சர் ஒருவரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் எனக் கூறப்படும் ஒருவரை திருடப்பட்ட மாடுகளை ஏற்றிய இரண்டு சுமை ஊர்திகளுடன் கைது செய்துள்ளதாக லுணுகம்வெஹெர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்தள பிரதேசத்தில் திருடப்பட்ட 22 மாடுகளை பண்டாரவளை பிரதேசத்தில் உள்ள இறைச்சிக் கடைக்கு கொண்டு செல்லும் போது, சந்தேக நபர் லுணுகம்வெஹெர பிரதேசத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இறைச்சிக்காக அறுக்கப்படவிருந்த மாடுகளை விடுவித்து மக்களுக்கு வழங்க கொண்டு செல்வதாக குறித்த சந்தேக நபர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இது குறித்து இலங்கை அகிம்சை மகா சங்கத்திற்கு அறிவித்து, அதன் தலைவரிடம் பெறப்பட்ட நன்றிக் கடிதத்தையும் சந்தேக நபர், பொலிஸாரிடம் காண்பித்துள்ளார்.

எனினும் சந்தேக நபர், மாடுகளை திருடி இறைச்சிக்காக விற்பனை செய்ய கொண்டு செல்ல முயற்சித்துள்ளதாக பொலிஸார் விசாரணைகளில் உறுதிப்படுத்தியுள்ளனர்.


தை பொங்கலுக்கு தேவையான 18 வகையான
பொருட்கள் அடங்கிய பொங்கல் பொதி
மஞ்சள்
ஏலக்காய்
Stainless Steel Paanai - 1
Stainless Steel Plate - 1
Stainless Steel Agappai - 1
Ponni Raw Rice - 500 Grams
Sugar Jaggery - 500 Grams
Sugar Crystal - 200 Grams
Cashew Nut - 30 Grams
Dry Grapes - 30 Grams
Pure Cow Ghee - 100 Grams
பாசிப்பயிறு - 200 Grams
கற்பூரம் - 1 பாக்கெட்
விபூதி - 1 பாக்கெட்
சந்தனம் 1 பாக்கெட்-
குங்குமம் - 1 பாக்கெட்
கப் சாம்பிராணி
ஊதுபத்தி - 1 பாக்கெட்
தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...
Tasty தமிழா
PRE ORDER NOW
இப்போது விற்பனையில்...
முன்பதிவிற்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
647 762 9512
ORDER NOW


தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக
உலகெங்கும்
தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...
Tasty தமிழா
இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா மற்றும் பாரம்பரிய உணவுகள்...
Coriander
Chilli
Jaffna
Briyani
Chicken
கனடாவில் Tasty Tamila
தயாரிப்புகள் கிடைக்கும் இடங்கள்:-
Shankar & Co (Kennedy & Eglinton)
Gunam Supermarket (Morningside & Sheppard)
தேன் நெல்லி
நாட்டு சக்கரை
கருப்பட்டி
வியாபார தொடர்புகளுக்கு
+1 647 762 9512
+91 7845 00 6977



# டார்ச் லைட்டின் வெளிச்சம் எவ்வளவு தூரம் பரவும்?

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)

*"இயலாது அல்லது நடைமுறைக்கு ஒத்துவராது என்று கூறப்படுவதை செய்து காட்டி வெற்றி பெறுவதே அரசியல் அதை சாதித்துக் காட்டுவதே கட்சிகளின் வெற்றி அதுவே தலைமைத்துவத்தின் வெளிப்பாடு".*

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜான் எ.்.ப் கென்னடி சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் கூறிய இந்த வார்த்தைகள் இன்றளவுக்கும் மிகவும் யதார்த்தமானதாகும். அப்படிச் செய்ய முனைபவர்கள் மீது ஏளனத்துடன் கூடிய விமர்சனம் எழுவதும், அவர்கள் வெற்றி பெற்றதும் பாராட்டுவதும் அரசியல் கூத்தின் இணைபி-ரியாத அங்கமாகும்.

இலங்கையில் முன்னணி தமிழ் அரசியல் அமைப்பாக இன்றளவும் செயல்பட்டு, தாங்களே தமிழர்களின் "பெரும்பான்மையான ஆதரவை" பெற்றவர்கள் என்று கூறிக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட கட்சிகளின் கூட்டுக் கலவையாகவே செயல்படுகிறது. ஆரம்பத்தில் நான்கு கட்சிகள் ஒரு நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் போர்க்காலச் சூழலில் இணைந்து உருவாக்கிய கூட்டணியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அவர்கள் இதுவரை தேர்தல் ஆணையத்தில் தம்மை தனிக்கட்சியாகப் பதிவு செய்துகொள்ளவில்லை. இலங்கை தமிழரசுக் கட்சியின் வீடு சின்னத்திலேயே தேர்தலைச் சந்தித்து வருகின்றனர்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை தமிழரசுக் கட்சியும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினர், ஆனால் அந்த இரு கட்சிகளிடையே இருந்த முரண்பாடுகள் அனைவரும் அறிந்ததே. இன்று ஏட்டளவில் ஆனந்தசங்கரி அவர்களின் தலை-மையும் உதயசூரியன் சின்னம் மட்டுமே அந்த கூட்டணியில் எஞ்சியுள்ளன.

இந்நிலையில் இலங்கையில் "புதிய ஜனநாயக வெளிச்சத்தைப் பாய்ச்ச" மூன்று கட்சிகளின் கூட்டணியாகச் செயல்பட்டு வந்த தமிழ் முற்போக்கு கூட்டணி தனியொரு அரசியல் கட்சியாகத் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்துள்ளது. அதற்கு டார்ச் லைட் (மின் சூள்) சின்னமாக அளிக்கப்பட்டுள்ளது.

அடிப்படையில் மலையகத்திலுள்ள இந்திய வம்சாவளி தமிழர்கள், கொழும்பு மற்றும் அதன் சுற்றாடலில் வாழும் தமிழர்களை மையப்படுத்தியே அந்த கட்சி உதயமாகியுள்ளது. மனோ கணேசன் தலைமையிலான ஜன-நாயக மக்கள் முன்னணி, திகாம்பரம் தலைமையேற்கும் தொழிலாளர் தேசிய முன்னணி மற்றும் ராதாகிருஷ்ணன் தலைமையில் செயல்படும் மலையக மக்கள் முன்னணி ஆகியவை அந்த மும்மூர்த்திகளின் தலைமையில் ஒன்றிணைந்துள்ளன.



இது குறித்த அறிவிப்பு வெளியான உடனேயே "டார்ச் லைட் கட்சிக்கு" சமூக ஊடகங்களில் வாழ்த்துக்கள் வெளிவர ஆரம்பித்தன.

"இது நமது மக்களின் வெற்றி" என்கிறார் தமுகூ தலைவர் மனோ கணேசன்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர், தலைநகர் கொழும்பில் இந்த மூன்று கட்சிகளும் அதன் தலைவர்களும் ஒரு புரிந்துணர்வுக்கு வந்து தமிழ் முற்போக்கு கூட்டணியை ஆரம்பித்தனர். அது தொடங்கப்பட்ட ஜூன் மாதம் 3 ஆம் திகதி புதன்கிழமை, நான் மனோ கணேசனை பேட்டி கண்டேன்.

"இலங்கையில் கூட்டணிகளின் நிலை என்ன என்று அனைவருக்கும் தெரியும், இந்நிலையில் நீங்கள் அமைத்துள்ள இந்த கூட்டணி எவ்வளவு காலம் தாக்குப்பிடிக்கும்"?

"இந்தக் கூட்டணி நிலைத்து நிற்கும் என்கிற நம்பிக்கை எமக்கு உள்ளது் இந்த கூட்டணியிலுள்ள மூன்று கட்சிகளும் தொடர்ந்து மக்களுக்கான சேவை-களை செய்து அவர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளனர். கொள்கையளவில் அடிப்படையில் எமக்குள் ஒற்றுமை இருக்கிறது. நீடித்து நிற்க வேண்டும், நிற்கும் என்கிற நம்பிக்கையில் தான் இந்த கூட்டணி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த நம்பிக்கை எமக்கு முழுமையாக உள்ளது".

ஆறு வருடங்கள் கடந்த நிலையில், அந்த மூன்று கட்சிகளும் அதன் தலைவர்களும் இரண்டு நாடாளுமன்ற தேர்தல்கள், ஒரு ஜனாதிபதி தேர்தல், ஒரு உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஆகியவற்றை சந்தித்துள்ளனர். அதில் கணிசமான அளவுக்கு வெற்றியும் பெற்றுள்ளதுனர். அதற்கு மனோ கணேசன், திகாம்பரம் மற்றும் ராதாகிருஷ்ணனுக்கு வாழ்த்தும் பாராட்டும்.

எனினும் இந்த "டார்ச் லைட் கட்சியின்" அடித்தளம் அல்லது வாக்கு வங்கியான மலையகம். கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளுள்ள ஆதரவை மட்டுமே வைத்துக் கொண்டு தேசியளவில் அரசியல் செய்ய முடியாது என்பது அவர்களுக்கும் தெரியும் நமக்கும் தெரியும்.

"தேசியளவில் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் தேசிய அரங்கில் ஒன்று சேர வேண்டும் என்ற பேரவா இன்று தமிழ் முஸ்லிம் மக்களின் மனங்களில் ஆழமாக வேரூன்றி இருப்பதை நா-னறிவேன்" என்று இந்த புதிய கட்சியின் தலைவர் மனோ கணேசன் தனது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.



ஆனால், தேசியளவில் அரசியல் செய்வதற்கும், தமிழ் பேசும் மக்களை ஒரே தளத்தில் ஒருங்கிணைக்கவும் அவர்கள் மிகவும் செறிந்து வாழும் வடக்கு-கிழக்கில் இந்த டார்ச் லைட்டின் வெளிச்சம் பாய வேண்டியது மி-கவும் அவசியம். அவர்கள் மலைக-ளில் ஏறியிறங்கியிருக்கலாம், காலி-முகத் திடலில் கால் பதித்திருக்கலாம், ஆனால் நாட்டில் பரந்துபட்ட அளவி-ல் மக்களின் மனங்களை அவர்கள் வெல்ல வேண்டும். வடக்கு கிழக்கில், இன்றும் மறுக்க முடியாத வகையில், மக்கள் மதரீதியாக, ஜாதி ரீதியாக பிரதேச ரீதியாக பிரிந்துள்ளனர். இன்று இலங்கை தமிழரசு கட்சியின் தலைவராக இருக்கும் மாவை சேனாதிராஜா அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த வரலாறும் உண்டு. அதேபோல் கொழும்பைத் தவிர்த்து கண்டியில் போட்டியிட்டு மனோ கணேசன் தோல்வியடைந்த கசப்பான உண்மைகளும் இலங்கை அரசியலில் உள்ளன.

முஸ்லிம் கட்சிகளுக்குள் இருக்கின்ற பிளவுகள் மிகவும் அதிகம். காலஞ்சென்ற அஷ்ர.்.ப் தலைமையில் ஆலமரமாக இருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று தொடர்ச்சியாக விழுதுகளை இழந்து வீழ்ச்சியடைந்து வருகிறது. முஸ்லிம் காங்கிரஸ் என்ற ஆலமரம் முறிந்து விழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த ஆலமரத்திலிருந்து பலர் விலகி தனிக்கட்சி ஆரம்பித்ததால், ஏராளமான முஸ்லிம் கட்சிகள் உருவாகியுள்ளன. அவை நேரத்திற்கு நேரம் தேர்தலுக்குத் தேர்தல் "அற்ப ஆசன அரசியல்" செய்து மதிப்பிழந்து நிற்கின்றனர். முஸ்லிம் கட்சிகளுக்கும் தமிழ் கட்சிகளுக்கும் வரலாற்று ரீதியாகவே ஏழாம் பொருத்தம்தான்.



வடக்கு கிழக்கில் செயற்படும் தமிழ் கட்சிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. அவை "பஞ்சரான சைக்கிள், இடிந்து விழுந்த வீடு, உதிர்ந்த பூ, பயன்பாட்டில் இல்லாத கலங்கரை விளக்கம், துருப்பிடித்த நங்கூரம், சுருதி சேராத யாழ். ஓட்டையான படகு" என்று அன்றாடம் சமூக ஊடகங்களில் ஏளனத்திற்கு உள்ளாகின்றன. இந்த கட்சிகளின் செயற்பாடுகள் அன்றாட மீம்ஸ் கிரியேட்டர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக உள்ளது.

இந்நிலையில் அனைத்து கட்சித் தலைவர்களுடன் தனிப்பட்ட முறை-யில் நல்லுறவைக் கொண்டுள்ள மனோ கணேசன் தான் எண்ணியுள்ளபடி தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் தேசிய அரங்கில் ஒன்றுசேர வேண்டும் என்ற பேரவாவை எப்படி முன்னெடுக்கப் போகிறார் என்பதை காண பலரைப் போல நானும் ஆவலாக இருக்கிறேன்.

மனோ கணேசனுக்கு சில சாதகமான அம்சங்கள் உள்ளன. அதில் மி-கவும் முக்கியமானது கொழும்பில் இருந்து கொண்டு அவரால் மும்மொழியில் சரளமாக பேசி அரசியல் செய்ய முடியும். இது அவருக்கான மிகப்பெரிய பலம். அதேபோன்று இந்தியா உட்பட பன்னாட்டு அரசுகள், அதன் தூதர்கள், மனித உரிமை அமைப்புகள், ஐ நா போன்ற நிறுவனங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பும் உள்ளது. நானறிந்த வரையில் அவருக்கு இயற்கையாகவே ஒரு விஷயத்தை உடனடியாகப் புரிந்து கொள்ளவும் அதன் தீவிரத்தன்மையை அறிந்துகொள்ளவும் இயலும். அது ஒரு பிளஸ் பாயிண்ட்.

இன்றளவும் கொழும்பு வாழ் தமிழர்கள் மட்டுமின்றி, சிங்கள முஸ்லிம் மக்களிடமும் அவருக்கு நல்ல ஆதரவுள்ளது. அதேவேளை அவரும் மிகவும் போராடியே கொழும்பில் வெற்றிபெற முடிகிறது.

கொழும்பிலுள்ள தமிழர்கள் மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் வாழ்ந்த போது அவரும், அமரர் ரவிராஜும் வீதியிலிறங்கி போராடியதை யா-வரும் அறிவர். அதேபோல் மலையகத்தில் திகாம்பரம் மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோருக்கு கணிசமான செல்வாக்கு உள்ளது. அதேபோல் இந்திய வம்சாவளி தமிழர்களிடையே மனோவுக்கென்று ஒரு தனி இடமும் இருக்கிறது. எனினும் மயில்வாகனம் திலகராஜ் போன்ற துடிப்பான இளைஞர்களை தமிழ் முற்போக்கு கூட்டணி இழந்தது வருந்தத்தக்கது. அவர் போன்றோர் மீதும் டார்ச் லைட் வெளிச்சம் பாய்ச்சுவது பயனுள்ளதாக இருக்கும்.

வடக்கே வன்னியில், மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்த ஏரா-ளமானோர் உள்ளனர். அவர்களுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணியின் மீது ஒரு பற்று மற்றும் அபிமானம் இருக்கக் கூடும். வடக்கில் இந்த கூட்டணி கால் பதிக்க விழைகிறது அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயல்பட விரும்புகிறது என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. ஆனால் இந்த அறிகுறிகளும் மனோ க-ணேசனின் யாழ்ப்பாண விஜயமும் வாக்குகளாக மாறுமா என்பதில் பல கேள்விகள் உள்ளன.



மலையகத்தில் வாக்கு வங்கி சரிந்தாலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒரு பலமான கட்சியாகவே உள்ளது. மலையகத்தை மையமாகக் கொண்டு செயல்படும் எந்த கட்சியாக இருந்தாலும் அவர்களின் வாக்கு வங்கியாக இருக்கும் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சனை ஒன்றுதான். அவர்களின் மொத்த வாக்கையும் அள்ளுவதில் இந்த மும்மூர்த்திகள் வெற்றிபெற்றால் அது இவர்கள் கூறும் அல்லது எதிர்பார்க்கும் தேசியளவில் தமிழ் பேசும் சக்திகளை ஒருங்கிணைப்பதற்கு முதல் படியாக இருக்கும்.

அதேவேளை, மலையகத்திற்கு வெளியே பம்பரமாகச் சுழன்று அரசி-யல் செய்ய வேண்டுமென்றால் அது மனோ கணேசனின் தோள்களிலேயே தங்கியுள்ளது. சாரத்தை வரிந்துகட்டிக்கொண்டு வீதியில் இறங்கி அவரால் அரசியல் செய்ய முடியும். சிங்கள அரசியல்வாதிகளை அவர்கள் பாணியில் நேருக்கு நேர் எதிர்க்க முடியும்.

பார்ப்பதற்கு அமைதியாக இருப்பவர்கள் என்று தோன்றினாலும் திகாம்பரம் மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோரும் அரசியல் ஆழமாக காலூ ன்றியவர்களே. அவர்களது அனுபவத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது. கணிசமான அளவில் தேட்ட தொழிலாளர்களின் ஆதரவு அவர்களுக்கு இருக்கிறது.

தேசிய அளவில் தமிழ் பேசும் மக்களை ஒரு அரசியல் சக்தியாக ஒருங்கிணைப்பது மிக மிக சவாலான வி'யம். அது பேசப்படும் அளவுக்கு எளிமையானது அல்ல. ஆனால் ஜான் கென்னடி கூறியதை போல் முடிந்தால் இயலாதது இல்லை.

புதிய கட்சியை வரவேற்போம், வாழ்த்துவோம், ஆனால் அதே நேரம் விமர்சனம் செய்யவும் தயங்க மாட்டோம்.


நீங்கள் வர்த்தகத்தில்
இருக்கிறீர்கள் என்பதை
பொதுமக்கள் அறிந்துகொள்ளவும்,
உங்கள் தொலைபேசி
இலக்கத்தினைத் தேடி அலையாது
உடன் பெற்றுக்கொள்ளவும்...
விளம்பரத்திற்கு இன்றே அழையுங்கள்
செந்தியின்... தமிழன்
வழிகாட்டி
Tamils' Guide
info@tamilsguide.com I 416-615-4646


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE
Serving the Tamil Community of Greater Toronto
உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.
கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.
உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.
CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759
இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
Pre-Arranging – A Wise Choise
FINANCIAL BENEFITS
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death
EMOTIONAL BENEFITS
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
Tasty தமிழா
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**






உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**


Kerala Kottakal Arya Vaidyasala Products Available

# AAYUSH WELLNESS CENTER
Body, Mind, Soul
Mississauga & Brampton

Ayurveda, - Massage Therapy & Physiotherapy
Lady Doctor & Therapist

**You are in experts hand**

**Traditional Kerala Ayurveda Treatments**
- Shirodhara - Third Eye Treatment
- Abhyanga- Full Body Massage
- Kizhi
- Pizhichil
- Panchakarma
- Rejuvenation Theraphy
- Clinical Yoga Training

**we are specialized in**
- Pain Management
- Arthritis
- Spine & Joint
- Spondylitis
- Headache and Migraine
- Stress, Strain and Depression
- Ligament, tissue and sport injuries
- Skin Diseases

Weekend and Late Evening Appointments available All 7 days

Call us Today:
**905-279-9777**
Mobile:
**647-629-8841**
www.aayushwellnesscenter.ca

**We speak your language:**
**English, Malayalam, Tamil, Hindi**

**79 Dundas St. W, Suit 108, Mississauga, L5B 1H7**

**Dr. K.C. Hareendran,** BAMS, PhD, DNM (CANADA
Ayurveda & Naturopath Physician
**Dr. Amrutha Rajeev** BAMS, MD (Ayurveda)

www.facebook.com/aayushwellnesscenter www.twitter.com/aayushwellnesscenter

# மரண அறிவித்தல்

பிறப்பு

17 - 07 - 1945



இறப்பு

27 - 11 - 2021

# திருமதி தருமலிங்கம் சரஸ்வதி

நயினாதீவு 5ம் வட்டாரம், Sri Lanka (பிறந்த இடம்) Whitby, Canada

யாழ். நயினாதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Whitby ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தருமலிங்கம் சரஸ்வதி அவர்கள் 27-11-2021 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நல்லையா(சய்வம்), வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற தருமலிங்கம் (அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும்,

உமாகரன், காலஞ்சென்ற சுபாகரன், காலநிதி, சுரேஸ், ஜெகதீஸ்வரன், வினிதா, சுகதா ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

கவிதா, பிரபுராஜ், கௌரி, துஷ்யந்தி, ரவீந்திரகுமார், ரங்கநாதன் **(New Ranganas Jewel House Markham & Steeles Ave E)** ஆகியோரின் மாமியாரும்,

இராசதுரை, காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு மற்றும் துரைராஜா, பராசக்தி, காலஞ்சென்ற நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

புவனேஸ்வரி, புஸ்பவதி, விஜயாதேவி, புனிதமலர், சியாமளாதேவி, பாலசிங்கம், சூரியகலா, காலஞ் சென்றவர்களான சோமசேகரம், தியாகராஜா, மயில்வாகனம், சாமியாப்பிள்ளை, தமோதரம்பிள்ளை, கணபதிப்பிள்ளை, கனகசபை மற்றும் கோபாலுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

தணிகன், ஜெயானி, சாகிபிரகலாத், தீவிகா, விபீசன், கார்த்திகா, மிதூசன், நிவாசகி, யதீரன், நிக்ஷ்னா, நியாணன், லக்ஷ்மிகா, கனிஷ்கா, உசானி, அஸ்வினி, டிலானி, சங்கவி, அக்ஷயா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

**நிகழ்வுகள்**

பார்வைக்கு
Saturday, 04 Dec 2021 5:00 PM - 9:00 PM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3. Canada

கிரியை
Sunday, 05 Dec 2021 9:00 AM - 11:30 AM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3. Canada

தகனம்
Sunday, 05 Dec 2021 12:00 PM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3. Canada

**தொடர்புகளுக்கு**

உமாகரன் – மகன் : +14163998240 சுரேஸ் – மகன் : +16477878715 ஜெகதீஸ்வரன் – மகன் : +14372173619 பிரபுராஜ் – மருமகன் : +94773209756
ரகு – மருமகன் : +16477874248 ரங்கநாதன் – மருமகன் : +16477022159 இராசதுரை – சகோதரன் : +94112599771
துரைராஜா – சகோதரன் : +14169033182 பராசக்தி – சகோதரி : +19052397672

**தகவல் :– மருமகன் (ரங்கன்)**

**New Ranganas Jewel House Markham & Steeles Ave E**

# மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயரதர பாடசாலையை உன்னத நிலைக்கு உயர்த்திய ஒப்பற்ற அதிபர் திருமதி பரஞ்சோதி பாக்கியராசா அவர்கள்

- எஸ்.கே. குமரகுரு



மாணவர்களின் கல்வி மேம்பாட்டையே தன்வாழ்வின் இலட்சியமாக ஏற்றுக்கொண்டு, தனது பதவிக்காலம் முழுவதும் வாழ்ந்து காட்டியவர். தான் கல்விகற்ற பாடசாலையில் அதிபராகப் பணியாற்றிச் சாதனை படைத்தவர். தற்போதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அனைவராலும் பேசப்படும் அதிபராக திகழ்பவர். மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர் திருமதி பரஞ்சோதி பாக்கியராசா அவர்கள். ஆசிரியத் தொழிலைத் தொண்டாகவும், தொழுகையாகவும் ஏற்று மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய இவர் அண்மையில் இறைபதம் அடைந்தார். அவரது கல்விச் சேவையை அசைபோடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தை பாதித்த சூறாவளி, ஈழ விடுதலைப் போராட்டம், தமிழ் முஸ்லிம் கலவரம் போன்ற காரணிகளின் தாக்கங்களை எதிர்கொண்டு பாடசாலையைக் கட்டியெழுப்பியவர். சிறந்த திட்டமிடலும், அதனை நடைமுறைப்படுத்தும் ஆளுமையும் மிக்கவர். அமைதியாகப் பேசும் சுபாவமுடையவர், அதேவேளை கண்டிப்பும் கடமையுணர்வும், மாணவர்களின் ஒழுக்கத்தில் மிகுந்த அக்கறையும், அவதானமும் மிக்கவராகத் திகழ்ந்தவர். அவரது நிழலுக்கே மாணவர்கள் அஞ்சுவார்கள், அப்படி இருந்தும் பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்கு இன்றும் முன்மாதிரியாகத் (Role model) திகழும் இவர், இரும்புச் சீமாட்டி என்று அழைக்கப்பட்டவர்.

கல்வியானது, செல்வங்களில் எல்லாம் தலையானது, இதை எவராலும் எக்காலத்திலும் அழிக்க முடியாதது. இதனையே வள்ளுவர் "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றை யவை" என்று அழகாகக் கூறியுள்ளார். கல்வி மனிதவள மேம்பாட்டிற்கும், சமுதாய வளர்ச்சிக்கும், அறிவைப் பெற்று பொருளாதாரத்தில் உயர்வுபெற்று சிறந்த குடிமகனாக வாழ்வதற்கும் வழிவகுக்கின்றது. இதனை ஒவ்வொரு மாணவர்களும் அடையவேண்டும் என்பதில் அக்கறையுடையவர்.

திருமதி பரஞ்சோதி பாக்கியராசா அவர்கள் ஆசிரியர், அதிபர், கல்விப் பணிப்பாளர் என ஐம்பத்தெட்டு ஆண்டுகள் (58) கல்வியியலாளராகப் பணியாற்றியவர். எப்படிக் கற்பிக்க வேண்டும், அதற்காக எவற்றையெல்லாம் கற்க வேண்டும், ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை எவ்வாறு வளர்க்கவேண்டும், அதனூடாக மாணவர்களின் தரத்தை உயர்த்தி சிறந்த பெறுபேறுகளை பெறச்செய்வது போன்ற பலதரப்பட்ட விடையங்களை கைக்கொள்பவரே கல்வியியலாளராவார். இவற்றையெல்லாம் சிறப்பாக கையாண்டு வெற்றிகண்டவர். தனது பதவிக்காலத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரண, உயர்தர பரிட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, நகரத்திலுள்ள ஐந்து முன்னணிக் கல்லூரிகளிலும் முதன்மையானதாக வின்சன்ட் மகளிர் உயரதர பாடசாலையை உயர்த்திய பெருமைக்குரியவர்.

"தோன்றின் புகழொடு தோன்றுக" என்பதற்கமைய ஆரையம்பதியில் புகழ் பூத்த குடும்பத்தில் 1931ம் ஆண்டு பிறந்தவர். ஓய்வுபெற்ற ஆசிரியராகவும், கந்தசாமி கோவில் வண்ணக்கராகவும், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனுடன் மிகுந்த ஈடுபாடும் உடைய அமரர் சி. ஏரம்பமூர்த்திக்கும், தாயார் நேசம்மா அவர்களுக்கும் நான்காவது மகளாகப் பிறந்தார். சிவநேசநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சுந்தரமூர்த்தி (ஓய்வு பெற்ற உணவுக்கட்டுப் பாட்டு அதிகாரி), தட்சணாமூர்த்தி (ஓய்வு பெற்ற முன்னாள் இராஜதந்திரி) அகியோரை சகோதரர்களாகக் கொண்டவர்.

**கல்வியும் ஆசிரியப் பணியும்.**

ஆரம்பக் கல்வியை ஆரையம்பதி இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையில் தொடங்கி, வின்சன்ட் மகளிர் உயரதர பாடசாலை, யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் பாடசாலை ஆகியவற்றில் கல்வி கற்றவர். உயர் கல்வி கற்க தமிழ்நாடு சென்று, மதுரை "LADY DOAK COLLEGE" ல் கற்று, பட்டப் படிப்பை சென்னை கிறிஸ்தவ பெண்கள் கல்லூரியில் பயின்று 1956ம் ஆண்டு விஞ்ஞானமானி (BSc) பட்டத்தைப் பெற்றுக்கொண்டவர்.

அதே ஆண்டு இலங்கை வந்து மட்/ ஆனைப்பந்தி இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலையில் ஆசிரிய பணியைத் தொடங்கியவர். பத்து ஆண்டுகளின் பின்பு கல்லடி சிவானந்த வித்தியாலயம், ஆரையம்பதி மகா வித்தியாலயம் ஆகியவற்றிலும் பணியாற்றினார். ஓய்வுபெற்ற கல்வி ஆலோசகர் அமரர் சு. பாக்கியராசா அவர்களை திருமணம் செய்து கலைவாணி, செவ்வேள், சசிதரன் ஆகிய மூன்று பிள்ளைகளின் தாயானார்.

**அதிபர் பதவியும் பாடசாலை நிர்வாகமும்.**

சிறந்த ஆசிரியராகவும், குடும்பத் தலைவியாகவும் பணியாற்றும் போது பதவி உயர்வுகளும் அவரைத் தேடிவந்தன. இலங்கை கல்வி நிருவாக சேவை பரிட்சையில் சித்தியடைந்து அதிபராகப் பதவியுயர்வு பெற்று 1971ம் ஆண்டு மீண்டும் மட்/ ஆனைப்பந்தி இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலையில் பணியாற்றத் தொடங்கினார்.

மிகவும் தன்னம்பிக்கை கொண்டவர். தனது பிள்ளைகளை நகரத்தில் இருந்த முன்னணி பாடசாலைகளில் கல்விகற்க அனுமதிக்காது தான் பணியாற்றிய பாடசாலைகளுக்கே அழைத்துச் சென்றவர்.

1977ம் ஆண்டு தான் கல்வி கற்ற 200 வருட வரலாற்றைக் கொண்ட வின்சன் மகளிர் உயரதர பாடசாலையில் அதிபராக பொறுப்பேற்று, 1990ம் ஆண்டு வரை, பதின்மூன்று வருடங்கள் மிகச் சிறப்பாகப் பணியாற்றினார். இக்காலம் மிகுந்த சவால் நிதைந்ததாக அமைந்தது. 1978ம் ஆண்டு வீசிய சூறாவளி மட்டக்களப்பு மாவட்டத்தையே புரட்டிப்போட்டது, பாடசாலைக்கட்டிடங்கள் தரைமட்டமாகின, பல மாதங்கள் பாடசாலைகள் இயங்கவில்லை, தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், ஈழ விடுதலைப் போராட்டம், திடீர்த் திடிரென நிகழ்ந்த குண்டுவெடிப்புகள், ஹர்த்தால், கடையடைப்பு, மாணவர் போராட்டங்கள், தமிழ் முஸ்லிம் இனக்கலவரங்கள், இடப்பெயர்வுகள் என நாளும் ஒரு நிகழ்வு இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் கிராமங்களின் அமைவிடமானது "புட்டும் தேங்காய் பூ" வும் போன்றது. அருகருகே அந்நியோன்நியமாக வாழ்ந்த மக்கள் 1985ம் ஆண்டு ஏற்பட்ட தமிழ் முஸ்லிம் கலவரத்தால் எதிரிகளாயினர். இந்த காலகட்டத்தில் ஆரையம்பதியில் இருந்து மட்டக்களப்புக்குச் செல்வதானால் அருகே உள்ள காத்தான்குடி முஸ்லிம் கிராமத்தினூடாகவே பயணிக்க வேண்டும். இந்த ஆபத்தை உணர்ந்து மீன்பிடிக்கும் சிறிய தோணியை வாடகைக்கு அமர்த்தி, மட்டக்களப்பு வாவியினூடாகப் பயணித்து பாடசாலைக்குச் சென்ற தைரியசாலி திருமதி பாக்கியராசா என்றால் மிகையாகாது.

மாணவர் கல்வியே அவரது முழுச்சிந்தனையாகும். தனது "நுண்மாண் நுழைபுலம்" மூலம் ஆசிரியர்களிடம் வேலைவாங்கியவர். இதனால் எப்போதும் ஆசிரியர்களுக்கு சிம்ம சொற்பனமாகத் திகழ்ந்தார். கடமையை சரியாகச் செய்யாத ஆசிரியர்கள் அங்கு தொடர்ந்து பணியாற்ற முடியாது. அதே வேளை திறமைமிகு ஆசிரியர்களைப் பாராட்டத் தவறமாட்டார். தனது பன்முக ஆளுமையால் வின்சன்ட் மகளிர் உயரதர பாடசாலையை தேசிய மட்டத்தில் தூக்கி நிறுத்தியவர். இவரது காலத்தில் கல்வி கற்ற எண்ணற்ற மாணவர்கள் டாக்டர், பொறியலாளர், இலங்கை நிருவாக சேவை, கல்விச் சேவை, ஆசிரியர், கணக்காளர், தாதியர் எனப் பலதரப்பட்ட துறைகளில் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்களை கல்வியில் மட்டுமன்றி, அவர்களை பாடவிதானத்துக்குப் புறம்பான செயற்பாடுகளிலும் ஈடுபடச் செய்தவர். அவர்கள் மாவட்டம், மாகாணம், தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கங்களை வெல்வதற்கும் ஊக்கப்படுத்தியவர். குறிப்பாக விளையாட்டுப் போட்டிகள், தமிழ்த் தினப் போட்டி, நாடகம், நாட்டுக் கூத்து ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இதற்கு உதாரணமாமக ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

1979 ஆண்டு வட கிழக்கு மாகாண மட்டத்தில் இடம் பெற்ற நாட்டுக் கூத்துப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் பங்கேற்க ஒரு வார காலம் இருந்த வேளையில், மாணவி ஒருவருக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணத்தால் அவர் பங்கேற்க முடியவில்லை. இந்த நிலையில் நாட்டுக் கூத்து என்னவென்று தெரியாத மாணவியான மாலதி தியாகராஜாவை தெரிவு செய்து, எவ்வாறு ஆடவேண்டும் என்பதை தாளத்துக்கு ஏற்ப தானே ஆடிக்காட்டினார். மேலும் அனைவருக்கும் தொடர்ச்சியான பயிற்சி வழங்கி அவர்கள் தங்கப்பதக்கம் வெல்வதற்கு வழிகாட்டினார். இது அவரது பன்முக ஆளுமையை எடுத்துக் காட்டுகின்றது. இந்த நாட்டுக் கூத்துக்கு அண்ணாவியாராக இருந்தவர் ஆரையம்பதி நாட்டுக் கூத்துக் கலைஞர், ஆசிரியர், அமரர் நல்லலிங்கம் அவர்கள் ஆவார்.

வின்சன்ட் மகளிர் உயரதர பாடசாலையில், மாணவர்கள் கல்வி கற்பதற்கு அனுமதி பெறுவது மிக மிகக் கடினமான செயலாகும். பரிட்சை வைத்தே தரத்தின் அடிப்படையிலே அனுமதி வழங்குவார். பணி நிமிர்த்தம் மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்று வரும் அரச அதிகாரிகளின் பிள்ளைகளாக இருந்தாலும் ஒரே நடைமுறையையே பின்பற்றுவார். எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசியல்வாதிகள் மற்றும் மாவட்ட உயர் அதிகாரிகளின் அழுத்தங்களுக்கு அடிபணிய மாட்டார்.

சிறந்த திட்டமிடலும், செயற்படுத்தும் ஆற்றலும், அபார ஞாபக சக்தியும் உடையவர். ஆயிரக்கணக்கான மாணவர்களையும் பெயர் சொல்லி அழைக்கும் ஆற்றல் வாய்ந்தவர். திறமையான மாணவர்களை இனம் கண்டு பொறுப்புக்களை ஒப்படைத்து ஊக்கப்படுத்துவார். திங்கட்கிழமைகளில் நடைபெறும் மாணவர், ஆசிரியர் காலைக் கூட்டத்தில் ஆங்கிலத்தில் உரையாற்றி மாணவர்களைப் புத்தூக்கம் அடையச்செய்வார்.



இருநூறு (200) வருடவரலாற்றைக் கொண்ட வின்சன் மகளிர் உயரதர பாடசாலையில் பதின் மூன்று வருடங்கள் அதிபராகப் பணியாற்றி பல சாதனைகள் படைத்த இரும்புச் சீமாட்டி இவர் என்றால் மிகையாகாது. அவரது பதவிக்காலம் பாடசாலையின் பொற்காலம் எனலாம்.

**மாவட்டக் கல்விப் பணிப்பாளர்.**

1990ம் ஆண்டு இலங்கை கல்வி நிருவாக சேவையில், சேவை மூப்பின் அடிப்படையில் உயர் தரம் பெற்று, மாவட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வுபெற்று மட்டக்களப்பு காரியாலயத்தில் பணியாற்றினார். தனது சிறந்த நிருவாகத்திறமையால் சகல பாடசாலைகளிலும் பல மாற்றத்தை ஏற்படுத்தினார்.

1992ம் ஆண்டு அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். தொடர்ந்து கொழும்பு மாநகரத்தில் இயங்கிய தனியார் சர்வதேச பாடசாலையான COLOMBO KINGSTON COLLEGE ல் அதிபராகப் பணிபுரிந்து 2014ம் ஆண்டு ஓய்வுபெற்றார்.

திரு,திருமதி பாக்கியராசா அவர்களும், பிரபல எழுத்தாளர் நவம் ஆசிரியர் அவர்களும் ஆரையம்பதிக் கிராமத்தின் மண்ணின் மைந்தர்கள், நவம் ஆசிரியரின் மூத்த மகன் முகுந்தன் அவர்களுக்கும், பாக்கியராசா அவர்களின் மூத்த மகள் கலைவாணிக்குமான திருமண பந்தத்தின் மூலம் குடும்ப உறவினரானவர்கள். புளோரிடாவில் வசித்துவரும் மகள், மருமகன், பேரக்குழந்தைகளான விஷ்ணு, கிருஷ்ணா அகியோருடன் இறுதிக் காலத்தைக் கழித்தவர்.

2018ம் ஆண்டு கனடா வின்சன்ட் மகளிர் உயரதர பாடசாலை பழைய மாணவர் சங்கம் நடத்திய வருடாந்த ஒன்று கூடலில் பிரதம அதிதியாக பங்குபற்றிச் சிறப்பித்தார். இதுவே அவர் இறுதியாக பங்குபற்றிய பொது நிகழ்வாகும். வாழும்வபோதே அவரைக் கௌரவித்த கனடா வின்சன்ட் மகளிர் உயரதர பாடசாலை பழைய மாணவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள்.

மாணவர்களின் கல்வி மேம்பாட்டையே தன் வாழ்வின் இலட்சியமாக ஏற்று வாழ்ந்து காட்டியவர் புகழ் பூத்த அதிபர் திருமதி அமரர் பாக்கியராசா அவர்கள். சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்து காட்டியவர். இன்றும் பலருக்கு முன்மாதிரியாகத் திகழ்பவர். திருமதி சி.பாக்கியராசா என்ற பெயருக்கு இருக்கும் வசீகரம் வரலாறாகி விட்டது. பன்முக ஆளுமை மிக்க சிறந்தொரு அதிபரை மட்டக்களப்பு கல்விச் சமூகம் இழந்து தவிக்கின்றது. அவரது மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும், அன்னார் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன். வையம் உள்ளவரை வாழ்க அவர் பெயர்.

# ஆண்டுகள் எத்தனை கடந்தாலும் என்றும் எம் அருகினில் நீயிருப்பாய் பவானே!

**மண்ணில்:**
**29-02-1968**



**விண்ணில்:**
**03-12-2014**



சுருவில் ஐயனார் கோவிலடியைப்
பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டு கனடாவில் வசித்து வந்தவருமான

## அமரர். சத்தியபவான் சத்தியசீலன்

அவர்களின் 7ம் ஆண்டு நினைவாஞ்சலி.
(தமிழ்வண் படம்பிடிப்பாளரும், தொழில்நுட்ப கலைஞரும்)

திதி: 03-12-2021

ஏழாண்டுகள் நகர்ந்ததையா நீ நிர்மலன் பாதம் அடைந்து
ஆர்ப்பாட்டம் இல்லாத வாழ்வை நாம் அணைத்துக்கொண்டோம்
அந்த நாட் தொடக்கம் அமைதியாய் கழிகின்றன பொழுதுகள்
உனை இழந்த உறவுகள், நண்பர்கள் ஏக்கத்துடன் எங்கும்...

நீ பாதம் பதித்த ஆலய வீதிகள் விழா மண்டபங்கள்
நிதமும் சாய்ந்து நின்ற கட்டடச் சுவர்கள் வீதியோர மரங்கள்
பயணித்த பஸ் வண்டிகள் நண்பர்கள் உறவினர்கள் வாகனங்கள்
அனைத்துமே உன்னைத் தேடி அழுகின்றன.......

ஆலயங்கள் தோறும் தோளில் கெமரா சுமந்து சென்று
இறைவனின் உற்சவங்களை உலகெங்கும் ஒளிர வைத்த உனக்கு
அவனடி சேர நிச்சயம் அருள் கிட்டியிருக்குமடா!
நீ கடைப்பிடித்த மௌனத்திற்கான பரிசாக இறைவன் உனை
தன்னோடு ஏற்றிருப்பான் உன் பணி அங்கும் தொடர....

உன் இருப்பு தொலைந்த நாளில் உலகம் அழுதது
சூழலும் கலைந்தது சுகமான உரையாடல்கள் மௌனித்தன
எப்போதும் ஏதாவது ஒரு விடயம் உன் மூளையை வருடும்
எந்தத் தவறையும் ஏற்றுக் கொள்ள மறுக்கும்.....
எல்லாமே கனவாகிப் போய் கானல் நீராகி விட்டதே
அழகான முகம் அமைதியான பேச்சு குழந்தை மனம் குறும்புபேச்சு
திக்கெட்டும் சென்று செய்திகள் சேகரித்து அன்றொருநாள் நீயே செய்தியானாய்
இன்று விழுகின்ற கண்ணீரை உன் பாதம் சமர்ப்பிக்கின்றோம்...

**என்றும் உன் நீங்கா நினைவுகளுடன்**
**உற்றார், உறவினர், நண்பர்கள்**

# பூமிக்கு அருகே வரும் நிரெஸ் விண்கல்லால் பாதிப்பு ஏற்படுமா?

- குரு அரவிந்தன்

அறிவியல் உலகில் விண்கற்கள் பற்றி சிறிதளவாவது நாம் அறிந்திருப்பது நல்லதென நினைக்கின்றேன். 4660 என்ற இலக்கத்தைக் கொண்ட நிரெஸ் விண்கல் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி 2021 ஆம் ஆண்டு பூமிக்கு அருகே சுமார் 3.9 மில்லியன் கிலோ மீட்டர் அருகே வருகின்றது. சூரியனைச் சுற்றி வரும் இந்த விண்கல், 2060 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இதைவிட இன்னும் அருகே, 1.2 மில்லியன் கிலோ மீட்டர் அருகே வரவிருக்கின்றது. சூரியக்குடும்பத்தில் சூரியனைச் சுற்றிவரும், இந்த விண்கல்லால் உடனடிப் பாதிப்பு இல்லாவிட்டாலும், பூமிக்கு ஆபத்தான விண்கற்களின் பட்டியலில் இதுவும் இடம் பெற்றிருக்கின்றது. இதனுடைய திசை காலப்போக்கில் மாற்றமடையவும் வாய்ப்புண்டு. 1982 டிபி என்பது இதன் முன்னைய பெயராகும். 1082 அடி நீளமானது, அதாவது பாரிஸ் கோபுரத்தைவிட சற்று உயரமானது. 2 கிலோ மீட்டர் குறுக்களவைக் கொண்டது. 1982 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி எலியநோர் கெலின் என்ற அமெரிக்க பெண் வானியலாளரால் கண்டு பிடிக்கப்பட்டது. இவர் பூமிக்கு மிகஅருகே வரும் விண்கற்களை இனங்காணும் நாசாவின் திட்டத்தில் பணியாற்றியதால், இவருக்கு இந்த வாய்ப்புக் கிடைத்தது. இந்த விண்கல் சூரியனைச் சுற்றி வருவதற்குச் சுமார் 1.82 வருடம் எடுக்கின்றது.

"ஓநாய் வருகிறது" என்ற வேடிக்கைக் கதைபோல, இது போன்ற அஸ்ரோயிட் என்று சொல்லப்படுகின்ற விண்கற்கலால் பூமிக்கு ஒரு நாள் ஆபத்து ஏற்படலாம். யப்பான் நாட்டின் MUSES-C probe விண்கலம், இதைக் கண்காணிக்க அனுப்பப்பட இருந்தாலும், அனுப்புவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இதை அருகே சென்று கண்காணிக்க முடியவில்லை. தினமும் ஏராளமான சிறிய விண்கற்கள் பூமியில் விழுந்த வண்ணம்தான் இருக்கின்றன. அவை பூமியை நோக்கி வரும்போது, அவற்றின் வேகம் காரணமாக வளிமண்டலத்தில் உராய்வு ஏற்பட்டு அதன் காரணமாக அனேகமான கற்கள் எரிந்து சாம்பலாகி விடுகின்றன. அதையும் மீறிச் சில கற்கள் பூமியைத் தாக்குகின்றன. மனிதர்கள் இதனால் இதுவரை அதிகம் பாதிக்கப்படவில்லை. 1954 ஆம் ஆண்டு அலபாமாவில் வீட்டுக் கூரையை உடைத்து விண்கல் விழுந்ததில் ஒரு பெண் காயடைந்திருந்தார். இதுவரை பூமியில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய விண்கல் நமீபியா நாட்டில் விழுந்த கோபா, 60 தொன் எடை உள்ளதாகும். பொதுமக்கள் பார்வைக்காக அந்த விண்கல்லை இப்பொழுதும் அந்த இடத்திலேயே வைத்திருக்கிறார்கள். 1908 ஆம் ஆண்டு ரஸ்யாவில் விழுந்த விண் கல்லைத் துங்குஷ்கா நிகழ்வு என்று சொல்கிறார்கள், காரணம் துங்குஷ்கா ஆற்றில் இது விழுந்தது. ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணுக்குண்டைவிட 185 மடங்கு சக்திவாய்ந்ததாக இருந்தது. பல்லாயிரக் கணக்கான காடுகள் இதனால் அழிக்கப்பட்டன. 1922 ஆம் ஆண்டு வோல்கோகிராட் பகுதியில் விண்கற்கள் மழை கொட்டுவது போல விழுந்தன. அதில் ஒரு பெரியகல் 284 கிலோ எடையுள்ளதாக இருந்தது. 2002 ஆம் ஆண்டும் இது போல இர்குட்ஸ் பகுதியிலும் விண்கற்கள் விழுந்தன. 2003 ஆம் ஆண்டு உத்தரபிரதேசத்தில் விழுந்த விண்கலின் எடை 17 கிலோவாக இருந்தது.

சில விண்கற்களில் இரும்பு 90 சதவீதமும், சுமார் 8 சதவீதம் நிக்கலும் கலந்து இருக்கும். சாதாரண விண் கல்லைவிட இது எடை கூடியதாக இருக்கும். செவ்வாய், புதன் கிரகங்களில் மோதலால் வெடித்துப் பறந்த கற்களும் பூமியில் வந்து விழுந்திருக்கின்றன. ஏனைய கற்களோடு சேர்ந்திருந்தால் இவற்றை இனங்காணுவது கடினம். அரிசோனாவில் விண்கல் விழுந்ததால் ஏற்பட்ட பெரிய பள்ளம் ASTROBLEME ஒன்று உள்ளது. சுமார் ஆறு கோடி ஆண்டுகளுக்கு முன் இப்படியான மிகப்பெரிய விண்கல் ஒன்று பூமியைத் தாக்கியதால்தான் டையனோசர்கள் அழிந்தன என்று ஆய்வாளர் குறிப்பிடுவர். பூமியின் 70 சதவீதம் கடல் பரப்பாக இருப்பதால், விண்கற்கள் நிலத்தில் வந்து விழுவதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாகவே இருக்கின்றன. இதனால்தான் நாசா நிறுவனம் பூமிக்கு அருகே வரும் விண்கற்களை அவதானித்தபடி இருக்கின்றது. அவற்றால் உடனடியாக எந்த ஆபத்தும் இல்லை என்பதை நாசா உறுதிப்படுத்தி இருக்கின்றது. ஆனாலும் வருங்காலங்களில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று பூமிக்கு அருகே உள்ள சில விண்கற்களைக் கவனமாக அவதானிக்கின்றது. தேவை ஏற்படின் அவற்றைச் சிறு துண்டுகளாக உடைப்பதற்கும் நாசா ஏற்பாடுகளைச் செய்கின்றது. இயற்கை அழிவு தவிர்க்க முடியாதது. அது எப்படியும், எப்போதும், ஏற்படலாம், யார் அறிவார்?

### வீணாவின் கவிக்கணை

நாட்காட்டியே!
நாள்தோறும் காலை முதல்
மாலை வரை அனைத்து
நல்லது கெட்டதையும்
பார்த்து களைத்த பின்பும்,
மறுநாள் புதிதாய்
பிறந்து வந்து உன்
கடமையை செய்கிறாயே,
உனக்குத்தான் எவ்வளவு
தன்நம்பிக்கை, நாளையாவது
நமக்கானது என்று!!!


DEBT FREE CREDIT SOLUTION

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy



DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

Head Office
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6

416. 834. 7227
www.dfcstoday.ca
info@dfcs.today

Branches
Mississauga | Vaughan

ELANKEERAN THAN
Certified Insolvency Counsellor



# நகைச்சுவை - குணச்சித்திரக் கலைஞர் வைஜி மகேந்திரன் (ஐம்பதும் அறுபதும்)

**மொன்றியால் - வீணை மைந்தன் எழுதுகின்றார்**

புகழ்பெற்ற நாடக கலைஞர் வை.ஜி.பி என அழைக்கப் பெற்ற வை.ஜி பார்த்தசாரதி - திருமதி ராஜலட்சுமி பார்த்தசாரதியின் நாடகப் புதல்வன் வை.ஜி மகேந்திரன் அவர்களது நாடக கலை அனுபவம் இவ்வாண்டு (60) ஆண்டாகும். அதேபோல் அவரது சினிமா அனுபவம் (50) பொன்விழா ஆண்டாகும்.

எனவே தான் சினிமாவில் கால் பதித்து 50 ஆண்டுகளையும், நாடக மேடையில் அறிமுகமாகி அறுபது ஆண்டுகளைக் கொண்டாடும் அன்பர் வை.ஜி மகேந்திரனுடனான சில நினைவுகளை நினைக்கத் தெரிந்த மனம் எழுத விரும்புகிறது.

நாடகம், சினிமா ஆகிய இரு ஊடகங்களும் மிகவும் சக்தி வாய்ந்த பொழுதுபோக்கு ஊடகமாகும். அதிலும் மாலைப் பொழுதை மகிழ்ச்சியுடன் சிரித்து மகிழ வைப்பதில் நகைச்சுவைக் கலைஞர்களின் பங்கு அளப்பரியது.

சுமார் 32 ஆண்டுகளுக்கு முன் மொன்றியால் - ரொரண்ரோ நகரங்களில் நகைச்சுவை நாடகம் நடத்துவதற்கு சென்னையிலிருந்து ஒரு நாடகக்குழு வந்தது. அக்குழுவின் பெயர் - UAA யுனைட்டெட் அமெச்சூர் ஆர்ட்டிஸ்ட் (United Ameture Artist) எனும் நாடக குழுவை 50களின் பிற்பகுதியில் ஆரம்பித்தவர். பிரபல நாடக தயாரிப்பாளரும் - நாடக - திரைப்பட கலைஞருமான வை. ஜி. பி எனச் சுருக்கி அழைக்கப்பட்ட வை.ஜி பார்த்தசாரதி. இவர் ஒரு அரசு அதிகாரியுமாவார். இப்போது உயிருடன் இல்லை. ஐம்பது - அறுபதுகளில் சென்னையில் மாலைநேர - சபா நாடகங்களுக்கு மவுசு அதிகம்.

சினிமாவில் கோலோச்சிய பிரபல திலகங்கள் உட்பட பல குணச்சித்திர நடிக ஜாம்பவான்கள் பலரும் நாடக மேடையில் நடித்து வந்த காலமது! தொழில்முறை நாடக - திரைப்பட நடிகர்கள் மத்தியில் அரசு ஊழியர்களும் நடிப்பின் மேல் உள்ள பிரியத்தால் நாடகம் போடுவார்கள்.

அப்படி உருவானதே A.V.V இதன் இயக்குனரும் தயாரிப்பாளரும் - நடிகருமான வை.ஜி. பி இன் புதல்வரை பற்றி தான் இங்கு சில நினைவுகளை குறிப்பிட உள்ளேன்.

அவர் பெயர் வை.ஜி மகேந்திரன். வை.ஜி.எம் என்று சுருக்கமாக அறியப்படுபவர். இப்போது வை.ஜி.எம் உங்களுக்கு அறிமுகமாகி விட்டார்.

இவர்கள் குடும்பத்தில் இன்னுமொரு, பெருமைக்கும், புகழுக்கும் உரியவர் திருமதி ராஜலக்ஷ்மி பார்த்தசாரதி. வை.ஜி.எம் ன் தாயார்! மட்டுமல்ல!, சென்னையில் புகழ்பெற்ற பள்ளிகளில் ஒன்றான "பத்மா சேஷாத்ரி" பள்ளி முதல்வர், இயக்குனராகப் பணிபுரிந்தவர். அத்துடன் அம்மையார் ஆங்கிலப் புலமை மிகுந்தவர். இல்லஸ்ட்ரேட்டட் (illustrated Weekly) வீக்லி, சென்னை இந்து (Madras Hindu) மற்றும் விளையாட்டு புதினங்களில் விமர்சனம் எழுதி புகழ்பெற்ற எழுத்தாளருமாவார். அவரது புனைப்பெயர் "ராஷ்மி" ஆகும். 1989இல் அம்மையாரையும், மகன் வை.ஜி மகேந்திரனையும் ஒரு தொலைக்காட்சிக்காக நேர்காணல் செய்யும் வாய்ப்புக் கிட்டியது. அப்போது அவர்களிடம் பல சுவாரசியமான கேள்விகளை கேட்டு அவர்களை குஷி படுத்தினேன்.



"மக்கள்திலகம்" நல்ல சுவையான ரசம் பருக விரும்பினால் நேராக உங்கள் அடுக்களைக்கு வந்து விடுவாராம், உண்மையா? என வினவினேன். தாயும் மகனும் அசந்து விட்டார்கள்.

கனடாவில் இருந்து கொண்டு "எங்கள் வீட்டு அடுக்களையை, எப்படி எட்டிப் பார்த்தீர்கள்? என ஆச்சரியப்பட்டார்கள். அச்சந்திப்பிற்கு பின் வை.ஜி. எம் தன்னை "சிவாஜி வீட்டு செல்ல பிள்ளை" என்று சொல்லி பெருமைப்படுவார்.

என்னை விடவும் மிகச் சிறந்த சிவாஜி ரசிகர் அவர். நடிகர் திலகத்தின் வாரிசுகளான பிரபு, ராம்குமார், சகோதரர்களை விடவும் தனக்கு சிவாஜி ஐயாவுடனான உறவை - பிரியத்தை பகிரங்கமாகவே பல மேடைகளிலும் - தான் எழுதிய சிவாஜி பற்றிய நூலிலும் குறிப்பிட்டுள்ளார்.

ஒருமுறை யுஏஏ குழுவினர் சென்னையில் பட்டு அவர்கள் (இவரும் யுஏஏ குழு நாடக எழுத்தராகும்) எழுதிய "பெற்றால் தான் பிள்ளையா?" நாடகத்தை வந்து ரசிக்கும்படி வை.ஜி.பி அவர்கள் நடிகர் திலகத்தை அழைத்திருந்தார். சிவாஜி ஐயா மிகவும் விரும்பி ரசித்த இந்நாடகம் தான் பின்னாளில் அவருக்கு புகழ் சேர்த்த படங்களில் ஒன்றான "பார் மகளே பார்" ஆகும். நாடகம் பார்க்க வந்த சிவாஜி ஐயாவையே அன்று முழுவதும் மாணவப் பருவத்தில் இருந்த மகேந்திரன் வைத்த கண் வாங்காமல் பார்த்து ரசிப்பதும், அவருடன் அருகில் போய் இருப்பதுமாக தான் சிவாஜிக்கு நெருக்கமானதைப் பூரிப்புடன் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்.

சிவாஜி குடும்பத்தாரும், வை.ஜி.பி குடும்பத்தாரும் தோழமை மிகுந்தவர்களாக இருந்தபடியால் மகேந்திரனுக்கு அடிக்கடி "அன்னை இல்லம்" போய் பல மணிநேரம் சிவாஜி ஐயா அவர்களுடன் அரட்டையடிக்கவும், சிரிப்பூட்டவும், நடிப்புக் கற்றுக் கொள்ளவும் தன்னை ஆட்படுத்திக் கொண்டார். சிவாஜி அவர்கள் தனக்கு கொடுத்த சிவாஜி படம் போட்ட டாலர் செயினை இப்போதும் பொக்கி'மாகக் கழுத்தில் அணிந்து வருகிறார்.

சிவாஜி ஐயா அவர்களின் அனாயாசமான நடிப்பாற்றலை விபரிப்பதுடன், மிக நுணுக்கமான அவரது உடல் மொழி (Body Language) பற்றி சொல்லி சொல்லி சிலாகிப்பார்.

அதன் பின் மீண்டும் அவர் குறிப்பிட்ட படங்களை பார்க்க வேண்டும் எனும் ஆவல் மேலிடும். பார்த்து பரவசமடைவேன். இவரிடமுள்ள இன்னொரு திறமை என்னவெனில் இவர் ஒரு விசிலடி மன்னன். விசில் ஒலி மூலம் சங்கதிகள் பிசகாமல் - பிசிறாமல் திரையிசை பாடல்களை ஒலிப்பார். ஹம்மிங் செய்வார். சிவாஜி ஐயாவுடன் அவர் விருப்பத்திற்கு ஏற்ப "கௌரவம்" படத்தில் சிவாஜி வீட்டுக் கார் சாரதியாக வேடமேற்று பிரமாதப் படுத்தியிருப்பார்.



சிவாஜி ஐயாவின் மகனாகப் முக்தா பிலிம்ஸின் "பரீட்சைக்கு நேரமாச்சு" படத்தில் தூள் கிளப்பி எல்லோரையும் கண் கலங்க வைத்தார். தற்போது வெளியாகியுள்ள "மாநாடு திரைப்படத்தில்நடித்ததன் மூலம் மீண்டும் இவர் புகழடைந்துள்ளார். கனடாவின் ஒரு தரம் வாய்ந்த இலக்கிய சஞ்சிகை ஒன்றை கொண்டுவர வேண்டும் என்ற முயற்சியில் "வீணைக் கொடி" எனும் பெயரில் ஒரு மாத இதழைக் காலஞ்சென்ற பேராசிரியர். கலாநிதி ராதாகிருஷ்ணன் தலைமையில் 1989இல் வெளிக்கொணர்ந்தேன்.

அவ்விதழை ரொரண்ரோவில் வாழும் தமிழ் வாசகர்களிடையே அறிமுகம் செய்து சந்தைப்படுத்தும் நோக்குடன் என் விருப்பை வை.ஜி.எம்மிடம் தெரிவித்தேன். "அதற்கென்ன ஜமாய்த்து விடலாம்" என்றார்! அப்போது அவரது குழுவினரின் நாடகம் ரொரண்ரோ நகரில் Donforth வீதியில் அமைந்துள்ள ஒரு மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. சுமார் 800க்கும் அதிகமான ரசிகர்கள் கூடியிருந்தனர். நாடக இடைவேளையின்போது திரு வை.ஜி.எம் என்னைப் பற்றியும் "வீணைக் கொடி" இதழ் பற்றியும் விரிவாகச் சொல்லி தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் படி உரையாற்றினார். தன்னிடம் சில பிரதிகளை வந்து வாங்கும்படி சபையோருக்கு அழைப்பு விடுத்தார். சுமார் 6 நிமிடம் வரை எவரும் எழுந்து வரவில்லை. சபையோர் யாவரும் பின்னாளில் தமிழீழம் கேட்டுக் கொடி பிடித்த யாழ்ப்பாணச் சமூகத்தை சேர்ந்தவர்களே! அவர்கள் "வீணை கொடி"யை வாங்க தயார் நிலையில் இல்லாதவர்கள்!

கடைசியாக ஒரு யுவதி மேடைக்கு வந்து பிரதி ஒன்றை வாங்கி சென்றார். இந்த "வீணை கொடி" இதழின் கௌரவ ஆசிரியர் தான் கவிஞர் கந்தவனம் ஆவார். அவர் ஓர் இதழின் மூலம் கந்தவனம் கனடாவில் தான் வாழ்கிறார் என்கின்ற விபரம் எல்லோருக்கும் தெரிய வந்தது!

தமிழர்களின் தமிழாதரவு பெருகியதால்(!) 2வது இதழுடனேயே "வீணை கொடி" தலை சாய்ந்து விட்டது. ஆனாலும், "வீணை மைந்தன்", "விழுவது எழுவதற்காகவே" என்ற பெரியார் "ஈழத்துப் பூராடனார்" வாக்கு போல் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக கனடாவில் தொடர் எழுத்தாளனாக நிமிர்ந்து இருக்கிறேன்! வை.ஜி.எம் போன்றவர்களின் நட்பும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது!

வாழ்க வை.ஜி.எம் அவர்களது கலைப்பணி.



# நடிகர் அஜித்தின் சண்டைக்காட்சியை வடிவமைத்து கொடுத்த நடன இயக்குனர் சிவசங்கர் மறைந்தார்

சினிமா



நடன இயக்குனர் சிவசங்கர் மாஸ்டர் கொ-ரோனா தொற்று காரண-மாக நேற்று காலமானார். நடனம் மட்டும் அல்லாமல் ஒரு நகைச்சுவை நடி-கராகவும் இன்றைய ரசிகர்கள் மத்தியில் பிர-பலமானவர் தான் சிவசங்கர். குறிப்பாக அஜித் ரசிகர்களுக்கு இவரை ரொம்பவே பிடிக்கும். அஜித் நடித்த வரலாறு படத்தில் அவரை பரதநாட்டிய கலைஞராக, சற்றே நளினமான பெண் தன்மை கொண்ட ஒரு மனிதராக மிக வித்தியாசமாக காட்டியதில் சிவசங்கரின் பங்கு மிக அதிகம். அந்தப்படத்தில் சிவசங்கரின் பங்களிப்பு குறித்து தற்போது நெகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொண்டுள்ளார் இயக்குனர் கே.எஸ். ரவிக்குமார். “இந்தப்படத்தில் அஜித்தின் மூன்று கதாபாத்திரங்களில் பரதநாட்டிய கலைஞர் கதாபாத்திரத்தை உருவாக்கியபோது இதை நான் சரியாக செய்ய முடியுமா, திரையில் பார்க்கும்போது இது வேறுவிதமாக தெரிந்துவிடாதே என கொஞ்சம் தயங்கினார் அஜித்.

அப்போது நான் அவரிடம் சிவசங்கர் மாஸ்டரை நம்பி இதை தாரளமாக செய்யலாம் என கூறினேன். இந்தப்படத்தின் கதாபாத்திரம் போலவே, பரதநாட்டியத்தின் காரணமாக அவரை அறியாமலேயே அந்த பெண் தன்மை வந்துவிட்டது என்றும் ஆனால் சிவசங்கருக்கும் இரண்டு மகன்கள் உள்ளார்கள் என்றும் கூறினேன். அவர் மீதுள்ள மரியாதை காரணமாகவே அந்தப்படத்தில் அஜித்தின் கதாபாத்திரத்திற்கு சிவசங்கர் என பெயரும் வைத்தேன். இந்தப்படத்தில் அஜித்தின் நடை உடை பாவனைகளை அழகாக வடிவமைத்து கொடுத்தார் சிவசங்கர். அதுமட்டுமல்ல, இந்த அஜித் கதாபாத்திரத்தை வைத்து ஒரு சண்டைக்காட்சியை படமாக்கியபோது, ஒவ்வொரு எதிரியையும் அஜித் அடித்து வீழ்த்தும்போது ஒவ்வொருவிதமான நடன முத்திரையை போஸாக காட்டுவது போல வைத்தால் நன்றாக இருக்கும் என நினைத்தேன். அதற்கு பொருத்தமாக அந்த சண்டைக்காட்சியில் தனது பங்களிப்பை சிறப்பாக செய்து கொடுத்தார் சிவசங்கர் மாஸ்டர். தியேட்டரில் அந்த சண்டைக்காட்சிக்கு ரசிகர்களின் கைதட்டல் அதிகம் கிடைத்தது” என கூறியுள்ளார் இயக்குனர் கே.எஸ்.ரவிக்குமார்.

# தன்னை "தல" என்று அழைக்க வேண்டாமென நடிகர் அஜித்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்



தமிழ்த் திரையுலகின் உச்ச நட்சத்திரங்களில் ஒருவர் நடிகர் அஜித்குமார். இவர் நடிப்பில் உருவாகியுள்ள “வலிமை” திரைப்படம் வரும் பொங்கல் பண்டிகை அன்று வெளியாக உள்ளது.

இந்நிலையில், “ரசிகர்கள் இனிமேல் என்னை தல என்றோ, வேறு ஏதாவது பட்டப் பெயர்களை குறிப்பிட்டோ அழைக்க வேண்டாம்” என்று நடிகர் அஜித் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அஜித்தின் செய்தி தொடர்பாளர் சுரேஷ் சந்திரா தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், “பெரும் மரியாதைக்குரிய ஊடக, பொதுஜன மற்றும் என் உண்மையன ரசிகர்களுக்கு, இனி வரும் காலங்களில் என்னைப் பற்றி எழுதும்போதோ, என்னைப் பற்றி குறிப்பிட்டு பேசும்போதோ என் இயற்பெயரான அஜித் குமார் மற்றும் அஜித் என்றோ அல்லது ஏகே என்றோ குறிப்பிட்டால் போதுமானது. “தல” என்றோ, வேறு ஏதாவது பட்டப் பெயர்களையோ குறிப்பிட்டு அழைக்க வேண்டாம் என்று அன்போடு வேண்டுகோள் விடுக்கிறேன். உங்கள் அனைவருக்கும் உடல் ஆரோக்கியம், உள்ள உவகை, வெற்றி, மன அமைதி, மன நிறைவு உள்ளிட்ட சகலமும் கிடைக்க வாழ்த்துகிறேன். அன்புடன் அஜித்குமார்” என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%


கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# அண்மைய பேஸ்புக் தடைக்கு எதிராக தொழிற்சங்க தலைவர்கள் எதிர்ப்பு

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)




சமூக வலைதளங்களில் அரசை விமர்சிக்கும் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் அரசின் திட்டம் சட்டவிரோதமானது என்பதோடு, அரச சேவையில் உள்ள தொழிற்சங்கத் தலைவர்களின் கருத்து வெளிப்பாட்டிற்கு எதிரான விடயம் என கண்டனம் தெரிவித்துள்ளனர்.

சமூக ஊடகங்களில், அரசாங்கத்தையும் அதன் கொள்கைகளையும் விமர்சிக்கும் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பு குறித்து வெளியிடப்பட்ட சமீபத்திய சுற்றறிக்கையை கண்டித்துள்ள சுகாதார மற்றும் ஆசிரியர் சங்கங்களின் தலைவர்கள் அதனை மீறுவோம் எனவும் எச்சரித்துள்ளனர்.

அரசாங்கத்தையும் அதன் கொள்கைகளையும் சமூக வலைத்தளங்கள் ஊடாக விமர்சிப்பதைத் தவிர்க்குமாறு அரச ஊழியர்களுக்கு உத்தரவு பிறப்பிக்க உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாக கொழும்பில் இருந்து வெளியாகும் ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தங்களின் பிரச்சினைகளை விவாதிக்க கூட அவகாசம் கொடுக்காத அரசை குறை கூறாமல் வேறு என்ன செய்ய முடியுமென, சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

"அரச மற்றும் பல நிர்வாகிகள் தங்கள் ஊழியர்களின் பிரச்சினைகள் மற்றும் கருத்து வேறுபாடுகள் குறித்து பின்பற்றிய பேச்சுவார்த்தை அல்லாத முறைக்கு அமைய நாம் செய்ய வேண்டியது எல்லாம் விமர்சிப்பதுதான். ஏனென்றால் பேச்சுவார்த்தை இல்லை என்றால், முடிவெடுக்கும் இடங்களில் எமது பிரச்சினைகளை முன்வைக்க வாய்ப்பில்லை என்றால், விமர்சிக்காமல் வேறு என்ன செய்ய முடியும்? அப்போது நாம் செய்யும் விமர்சனங்களால் தான் சில விடயங்கள் சரியாக இடம்பெறும்".

## தீர்க்க முடியாத பிரச்சினைகள்

"இந்த நேரத்தில் அரசாங்கம் விமர்சனங்களை நிறுத்துவதற்கான சுற்றறிக்கைகளை வெளியிடுவதை விடுத்து, இந்த விமர்சனங்கள் என்னவென்பதை ஆராய வேண்டும்". என ரவி குமுதேஷ் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"அவர்களை மௌனமாக்குவதற்குப் பதிலாக, இந்த ஆட்சியாளர்கள் தங்கள் ஊழியர்களின் நலன்களைப் பற்றி அவர்களது தொழிற்சங்கங்களிடமோ அல்லது பங்குதாரர்களிடமோ பேச்சு நடத்த வேண்டும்.

முன்னாள் சுகாதார அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் பணிப்பாளர்களைப் பாருங்கள், குறிப்பாக தொழிற்சங்கங்கள், வாழ்நாள் முழுவதும், எந்த பிரச்சினையாக இருந்தாலும் இரவு 12 மணிக்குக்கூட பேசி பிரச்சினைகளை தீர்க்க முயற்சி செய்தோம். அப்போது அவர்களின் பிரச்சினைகளை தெரிந்துகொண்டோம். அவர்கள் எங்கள் பிரச்சினைகளை அறிந்துகொண்டார்கள்.

இறுதியில், எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய இடத்தில் பணியாற்ற ஆரம்பித்தோம்.

பிரச்சினை தீராவிட்டாலும், குறைந்தபட்சம் இந்த பிரச்சினையை தன்னால் தீர்க்க முடியாது என்பதை ஒரு உணர்த்த வாய்ப்பு கிடைத்தது. சில சந்தர்ப்பங்களில், நாங்கள் அப்படித்தான் இருந்தோம்".

எவ்வாறாயினும், தற்போதைய சுகாதார அமைச்சின் செயலாளரும் ஏனைய அதிகாரிகளும் எந்தவொரு பிரச்சினை குறித்தும் கலந்துரையாட முன்வருவதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பேச்சுவார்த்தையில்லா முறைமையின் கீழ் அமைச்சர்கள் அல்லது முக்கிய தீர்மானம் எடுப்பவர்கள் நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளையும் ஜனாதிபதிக்கு எடுத்துச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாக தொழிற்சங்கத் தலைவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஜனாதிபதி ஏன் தவறு செய்கிறார்

"அப்படியானால், அது எதுவாக இருந்தாலும் சரி அதை அப்படியே செயல்படுத்துவதே ஒரு வழி.

அதனால்தான் ஜனாதிபதி எடுத்த தீர்மானங்கள் தவறானவை என மக்கள் விமர்சிக்க வேண்டியேற்படுகின்றது".

அங்கும் இங்கும் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் ஜனாதிபதி தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்றாலும், இன்று அந்த நடைமுறை வீழ்ச்சியடைந்துள்ளதாக சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இதனால் ஜனாதிபதிதான் எதற்கும் முதல் தீர்மானத்தை எடுக்க வேண்டியேற்படும். உதாரணமாக, நம் நாட்டில் கொவிட் தொடர்பாக பல தீர்மானங்கள் முதலில் ஜனாதிபதியால் எடுக்கப்படுகின்றன. பின்னர் அந்த தீர்மானங்களை விமர்சிப்பதால் பல காரண காரணிகள் வெளியாகின்றன".

சுகாதார செயலாளர் மற்றும் அமைச்சக்களின் செயலாளர்கள் என பலர் இன்று அதிகாரிகளுடன் எந்த பேச்சுவார்த்தையையும் நடத்துவதில்லை, "ஒரு வெற்றிகரமான முடிவுக்கு கொண்டுச் செல்லக்கூடிய அளவுக்கு திறமை, தன்னம்பிக்கை மற்றும் பதவிக்கு ஏற்ற சுதந்திரமான தீர்மானங்களை எடுக்கும் திறனும் இல்லை".

"சம்பந்தப்பட்ட தரப்புடன் பேச்சு நடத்தி, எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்து அதனுடன் தொடர்புடைய அமைச்சர் அல்லது ஜனாதிபதியை சம்மதிக்க வைக்கும் துணிச்சல் இல்லாமை குறிப்பிடத்தக்க பலவீனமாக அமைந்துள்ளது".

## சட்டவிரோத சுற்றறிக்கைகள்

இவ்வாறாக அரச ஊழியர்களின் பேச்சு சுதந்திரத்திற்கு இடையூறான சுற்றறிக்கைகள் சட்டவிரோதமானது என, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை தொடர்பில் கருத்து தெரிவித்த, இரு சிரேஷ்ட தொழிற்சங்க தலைவர்களான, தேசிய தொழிற்சங்க முன்னணியின் தலைவர் சமன் ரத்னப்பிரிய மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர், குறிப்பிட்டுள்ளனர்.

நீதிமன்றத் தீர்ப்புகள் கூட அரச ஊழியர்களுக்குத் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும், அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் கொள்கைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதற்குமான உரிமையை உறுதிப்படுத்தியுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒடுக்கப்பட்ட ஆசிரியை ஒருவர் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்துகள் தொடர்பாக (2012) தொடுத்த அடிப்படை உரிமை வழக்கில், அரச ஊழியர்கள் தங்கள் விருப்பப்படி கருத்து தெரிவிக்க முடியும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய விடயத்தையும், கொரோனா சட்டத்தை பயன்படுத்தி அரசாங்கக் கொள்கைகளுக்கு எதிரான போராட்டங்களை நிறுத்த நீதிமன்ற உத்தரவை பொலிஸார் நாடிய சந்தர்ப்பத்தில், அத்தகைய உத்தரவு அடிப்படை சட்டத்திற்கு முரணானது என நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட விடயத்தையும் அவர்கள் நினைவூட்டியுள்ளனர்.

"போராட்டக்காரர்களுக்கு சுகாதார வழிகாட்டுதல்களை விளக்குமாறு நீதிமன்றம் காவல்துறையிடம் கூறியது" என சமன் ரத்னப்பிரியா கூறினார்.

"இந்த அரசாங்கத்தின் மக்கள் துரோக வேலைத்திட்டத்தினால் அரச ஊழியர்களும் அரசாங்கத்தின் சித்தாந்தத்திலிருந்து விலகிச் செல்கின்றனர். இந்த விவகாரத்தில் அவர்களை ஒடுக்கவும், அவர்களின் குரலை நசுக்கவும் இப்படி ஒரு சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது என்பது தெளிவாகிறது. இதுபோன்ற சட்டங்கள் கொண்டுவந்து அரச ஊழியர்களை அச்சுறுத்தி கருத்து தெரிவிக்கும் உரிமையை அரசாங்கம் கட்டுப்படுத்த முடியாது. எனினும், இந்த உத்தரவுகளை நாங்கள் தவிர்க்க முடியாமல் மீறுவோம். இந்தக் குற்றங்களில் இருந்து அரச ஊழியர்கள் வரை தொழிற்சங்க இயக்கமாக குடிமக்களின் உரிமைகளையும் நாங்கள் பாதுகாக்கிறோம்." என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

"உலகில் சமூக உரிமைகள் விரிவடைந்து வருகின்றன. இலங்கையில் இது சுருங்குகிறது அதனால்தான் இவ்வாறு நடக்கிறது" என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.



இவ்வாறான சுற்றறிக்கைகள் அரச ஊழியர்களின் அரசியல் மற்றும் தொழிற்சங்க உரிமைகள் மற்றும் 1947-48ஆம் ஆண்டுகளில் பொது வேலைநிறுத்தங்கள் மூலம் பெற்ற வெற்றிகளை அடிப்படையாகக் கொண்டவை என, இலங்கையின் சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவரான ஐக்கிய தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் லீனஸ் ஜயதிலக்க சுட்டிக்காட்டியுள்ளார். 75 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் அதற்கு சவால் விடுக்கப்படுவதாகவும், அதே போல் அதனை திசைத் திருப்ப முயற்சிக்கப்படுவதாகவும் இது அர்த்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த கடந்தகால ஜனநாயக சாதனைகளை பேணிக்காப்பது இன்றைய எமது பொறுப்பாகும் என லீனஸ் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE
எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனஅழுத்தம், தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்பந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்
All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss
முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்
Tel: (416) 754-4024
Member of College of Traditional Chinese Medicine
Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA
3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# உலகைச் சுற்றும் வைரக்கல், அதுதான் "கோஹினூர் வைரம்"

## அதைப் பற்றிய முழு வரலாறு

- விசாகன் (கனடா)

**கோ**ஹினூர் வைரம் இந்த பெயரைக் கேள்விப்படாதவர்கள் இல்லை. இந்தியாவின் வரலாற்று பொக்கிஷம், உலகின் மிகப்பெரிய வைரங்களில் ஒன்று, இங்கிலாந்து ராணியின் கிரீடத்தை அலங்கரிக்கும் விலைமதிப்பற்ற ஆபரணம் மற்றும் இன்னும் பல வரலாற்று பெருமைகளை பெற்ற ஒரு சிறிய கல் தான் இந்த கோஹினூர் வைரம். இந்த வைரத்தை இதுவரை யாரும் விற்பனை செய்ததும் இல்லை விலை கொடுத்து வாங்கியதும் இல்லை. கண்டுபிடிக்கப்பட்ட நாள் முதல் அந்த வைரம் ஒரு நபரிடம் இருந்து வேறு ஒரு நபரால் அபகரிக்கப்பட்டு கை மாறுகிறதே தவிர யாரும் இதனை விலை கொடுத்து வாங்கியது கிடையாது. இந்தியாவுக்கு சொந்தம் என்று கூறப்படும் இந்த கோஹினூர் வைரம் முகலாயர்கள், சீக்கியர்கள் என பல கைகள் மாறி இங்கிலாந்து அரச குடும்பத்திற்கு எப்படி சொந்தமானது? கோஹினூர் என்றால் பெர்சிய மொழியில் மலையின் ஒளி என்று பொருள். இந்த ஒளியால் வேட்டையாடப்பட்ட ராஜாக்களின் வரலாறும் அது பயணித்த விதமும் பயங்கரமானது. இந்த கோஹினூர் வைரத்திற்கு மிகப்பெரிய வரலாறு இருந்தாலும் ஆதாரமில்லாத வதந்திகளும் செவி வழி செய்திகளும் தான் அதிகமாக இருக்கிறது. 5000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட பண்டைய சமஸ்கிருத நூலில் கோஹினூர் பற்றிய குறிப்புகள் இருப்பதாக கூறப்படுகிறது. அதன் பின் சுமார் 4300 வருடங்களுக்கு முன்பு கோஹினூர் பற்றிய குறிப்புகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. 13ஆம் நூற்றாண்டில் ஆந்திர மாநிலம் குண்டூர் அருகே கொல்லூர் எனும் கிராமம் கிராமத்தில் இருந்த சுரங்கத்தில் கோஹினூர் வைரம் வெட்டி எடுக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. ஆனால் இன்னும் சிலர் கோஹினூர் கண்டெடுக்கப்பட்ட போது இந்தியா உட்பட உலகில் எங்குமே வைர சுரங்கங்கள் இல்லை என்று கூறுகின்றனர். 1720களில் பிரேசில் நாட்டில் தான் முதல் வைர சுரங்கம் அமைக்கப்பட்டது. அதற்கு முன்பு அல்பேனியா கருப்பு வைரத்தை தவிர வேறு எந்த பிரசித்தி பெற்ற வைரங்கள் தொடர்பான குறிப்புகளும் இருந்தது இல்லை.

13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குண்டூர் மசூலிப்பட்டினம் இடையே அமைந்திருந்த ஆற்றின் கரையோரத்தில் கோஹினூர் வைரம் கண்டெடுக்கப்பட்டதாக சில வரலாற்று அறிஞர்கள் வாதிடுகிறார்கள். அழிவின் விளிம்பில் இருந்த ஆறு பூமியின் கீழ் புதைந்திருந்த பல்வேறு அரிய வகை கற்களை மேற்பரப்புக்கு கொண்டு வந்ததாக அறிஞர்கள் கூறுகின்றனர். பச்சை, சிவப்பு, நீலம் என வித்தியாசமாக இருந்த கற்களில் பிரகாசமான ஒளி பிரதிபலித்து கண்களை கூச செய்ததில் வெள்ளைக் கல்லும் ஒன்று. அதுதான் கோஹினூர் வைரம். அப்போது அதுக்கு கோல்கொண்டா வைரம் என்று பெயர் சூட்டப்படுகிறது. ஒரு இருட்டு அறையில் வைக்கப்பட்ட விளக்கின் ஒளியை அந்த வெள்ளை கல் உமிழ்ந்தபோது அறை முழுதும் பிரகாசித்தது என்று கூறப்படுகிறது. வைரம் கண்டுபிடிக்கப்பட்ட ஆந்திரா உள்ளிட்ட பகுதிகளை சாளுக்கியர்கள் காகதியர்கள் ஆண்டு வந்தனர். கோஹினூர் வைரத்தை கண்டெடுத்த சாமானியன் ஒருவன் மன்னரிடம் கொடுத்து சன்மானம் பெற்றுக்கொண்டான். கோஹினூர் வைரத்தை பார்த்ததும் மக்களிடையே வதந்திகள் பரவ தொடங்கியது. இந்த வைரம் யாரிடம் இருக்கிறதோ அவரால் உலகத்தையே சொந்தம் கொண்டாட முடியும். ஆனால் ஏராளமான துரதிர்ஷ்டங்கள் அனுபவிப்பான் என்று செய்திகள் பரவத் தொடங்கியது. இதன்மூலம் சபிக்கப்பட்ட வைரமாக பார்க்கப்பட்டது கோஹினூர். இதனால் வைரத்தை பெற்ற காகதிய மன்னன் அதனை அம்மன் கோவில் ஒன்றுக்கு தானமாக வழங்கினார். அந்த காலத்தில் அரண்மனை கருவூலங்களில் சேமித்து வைக்கப்பட்ட செல்வங்களை விட கோவில்களில் பலமடங்கு செல்வங்கள் இருந்தது. அப்போதுதான் டெல்லியை ஆண்ட மன்னர்களில் மிகவும் வலிமை மிக்கவரான அலாவுதீன் தென்னிந்திய படையெடுப்பு மேற்கொண்டார். தென்னிந்திய அரசுகளை அடக்கி ஒடுக்க நினைத்த அலாவுதீன் தனது தளபதியின் தலைமையில் பெரும் படையை அனுப்பி வைத்தார்.

தேவகிரி, மைசூர் என ராஜ்ஜியங்களை வீழ்த்தி ஆயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்தார் மாலிக் கபூர். கோட்டைகள் அனைத்தும் அவர்களால் சூறையாடப்பட்டன. அதோடு கோவில்களும் கொள்ளையடிக்கப்பட்டது. கொள்ளையடிக்கப்பட்ட செல்வங்களை மாலிக் கபூர் டெல்லிக்கு எடுத்துச் சென்றார். அவற்றில் கோகினூர் வைரமும் ஒன்று. நாட்டு மக்கள் காணும்படி கொள்ளையடித்துக் கொண்டு வரப்பட்ட பொருட்கள் வைக்கப்பட்டது. ஆனால் காகதிய தேசத்தில் கூறப்பட்டது போன்று சில நாட்களிலேயே அலாவுதீன் நோய் உற்றார். அதோடு சில மாதங்களிலேயே அதாவது 1316 ஆம் வருடம் அலாவுதீன் உயிரிழந்தார்.

அவரின் உயிரிழப்புக்கு சபிக்கப்பட்ட வைரம் தான் காரணம் என்று பலர் கூறுகின்றனர். அதன் பிறகு 200 வருடங்களுக்கு கோஹினூர் தொடர்பான எந்த குறிப்புகளும் இல்லை. டெல்லியை ஆண்ட சுல்தானிடம் சென்று பின்னர் பல கைகள் மாறி 15ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முகலாய பேரரசர் பாபரின் கைக்கு வந்தது கோகினூர் வைரம். கோகினூர் வைரத்தின் உறுதியான வரலாற்று குறிப்பு 1526 ஆம் வருடத்தில் இருந்துதான் தொடங்குகிறது. அப்போது பாபரின் வைரம் என்று அழைக்கப்பட்டது கோகினூர் வைரம். அதன் ஒளி வீச்சை கண்ட பாபர் அதன் மதிப்பை அறிந்து கொள்ள ஆர்வம் கொண்டபோது உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் ஒருநாள் உணவுக்கு ஆகும் தொகை தான் இந்த வைரத்தின் மதிப்பு என அவரிடம் கூறப்பட்டது.

வைரம் கண்டுபிடிக்கப்பட்டது முதல் பட்டை தீட்டாமல் இருந்ததால் அதனை அழகுபடுத்த பாபர் நினைத்தார். எனவே 293 கேரட் எடை இருந்த வைரத்தை பட்டை தீட்ட பொற்கொல்லன் ஒருவனிடம் ஒப்படைத்தார். அதனை பொற்கொல்லன் என்ன செய்தார் என்பது தெரியாது 793 காரட் இருந்த வைரம் 186 கேரட் ஆக குறைந்து இருந்தது. கிட்டத்தட்ட 600 கேரட் வைரம் சேதாரம் ஆனது. இந்த கோஹினூர் வைரம் பாபரிடம் நிலைக்கவில்லை. அடுத்த சில ஆண்டுகளில் பாபரை எதிர்த்த இப்ராஹீமின் கைக்கு சென்ற கோஹினூர் வைரம் மன்னன் விக்ரம ஜித்திடம் சென்றது. இந்த காலகட்டத்தில் தான் புகழ்பெற்ற பானிபட் போர் ஆரம்பமானது.



போரில் விக்ரம ஜித் மரணம் அடைந்ததால் அவரது குடும்பம் ஆக்ரா அரண்மனைக்கு தஞ்சம் புகுந்தது. பாபரின் மகன் ஹுமாயூன் ஆக்ராவை கைப்பற்றிய போது விக்ரம ஜித் குடும்பத்தினர் தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ள கோஹினூர் வைரத்தை ஹுமாயூனுக்கு கொடுத்தனர். வைரத்தைப் பரிசாகப் பெற்ற ஹுமாயூன் விக்ரம ஜித் குடும்பத்தினரை ஆக்ரா கோட்டையில் இருந்து வெளியேற்றி சித்த ஊரிலுள்ள மேவாருக்கு கடத்தவும் அனுமதித்தார். ஆனால் அனைவரையும் போன்று ஹுமாயூன் கோகினூர் வைரத்தைப் பார்த்து வியந்து போகவில்லை.

முகலாயர்களின் பலர் தங்கத்திற்கு அடுத்ததாக பவளம் போன்ற நவரத்தின கற்களையே அதிகமாக விரும்புவர். இதனால் முகலாயர்களுக்கு பரிசளிப்பவர்கள் அதிகம் பவளங்கள் வைரங்கள் போன்றவற்றையே கொடுப்பார்கள். இந்த நவரத்தினங்களை வைத்து ஷாஜஹான் அழகான சிம்மாசனம் ஒன்றை தயார் செய்ய நினைத்தார். அந்த சிம்மாசனம் மயிலாசனம் என்று அழைக்கப்பட்டது. 1500 கிலோ தங்கத்தில் உருவாக்கப்பட்ட அந்த ஆசனத்தில் பவளம், வைடூரியம், கோமேதகம் என விலை உயர்ந்த அரிய கற்கள் பொறிக்கப்பட்டன. அவற்றில் கோஹினூர் வைரம் மிக முக்கியமானது. 1635 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் தேதி அந்த சிம்மாசனத்தில் சாஜஹான் அமர்ந்தார். சிம்மாசனத்தை உருவாக்க செய்யப்பட்ட செலவு 4 தாஜ்மஹால் கட்டுவதற்கு செய்யப்படும் செலவுக்கு சமம். இந்த காலகட்டத்தில் தான் தாஜ்மஹாலும் கட்டப்பட்டு வந்தது. முகலாய வம்சத்தின் வீழ்ச்சி முகமது ஷா ரங்கீலா காலகட்டத்தில் துவங்கியது. முன்னோர்களைக் காட்டிலும் ஆடம்பரத்தை விரும்பிய முகமது ஷா வாழ்நாள் முழுவதையும் கேளிக்கைகளில் கழித்தார். காலை வேளைகளில் யானைகளின் சண்டையை வேடிக்கை பார்த்து மகிழ்வார். மதிய நேரத்தில் விருந்துகளும் கேளிக்கைகளும் என்றால் மாலையும் இரவும் கலைஞர்களின் நடனம் இசை என பட்டியல் நீண்டு கொண்டே இருக்கும். அந்த காலகட்டத்தில் காபூல் முதல் வங்காளம் வரை பரவிக் கிடந்த முகலாய ஆட்சி கட்டுப்படுத்தும் தலையாய இடமாக இருந்த டெல்லி அந்த காலகட்டத்தில் உலகிலேயே மிகப் பெரிய நகரங்களின் வரிசையில் முக்கியமானதாக திகழ்ந்தது. லண்டன் மற்றும் பாரிஸ் நகரின் மக்கள் தொகையை சேர்த்தால் கூட டெல்லியின் மக்கள் தொகையை விட குறைவாகவே இருக்கும். மேலும் உலகில் உள்ள செல்வ செழிப்புமிக்க நகரங்களிலேயே டெல்லி திகழ்ந்ததால் அன்னியர்கள் டெல்லியை குறி வைக்கத் தொடங்கினார்கள். அதற்கு ஏற்றார்போல் மது கேளிக்கை போன்றவற்றிற்கு அடிமையாகி முகமது ஷா பலவீனமானது போல் அவரின் சாம்ராஜ்யமும் பலவீனமாகக் துவங்கியது.

1739 ஆம் ஆண்டு டெல்லியில் மீது பாரசீக மன்னன் நாதிர் ஷா படையெடுத்தார். அவரிடம் ஆப்கானிஸ்தான் மற்றும் பாரசீகத்தை பூர்வீகமாக கொண்ட ஐம்பத்தி ஐயாயிரம் போர் வீரர்கள் மட்டுமே இருந்தார்கள். அதேநேரம் முகமது ஷாவிடம் லட்சக்கணக்கான வீரர்கள் இருந்தார்கள் ஆனால் போர் வியூகம் அமைப்பதில் பாரசீக மன்னன் தெளிவாக இருந்தார். ஆனால் இதனை சாதாரணமாக எடுத்துக் கொண்ட முகமது ஷா எதிரிப்படை நூறு மைல் தொலைவில் வந்த பிறகுதான் தனது படையைத் திரட்டினார். முகலாய படையில் 10 லட்சம் பேர் இருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. ஆனால் அவர்களின் படையில் அனைவரும் தேர்ச்சி பெற்ற வீரர்கள் கிடையாது.

எதிரி படையின் மீது இருந்த பயத்தால் தனது அரண்மனையில் இருந்த புலவர்கள், கலைஞர்கள் என அனைவரையும் படையில் சேர்த்துக் கொண்டார் முகமது ஷா. டெல்லி எங்கும் மரண ஓலங்கள் ஒழிக்க 50 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. முகலாய அரசிடமிருந்து பாரசீக மன்னன் கொள்ளையடித்த செல்வங்கள் அனைத்தும் 700 யானைகள் 4000 ஒட்டகங்கள் 12 ஆயிரம் குதிரைகள் மூலமாக கொண்டு செல்லப்பட்டது. அதன் மதிப்பு தற்போதைய நிலவரப்படி ஒன்றரை லட்சம் கோடி ரூபாய் ஆகும். உலக வரலாற்றில் யுத்தத்தில் வெற்றி பெற்று கொள்ளையடித்துச் செல்லப்பட்டதில் மிகப்பெரிய தொகையாக இன்றுவரை பார்க்கப்படுவது இதுதான். இதில் ஷாஜஹானின் மயிலாசனம் அடங்கும்.

இந்த போரினால் கோஹினூர் வைரம் சொந்த நாட்டைவிட்டு போகத் தொடங்கியது. இந்த வைரத்திற்கு பாரசீக மன்னன் நாதிர் ஷா தான் கோஹினூர் என்று பெயர் சூட்டினார். கோஹினூர் என்றால் மலையின் ஒளி என்று பொருள். தன் நாட்டிற்கு செல்லும் வழியில் இதன் பிரகாசத்தை பார்த்த நாதிர் ஷா அதன் மதிப்பை அறிந்து கொள்ள விரும்பினார். அப்போது அவரது மனைவிகளில் ஒருவர் கோஹினூர் வைரத்தை சோதித்து பார்த்து ஒரு வலிமையான மனிதன் நான்கு கற்களை எடுத்து வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும், மேற்கிலும் எறிந்துவிட்டு ஐந்தாவதாக ஒரு கல்லை விண்ணை நோக்கி எறிந்த பின் அந்த ஐந்து கற்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் தங்கத்தால் நிரப்பினாலும் அதன் மதிப்பு கோஹினூர் வைரத்திற்கு இணையாகாது எனும் அழகான வர்ணனை நாதிர் ஷாவிடம் கூறினார். கனவில் கூட நினைத்து பார்க்க முடியாத அளவிற்கு கொள்ளையடித்து சென்ற நாதிர்ஷாவுக்கு இந்த விளக்கம் கர்வத்தை ஏற்படுத்தியது. ஒரு கட்டத்தில் கர்வம் தலைக்கேறியதால் போகும் வழியில் கண்ணில் தென்படுபவர்களை எல்லாம் கொன்று குவிக்கத் தொடங்கினார். காலம் செல்ல செல்ல அவரது நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்பட்டு படையில் உள்ள வீரர்களையே கொல்லத் துணிந்தார். இதனால் அவர் மீது பெரும் அதிருப்தி ஏற்பட்டது. நாதிர் ஷாவின் படையில் இரண்டு பிரிவினர் இருந்தனர் ஒன்று ஆப்கானிஸ்தானை பூர்விகமாகக் கொண்டவர்கள் மற்றொன்று ஈரானை பூர்வீகமாக கொண்டவர்கள் இதில் ஈரானை சேர்ந்த படைவீரர்கள் சிலர் இந்தியாவிலிருந்து செல்வங்களை ஈரானுக்கு கொண்டுசெல்லும் வழியிலேயே நாதிர் ஷாவை படுகொலை செய்தனர். கோஹினூர் கண்டெடுக்கப்பட்ட போது கூறப்பட்ட அதன் சாபத்தின் பற்றிய தெளிவான குறிப்புகளும் இங்கு இருந்துதான் துவங்குகிறது. சபிக்கப்பட்ட கோஹினூர் வைரத்தை கவர்ந்து சென்றதால் தான் நாதிர் ஷா கொல்லப்பட்டதாக இன்றளவும் வதந்திகள் உலவுகின்றன. நாதிர் ஷா மரணத்தைத் தொடர்ந்து பாரசீக படையில் கலகம் வெடித்தது. நாதிர் ஷாவை கொன்ற ஈரானிய படைகள் அவரது குடும்பம் மற்றும் வாரிசுகளையும் கொல்ல நினைத்தனர். ஆனால் அவர்களிடம் இருந்து ஆப்கானிஸ்தான் படையினர் நாதிர் ஷாவின் குடும்பத்தினரை பத்திரமாக மீட்டனர். இதற்கு நன்றிக்கடனாக ஆப்கான் படைத்தளபதி முஹம்மத் ஷாவுக்கு நாதிர் ஷாவின் மனைவி கோஹினூர் வைரத்தை பரிசாக வழங்கினார். அதன்பின் முஹம்மத் ஷா ஆப்கானிஸ்தானில் ராஜ்ஜியத்தை அமைத்து தனிக்காட்டு ராஜாவாக ஆனார். கோஹினூர் வைரத்தின் சாபம் அவரையும் விடவில்லை சில ஆண்டுகளிலேயே அவரது முகத்தில் கொப்பளங்கள் ஏற்பட்டு கோரமானது. அதனை மறைக்க இரும்பினால் ஆன முகமூடியை அணிந்து அவர் வாழ்ந்தார். அவரது இந்த நிலைக்கு கோஹினூர் வைரத்தின் சாபமே காரணம் என்று கூறப்பட்டது. காலங்கள் உருண்டோட ஆப்கானிஸ்தான் நாட்டில் நிகழ்ந்த பல போர்களில் ரத்த ஆறுகளுக்கு மத்தியில் ஒவ்வொரு ஆட்சியாளரின் கையில் இருந்தும் இன்னொருவருக்கு கோகினூர் வைரம் மாறியது. பல போர்களைப் பார்த்த கோஹினூர் வைரம் கடைசியாக இந்தியாவில் ரஞ்சித் சிங் அரசாண்ட போது அவரால் மீட்கப்பட்டது. 1813 இல் கோஹினூர் வைரத்தை மீட்ட ரஞ்சித் சிங் அதனை மிகவும் நேசித்தார். ஒருவழியாக இந்தியாவின் கவுரவம் மீட்கப்பட்டதாக அவர் பெருமிதம் கொண்டார். லாகூரை உள்ளடக்கிய பஞ்சாபை ஆண்ட ரஞ்சித் சிங் தன் தந்தையுடன் பத்தாவது வயதிலேயே முதல் போர்க்களத்தை பார்த்தவர்.

(தொடர்ச்சி _38__ பக்கம்)


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# கலைவாணரும் கவிவாணரும்



நக்கீரன்

**கோ**டம்பாக்கத்தை மையமாகக் கொண்ட தமிழ்த் திரையுலகில் வள்ளல் என்று பெயர் பெற்றவர்கள் இருவர். இருவருமே மூன்றேழுத்துகளால் அறியப்பட்டவர்கள் இன்னமும் மக்களால் புகழப்படுபவர்கள்.

அவர்களில் முதலாமவர் எம்ஜிஆர். அடுத்தவர் என்எஸ்கே. ஆனால், எம்ஜிஆருக்கு முன்னமே வள்ளல் என பெயரெடுத்தவர் என்எஸ்கே என்னும் என்.எஸ். கிருஷ்ணன். திரைப்படத் துறையில் தனக்கென ஒரு தனிப்பாணியை கைக்கொண்டு சிந்தனை கலந்த நகைச்சுவையை திகட்டாமல் கொட்டித் தந்த அவர், பின்னாளில் கலை-வாணர் என்றே அழைக்கப்பட்டார்.



சொந்தமாக திரைப்படத்தைத் தயாரித்த இவர், பள்ளிக்கூட வாசம் இல்லாதவர் சிறுவயது முதலே கலைநாட்டமும் சிந்திக்கும் தன்மையும் கொண்டிருந்தார். சிறுவனாக இருந்த காலம் தொட்டே வேலைசெய்யப் பழகிய இவர், என்ன வேலை கிடைத்தாடும் தயங்காமல் செய்தார் என்ன வேலை கொடுத்தாலும் தட்டாமல் செய்து வந்தார்.



இருந்தாலும் இவரின் ஒட்டுமொத்த எண்ணமும் கலைத் துறையின்மீதே நாட்டம் கொண்டிருந்தது. இந்தியாவின் சுதந்திர போராட்டம் 20-ஆம் நூற்றாண்டு தொடங்கக் காலத்தில் உச்சத்தைத் தொட்டது.

வில்லுப் பாட்டு கலைநிகழ்ச்சியின்வழி சுதந்திர வேட்கையை ஏற்படுத்திய கலைவாணர், அந்த வேளையிலும் நகைச்சுவையை இழையோட விட்டார். திரைப்படத் துறையில் நுழைந்ததும் தன் இல்லறத் துணைவியான மருதம் அம்மையாருடன் திரைப்படங்களிலும் இணைந்தே வாழ்ந்தார்.

உதவி என்று தன்னை நாடிவந்தவர்களை வெறுங்கையோடு அனுப்பவே மாட்டார். குடும்பத் தேவையைக்கூட மறந்துவிட்டு இருப்பதை எடுத்துக் கொடுத்துவிடுவார். இவரை நாடி வருபவர்களும் எப்படியும் ஏதாவது கிடைக்கும் என்ற முழு நம்பிக்கையுடன்தான் தேடி வருவார்கள்.

சிலவேளைகளில் கையில் பணம் இல்லையென்றால் பணவோலைக் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்த கலைவாணர், வங்கிக் கணக்கில் போதிய பணம் இருக்கிறதா என்பதைக்கூட சரிபார்க்காமல் பணவோலையைக் கொடுத்துவிடுவார்.

போதிய பணம் இல்லாமல், சம்பந்தப்பட்ட வங்கியில் இருந்து பணவோலை திரும்பியதும் மனம் திடுக்கிட்டு, அந்தப் பண்வோலைக்குரிய பணத்தை எப்படியாவது உடனடியாகத் திரட்டி, யாருக்கு பணவோலையைக் கொடுத்தாரோ அவரைத் தேடிச்சென்று வழங்கியதும் கலைவாணரின் வாழ்வில் நடந்துள்ளது.

கலைவாணர் உடல் நலம் குன்றி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நேரத்தில் இவரைப் பார்க்கச் சென்ற எம்ஜிஆர், தான் கொண்டுவந்த உதவி நிதியை தன் ஜிப்பாவில் இருந்து எடுத்து வழங்கியபோது, அதைப்பெற்றுக் கொண்ட கலைவாணர், இப்படி பெரியபெரிய நோட்டாகக் கொடுத்தால் இந்த மருத்துவமனையில் வேலைபார்க்கும் ஏழை எளிய மக்களுக்கு நான் எப்படி பிரித்துக் கொடுப்பது என்று கேட்ட கலைவாருக்கு பதில் ஏதும் சொல்லாமல், புன்னகையை மட்டும் பதிலாகத் தந்துவிட்டு, கலைவாணரின் இருகரங்களையும் பற்றி விடைசொல்லிப் புறப்பட்டாராம் எம்ஜிஆர்.

அடுத்த முறை வரும்போது அப்படி கொண்டு வருகிறேன் என்று எம்ஜிஆரும் சொல்லவில்லை எவரிடத்தும் கேட்கும் வழக்கத்தைக் கொண்டிராத கலைவாணரும் அப்படி கேட்கவில்லை. ஆனால், இருவரும் சந்தித்தது அதுதான் கடைசிமுறை.

ஒரு பத்திரிகையாளர் எப்படி வாழக்கூடாதோ அந்த மாதிரி திரிந்த லட்சுமி காந்தன் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு எம்.கே. தியாகராஜ பாகவதருடன் சிறை சென்றவர் கலைவாணர், பிரிட்டிஷ் ஆட்சியில் உயர்நீதி மன்றத்தைப் போல செயல்பட்ட ப்ரைவி கௌன்சிலால் பின்னர் இருவரும் விடுவிக்கப்பட்டாலும், சிறைவாசக் காலத்தில் மனமும் உடலும் பாதிக்கப்பட்ட கலைவாணர் 49 வயதிலேயே மறைந்தார்.

அவர் மறைவதற்குமுன் கடைசியாக கலந்து கொண்ட பொது நிகழ்ச்சி அறிஞர் அண்ணாவுடன் கலந்து கொண்டது் அதைப்போல அறிஞர் அண்ணா கலந்து கொண்ட கடைசி நிகழ்ச்சி கலைவாணர் சிலையைத் திறந்து வைத்ததுதான்.

சுயமரியாதை உணர்வாளரும் திராவிட இயக்க சிந்தனையாளருமான கலைவாணர், சிறைவாசத்திற்குப் பின் திராவிடர் இயக்கத் தலைவர்களின் ஆதரவுடன் தன் கலைப்பயணத்தைத் தொடர்ந்தாலும் உடல் நலம் மேலும் பாதிக்கப்பட்டு அரை நூற்றாண்டுகூட வாழ முடியவில்லை. அவர் பிறந்த நாள் நவம்பர் 29 (1908).

கலைவாணருடன் சேர்ந்து விடுதலை ஆன பாகவதருக்கும் உதவு முன்வந்தார் அறிஞர் அண்ணர் ஆனால், பக்தி மார்க்கத்தில் ஊறித் திளைத்த பாகவர், திராவிட இயக்கத்தவரின் உதவி தேவையில்லை என்று இறுமாப்புடன் மறுத்துவிட்டார். பாகவதர் தனியாக மேகொண்ட கலைப்பயணம் தோல்வியில்தான் முடிந்தது.

கலைவாணரின் படங்களுக்கு பாடல் எழுதும் கவிஞர்களில் ஒருவராக அ.மருதகாசியும் இருந்தார். என்.எஸ்.கே-வின் புகழ்பெற்ற பாடலான "சிந்திக்கத் தெரிந்த மனிதகுலத்துக்கே சொந்தமான கையிருப்பு" என்று சிரிப்பை மையப்படுத்தி இயற்றப்பட்ட பாடல் மருதகாசி புனைந்தது.

திரைப்பட பாடலாசிரியரான மருதகாசியும் கலைவாணரைப் போல உதவும் மனப்பான்மையும் புதிய கவிஞர்களை அரவணைக்கும் தன்மையும் கொண்டிருந்தார்.


இளங்கவிஞர் வாலி பாட்டெழுத வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்த காலத்தில், நல்லவன் வாழ்வான் என்ற படத்துக்காக "சிரிக்கின்றாள் இன்று சிரிக்கின்றாள்" என்ற பாடலை எழுதினார். ஆனாலும் அந்தப் பாடலுக்கான ஒலிப்பதிவு எதிர்பாராத காரணங்களால் தள்ளிப்போய்க்கொண்டே இருந்தது. புதுப்பாடலாசிரியர் வாலி எழுதியதால், சகுனம் சரியில்லை போலும் எனவே, பழம்பெரும் பாடலாசிரியர் மருதகாசியை வைத்து எழுதலாம் என்று படக்குழுவினர் முடிவெடுத்தனர்.

மாற்றுப் பாடல் எழுத வந்த மருதகாசி, முதலில் வாலி எழுதிய பாடலைக்கேட்டு வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு, புதுக்கவிஞர் வாலி மிகச் சிறப்பாக எழுதியிருக்கிறார். இதையே பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு நிற்காமல் சென்றாராம்.

வளர்ந்து வரும் கவிஞரான தன்னைத் தாய்போல் ஆதரித்த மருதகாசியின் சக கவிநேசத்தை மனம் நெகிழ்ந்து கவிஞர் வாலி தான் இயற்றிய நானும் இந்த நூற்றாண்டும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளதுடன் அவரைப்பற்றி இவ்வாறு பாவும் புனைந்துள்ளார்.

படத்துறை இவரால்
பயன்கள் பெற்றது
பழந்தமிழ் இவரால்
புதுத்தமிழ் ஆனது

அடக்கம் இவரது
அணிகலம் என்பேன்
அகந்தை யாதென
அறியா பெம்மான்



என்பதுதான் அப்பாராட்டுப் பா.

பெரும் இசை மேதைகளான ஜி.ராமநாதன், கே.வி. மகாதேவன், எஸ்.தட்சிணாமூர்த்தி, விஸ்வநாதன்-ராமமூர்த்தி ஆகியோரின் இசையில் ஏராளமான பாடல்களை மருதகாசி எழுதியுள்ளார்.

திரைப்படத் துறை-யைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு குணமுண்டு கொஞ்சம் பணம் சேர்ந்துவிட்டால், சொந்தமாக படம் தயாரிக்க முற்பட்டு நட்டம் அடைவதுண்டு. அந்த வரிசையில் சேர்ந்த மருதகாசி-யும் பணமுடைக்கு ஆளான காலகட்டத்தில் (1960-களில்) கண்ணதாசனுக்கே வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

அதனால் சொந்த ஊருக்கே திரும்பிச் சென்று சோர்வாக இருந்தவருக்கு மறுவாழ்வு அளித்தவர்கள் எம்.ஜி.ஆரும் அவரின் முதலாளி சாண்டோ எம்.எம்.ஏ. சின்னப்பா தேவரும்தான்.

சின்னப்பா தேவர் தயாரித்த விவசாயி படத்தின் அத்தனை பாடல்களையும் இவர்தான் எழுதினார். குறிப்பாக நல்ல நலம் நிலம் பார்த்து என்று தொடங்கும் பாடலைக் குறிப்பிடலாம. அத்திரைப்படத்தின் பாடல்கள் இன்றும் கருத்துச் செறிவும் சமுதாயக் கண்ணோட்டமும் உடையதாகப் பாராட்டப்படுபவை.

திரைக்கவித் திலகம் என்னும் பட்டம் பெற்ற மருதகாசியின் திரையிசைப் பாடல்களையும் புத்தகங்களையும் தமிழக அரசு நாட்டுடைமை ஆக்கியுள்ளது. தமிழ்த் திரையிசைப் பாடல்களில் தனி முத்திரை பதித்த மருதகாசி, இதே நாளில் (நவம்பர் 29,1989) 69 வயதை எட்டிய நிலையில் காலமானார்.

**நக்கீரன் -** Nakkeeran **013-244 36 24**
**கோலாலம்பூர்**

# அன்பின் தொனி - 632

பரிசுத்தராய் இருங்கள் - **Be Holy**
7. தேவனுடைய உண்மை – The faithfulness of God

j) தேவன் எங்குமிருக்கிறார் (சாவ வியாபி)
உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர், நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது, இரவும் பகலைப் போல வெளிச்சமாயிருக்கும், உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.- சங்கீதம் 139: 7-12
கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார், அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கி றோம், அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்.- அப்போஸ்தலர் 17: 27-28

k) தேவன் அனைத்து வல்லமையையும் உடையவர் (சர்வ வல்லவர்)
ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஂ‘டித்தார்.- ஆதியாகமம் 1: 1
அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.- கொலோசேயர் 1: 17
ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினா லும், வானத்தையம் பூமியையும் உண்டாக்கினீர், உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை.- எரேமியா 32: 17
இயேசு, அவர்களைப் பார்த்து: மனு‘ரால் இது கூடாததுதான், தேவனாலே எல்லாம் கூடும் என்றார்.- மத்தேயு 19: 26
l)தேவன் நித்திமானவர் அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை
அறிந்துகொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத்
தந்தி ருக்கிறாரென்றும் அறிவோம், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து
என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம், இவரே மெய்யான தேவனும்
நித்தியஜீவனுமாயிருக்கிறார்.- 1 யோவான் 5: 20

ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர். பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்.- சங்கீதம் 90: 1-2
நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்.- வெளிப்படுத்தல் 22: 13

மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென், நான் மரணத்திற்கும் பாதாளத் திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.- வெளப்படுத்தல் 1: 18
**m)** தேவன் என்றும் மாறாதவர் நான் கர்த்தர், நான் மாறாதவர், ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாகவில்லை.- மல்கியா 3: 6
இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.- எபிரேயர் 13: 8

நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது, அவரிடத்தில்
யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.- யாக்கோபு 1: 17
பாவம் மனிதனுடைய வாழ்க்கையைப் பாதிக்கிறது
பாவம் எவ்வாறாகவும், எவ்வளவாகவும், ஒவ்வொரு மனிதனையும் அவனுடைய வாழ்க்கையையும் பாதிக்கிறது என்பதை நாம் தெரிந்து அதன்படி எமது வாழ்க்கையைச் சீர்படுத்தி வாழ்வது மிகவும் அவசியம்.
பாவம் தேவனிடமிருந்து நம்மைப் பிரிக் கிறது
உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது, உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. ஏனென்றால், உங்கள் கைகள் இரத்தத்தாலும், உங்கள் விரல்கள் அக்கிரமத்தாலும் கறைப்பட்டிருக்கிறது, உங்கள் உதடுகள் பொய்யைப் பேசி, உங்கள் நாவு நியாயக்கேட்டை வசனிக்கிறது.
நீதியைத் தேடுகிறவனுமில்லை, சத்தியத்தின்படி வழக்காடுகிறவனுமில்லை, மாயையை நம்பி, அபத்தமானதைப் பேசுகிறார்கள், தீமையைக் கர்ப்பந்தரித்து, அக்கிரமத்தைப் பெறுகிறார்கள்.- ஏசாயா 59: 2-4

2. பாவம் நமக்கு குற்ற உணர்வை உண்டாக்குகிறது
என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப் பெருகிற்று, அவைகள் பாரச்சுமையைப்போல என்னால் தாங்கக்கூடாத பாரமாயிற்று. என் மதிகேட்டினிமித்தம் என் புண்கள் அழுகி நாற்றமெடுத்தது. நான் வேதனைப்பட்டு ஒடுங்கினேன், நாள்முழுதும் துக்கப்பட்டுத் திரிகிறேன். என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது, என் மாம்சத்தில் ஆரோக்கியம்இல்லை. நான் பெலனற்றுப்போ ய், மிகவும் நொறுக்கப்பட்டேன், என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன்.ஆண்டவரே, என் ஏங்கலெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது, என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் உள்ளம் குழ ம்பி அலைகிறது, பெலன் என்னை விட்டு விலகி, என் கண்களின் ஒளி முதலாய் இல்லாமற்போயிற்று.- சங்தம்38: 4-10

*தொடரும்*

சிறுகதை:

# கேட்டிருப்பாயோ காற்றே...!

- மு.சிவலிங்கம்



இவ்வளவு காலமும் சிங்களச் சண்டியர்கள்தான் வீடுகளுக்கு நெருப்பு வைத்து, தமிழர்களை விரட்டித் துரத்திய சம்பவங்களைப் பார்க்க முடிந்தது... இப்போது... தமிழ்ச் சண்டியர்கள் தமிழர்களின் வீடுகளுக்கு நெருப்புவைத்து, அடித்துத் துரத்துவதைப் பார்த்த வேலாயுதம் மாஸ்டரின் கண்கள் நம்ப மறுத்தன...

அச் சம்பவம் கனவில் நடப்பதாக நினைத்துக்கொண்டிருந்த அவரின் சட்டையைப் பிடித்து ஒருவன் இழுத்துத் தள்ளும் போதுதான் சுய உணர்வு வந்தது... நடப்பது உண்மை சம்பவமே என்று... விழுந்தவர் எழுந்து மெதுவாக நடந்தார்...

சக தமிழனிடம் அப்படி அடி வாங்குவதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை... உடலில் ஏற்பட்ட வலியை விட மனதில் அடிபட்ட வலியை அவரால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை... இனி... தமிழர்களோடும் சேர்ந்து வாழ நினைத்த நம்பிக்கை அற்றுப் போனதாய் அவர் மனம் விரக்தியடைந்தது. கடைசி காலத்தில் இனத் தோடு இனமாய் சேர்ந்து
வாழலாம்... என்ற நப்பாசையும் இன்றோடு விட்டுப் போனது...

---

வேலாயுதம் மாஸ்டர் காலி மாவட்டத்தில் நடந்த இனக் கலவரத்தில் அடிப்பட்டு, கட்டியத் துணியோடு மனைவி, மக்களை இழுத்துக் கொண்டு, செட்டிக்குளத்துக்கு வந்துச் சேர்ந்தவர். குருவி மாதிரி நாற்பது வருசங்கள் உழைத்துச் சேமித்தப் பணத்தில் வீடு கட்டி, தோட்டம், துறவு தேடி, இரண்டு மகன்மார்களையும் ஒரு மகளையும் வளர்த்தெடுத்த இறுமாப்பில் வாழ்ந்துக் கொண்டிருந்த போதுதான் 77ம் ஆண்டு ஆடிக் கலவரம் முதற் கட்டத்தை ஆடி முடித்தது...

இரவு ஏழு மணி கூட ஆகவில்லை.

மாஸ்டர் வீட்டுக் கதவு உதைக்கப்பட்டது... பின்னர் உடைக்கப்பட்டது... பெற்றோல் கேனை வீட்டுக்குள் விசிறினான் ஒருவன்...

"பன பேராகென துவப்பன் எலியட்ட..." (உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வெளியே ஓடு) என்றான் இன்னொருவன்...

அவனைத் தொடர்ந்து திமு... திமு... வென காடையர் கூட்டம் வீட்டுக்குள் நுழைந்தது... ஏற்கனவே வதந்தியைக் கேள்விப்பட்டிருந்தவர், விசயத்தைப் புரிந்துக் கொண்டு, மனைவி, பிள்ளைகளோடு வெளியே ஓடிவந்தார்...

பெற்றோல் தீயில் வீடு குபீரென எரிந்து வெளிச்சத்தைக் காட்டியது... கம்பு, கத்தி ஆயுதங்களுடன் விரட்டி வருபவர்களிடம் அகப்படாமல், ஓடி மறைந்து, பதுங்கிப் பதுங்கி... கால்கள் காட்டியப் பாதையில் எங்கோ விளக்கெரியும் ஒரு வீட்டருகில் போய் நின்றார்கள்... அதுவும் ஒரு சிங்களக் குடும்பம்... திரும்பிப் போக நினைத்தவர்களை, அவர்கள் அழைத்து வீட்டுக்குள் மறைந்திருக்கும்படி சொன்னார்கள்.

அக்கம் பக்கத்திலும் தூரத்திலும் சத்தங்கள்... ஓலங்கள்... அதிர்ச்சியைக் கொடுத்துக் கொண்டிருந்தன... வீட்டுக்காரர்கள் வேலாயுதம் குடும்பத்துக்கு ஆறுதல் சொன்னார்கள்...

இரவு சாப்பாடும்... மாற்றுத் துணிகளும்... கொடுத்தார்கள்... விடிந்ததும் ஊருக்கு வெளியே அழைத்து வந்து பஸ் ஏற்றிவிட்டார்கள்... பிரயாணச் செலவுக்குப் பணமும் கொடுத்தனுப்பினார்கள்... அவர்கள் இனவாதிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் அப்பாற்பட்ட மனிதாபிமானிகளாக இருந்தார்கள்...

---

காலி, தெணியாய தோட்டத்திலிருந்து, துரத்தப்பட்டபோது மூட்டை, முடிச்சுக்கள் கிடையாது... கட்டிய துணியோடுதான் ஓடி வந்தனர்... இன்று வவுனியா செட்டிக்குளத்திலிருந்து துரத்தப்பட்ட போதும், மூட்டை, முடிச்சுக்கள் கிடையாது.

விடிய... விடிய... குழந்தை, குட்டிகளோடு நெடுஞ்சாலை தார் ரோட்டில் உட்கார்ந்துக் கிடந்து, விடியற்காலையில் எழும்பி குடியிருந்தக் காணிகளை, அத்தனைக் குடும்பங்களும் போய் பார்த்தனர். குடிசைகள் சாம்பல் மேடுகளாய் கிடந்தன. பயிர்களுக்கு எந்த சேதமும் நடக்கவில்லை... அதுவரை அவர்கள் மனதைத் திடப்படுத்திக் கொண்டார்கள்...

செட்டிக்குளம் டி.ஆர்.ஓ. காரியாலயத்தை அதிகாலையிலேயே போய் முற்றுகையிட்டார்கள்... முற்றுகையிட்டார்கள் என்றுகூட சொல்ல முடியாது, அவர்கள் போராட்டம் செய்யும் ஆவேசத்திலோ, நீதி கேட்கும் நோக்கத்திலோ இல்லாமல், அபயம் கேட்கும் நிலையில் மருவி நின்றார்கள்...

ஒன்பது மணியளவில் டி.ஆர்.ஓ. காரில் வந்து இறங்கினார். காரியாலயத்துக்குள் நுழையாமலேயே படிக்கட்டில் ஏறி நின்று, குழுமியிருக்கும் கூட்டத்தைப் பார்த்து பிரசங்கம் செய்வது போல பேசத் தொடங்கினார்.

அவரின் பேச்சிலிருந்து முன் கூட்டியே நடந்த சம்பவங்கள் யாவும் அவர் அறிந்தவையாகவிருந்தன...

"நீங்கள் மலைநாட்டிலிருந்து வந்தச் சனங்கள்... யாரையும் கேக்காமல், காணி பிடிச்சு, குடிச போட்டு, விவசாயமும் செய்தனீங்கள்... உங்களுக்கு யார் அதிகாரம் தந்தது..? யார் கொட்டில் போடச் சொன்னவை...? யார் காணி பிரிச்சுக் கொடுத்தவை...? சொல்லேலுமோ...?" என்று உரத்தத் தொனியில் வினாக்களைத் தொடுத்தார்.

"ஐயா... நாங்க அகதி சனங்க... எங்க குடிசைகள எரிச்சிட்டாங்க... காணியில் நிக்கவுடாம வெரட்டிட்டாங்க... எங்களுக்குப் போக ஊர் கெடையாது..."

கலவரத்துல காலியிலயிருந்து சிங்களவங்க வெரட்டியடிச்சாங்க "புள்ளக் குட்டிகளோட உயிரப் பாதுகாத்துக்கிட்டு, இங்க ஓடி வந்தோம்... இங்கேயும் அடிச்சு கலைச்சா நாங்க எங்க போறது... எங்க உயிர் வாழ்றது...? நீங்களேதான் அரசாங்கம்... நீங்கதான் எங்களுக்கு ஒதவி செய்யணும்..." என்று கூட்டத்திலிருந்த ஒருவர் தெளிவாகப் பேசினார்...

அரசாங்க அதிகாரிக்குக் கோபம் வந்து விட்டது...

"சும்மா விசர்கதை கதைக்காதே..." என்று பாய்ந்தார்.

"கொட்டில்கள எரிச்சிருப்பினம்... ஆக்கள விரட்டி இருப்பினம்... ஊர் சனங்கள் குழம்பும் போது, எங்களாலை ஒன்டும் செய்யேலாது...! நீங்க நல்லபடியா உங்கட ஊர் பக்கம் போய்ச் சேருங்கோ... நாங்க எங்கட சட்டம் ஒழுங்க கவனிக்க உதவி செய்யுங்கோ..." என்று பேச்சை முடித்து, திரும்பிப் பார்க்காமல் காரியாலயத்துக்குள் நுழைந்து விட்டார்.

பியோன் வந்து கதவைச் சாத்தினான். விக்கித்து நின்ற குடும்பங்கள் மத்தியில் மரண அமைதி நிலவியது... அங்கே வந்திருக்கும் அத்தனை குடும்பங்களும் டி.ஆர்.ஓ. காரியாலயத்தின் அருகிலேயே உட்கார்ந்து விட்டனர்... போக்கிடம் தெரியாத நிலை...

"அந்த அரசாங்க அதிகாரி, நாங்க காடு வெட்டுறப்பவே எங்கள் வெரட்டி யிருக்கலாம். அந்த மனுசன் கபடக்காரன்... துரோகத்தனமா எங்கள பாவிச்சியிருக்காரு... காடுகள் அழிச்சி... காணி உண்டாக்கி... கெணறு வெட்டி, பயிர் பச்ச வளந்தப் பொற்கு நடவடிக்க எடுக்கிறாரு... இவரு ஒரு தமுழ் அதிகாரி... தமுழ் சனங்களுக்கு ஒதவி செய்வாருன்னு நம்பிக் கெட்டுப் போனோம்..." என்று ஒருவர் முணுமுணுத்தார்....

"பாவி மனுசன்... இவ்வளவு காலமும் சும்மா இருந்திட்டு, இப்ப நிக்க வச்சி கழுத்த அறுக்கலாமா..?" என்று ஒரு பாட்டி அங்கலாய்த்தாள்...

"வேலாயுதம் மாஸ்டர் கடந்த கால நடப்புக்களைச் சொன்னார்... நாங்க இன்னைக்கி நேத்தா வடக்குல வந்து குடியேறியிருக்கோம்.... பிரிட்டிஷ் காரேன் காலத்திலேயிருந்து முல்லத்தீவு, கிளிநொச்சி, வவுனியான்னு நம்ம சனங்க இன்னைக்கி வரைக்கும் காணி நெலத்தோட வாழ்ந்துக் கிட்டுதான் இருக்காங்க... இப்ப மட்டும் இந்த அதிகாரிக்கு என்னா நடந்திருச்சி...? வந்த வழியப் பாத்துக்கிட்டு போகச் சொல்றாரு...?"

வேலாயுதம் மாஸ்டர், முழு சிங்கள பிரதேசமான காலி மாவட்டத்தில் தமிழனாகப் பிறந்து... கொட்டை போட்டு பழம் தின்றவர். தெணியாய தோட்டத்தில் தமிழ் வாத்தியாராக இருந்தவர்... எத்தனையோ சிங்களவர்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தவர்... நாட்டின் நடைமுறை அரசியலை நன்றாக அறிந்தவர். டீ.ஆர்.ஓ காரியாலய வாசலில் கூடியிருக்கும் மக்களிடம் கடந்த கால அனுபவங்களைப் பகிர்ந்துக் கொண்டிருந்தார்...

"ஒவ்வொரு வன்செயல் காலத்திலேயும் சிங்கள இனவாதிக்கிட்ட நாங்க அடிபடுறப்பயெல்லாம்... மலையகத் தலவருங்க அரசாங்கக் காலடியிலேயே கெடந்தாங்க..! தானாடாட்டியும் அவுங்க சதகூட ஆடாமப் போச்சி... வட பகுதி தமிழ்த் தலவர்மாருங்கதான் ஆதங்கப்பட்டாங்க... வடக்குல குடியேற எவ்வளவோ ஒதவி செஞ்சாங்க... அவுங்ககிட்டேயும் மலைநாட்டுத் தமிழ் சனங்களப் பத்தி வெவ்வேறு கருத்து வேறுபாடு இருந்திச்சு... தலவர் செல்வநாயகம் நம்ம சனங்கள ஆதரிச்சாரு... மந்திரி பொன்னம்பலம் வெறுப்பு காட்டினாரு...

அவர் தொடர்ந்து பேசினார்... காந்தியம் நிறுவனத்தையெல்லாம் மறக்க முடியுமா...?" ஓமந்தை, குருவிமேடு, பம்பைமடு, செக்கடி பிளவு, கணேசபுரம், கல்லியங்காடு... குடாச்சூரி... வாரிக்குட்டியூர்... கப்பாச்சி, அழகாபுரி, நேரியக்குளம், நித்திய நகர் ஆகிய கிராமங்களையெல்லாம் மூச்சு விடாமல் வாய்விட்டுக் கூறி... கடந்த கால நினைவுகளை மீட்டிக் கொண்டிருந்தார்...

கதை கேட்டுக் கொண்டிருந்த அவர்களின் கவனத்தை திருப்பும் வகையில் காரியாலய பியோன் வந்து கத்தினான்....

"இஞ்சை நிக்காதிங்கோ... ஒருத்தரும் இவ்விடத்தில் இருக்கக் கூடாது... பொலிஸ் வரப்போகுது..." என்றான்.

டீ.ஆர்.ஓ. காரியாலயத்தில் கூடி இருந்த யாவரும் நெடுஞ்சாலையை நோக்கி நகர்ந்தார்கள்...

இன்று நெடுஞ்சாலையில் நிற்கும் வேலாயுதம் மாஸ்டர், அன்று அந்த இனக் கலவரத்தில் மாட்டி, தத்தளித்த போது, உயிர் பிச்சைக் கொடுத்து, தங்களைக் காப்பாற்றி அனுப்பிய அந்த சிங்களக் குடும்பம் வாழும் தென் மாகாணத்தை நோக்கி செட்டிக்குளத்திலிருந்து கை கூப்பிக்கும்பிட்டார்...!

செட்டிக்குளத்தில் பூர்வீகமாக வாழும் பெரியவர் ஒருவர் வேலாயுதம் மாஸ்டரின் காதுகளில் குசு குசுத்தார்....

"கந்தோர் பெரியாள் டீ. ஆர்.ஓ. தான் நெருப்பு வைக்கச் சொன்னவர்... குடியிருந்தச் சனங்கள அடிச்சிக் கலைக்கச் சொன்னவர்... உங்கள அடிச்சி கலைச்ச பெடியள்மார்களுக்குத்தான் உங்கட காணியெல்லாம் பயிர் பச்சையோடு சொந்தமாகப் போகுது...! இத மனசுல வச்சிக்கொள்ளுங்கோ... பிடிச்சக் காணிகள் விட்டுப் போட்டு போகாதீங்கோ... போராடிப் பாருங்கோ... நீதி கிடைக்கும்... வருத்தமா இருக்கு... நீங்களும் எங்கட தமிழ்ச் சனங்கள்..." என்றவர் அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்.

வியர்த்துப் போய் நின்ற வேலாயுதம் மாஸ்டருக்கு பெரியவரின் கடைசி வார்த்தை பாலையில் ஊறிய சுனையாகத் தெரிந்தது...

கலவரத்தில் பாதிக்கப்பட்டு வந்த மக்களை, வவுனியா பிரதேசத்தில் குடியேறும்படி ஆதரவு காட்டியவர்கள்... குடியேறக் கூடிய இடங்களைக் காட்டி "முடிஞ்சதை செய்து கொள்ளுங்கோ..." என்று கண்களைக் காட்டி விட்டுச் சென்றவர்கள், இந்த துரதி'டமான வேளையில் எவரையும் காண முடியவில்லை ..

---

அகதிகளாக வந்த குடும்பங்கள், அவர்கள் காட்டிய காட்டுப் பகுதிகளை சுத்தம் செய்தார்கள்... நிலத்தைக் கொத்தினார்கள்... வேலிகள் போட்டுக் கொண்டார்கள்... கிணறு தோண்டி தண்ணீரை எடுத்தவர்கள் எல்லையற்ற சந்தோசமடைந்தார்கள்... உளுந்து, பயறு, கவ், கச்சான், எள்ளு, சோளம், பப்பாசி யாவும் புது மண்ணில் செழிப்புடன் பசுமை காட்டி வளர்ந்தன.

முதல் அறுவடையில்... குடிசைகளை, வீடுகளாகக் கட்டிக்கொள்ள வேண்டும்... கூரைத் தகரங்கள், சீமெந்து கல்லுகள்... காலம் போகப் போக மின்சாரம் என்றெல்லாம்... அவசர அவசரமான திட்டங்கள் மனதுக்குள் குவிந்து நிறைந்தன...

அடிக்கடி இவர்களது குடியிருப்புப் பிரதேசங்களில் நோட்டமிட்டுச் சென்ற நபர்களைப் பற்றி இந்தப் பாமரக் குடும்பங்கள் அறிந்திருக்க வில்லை...

கிராம சேவகர்கள் அகதிகள் குடியிருக்கும் நிலங்களில் வந்து விபரங்களைத் திரட்டிக் கொண்டிருந்தார்கள்... இவர்கள் எந்தப் பிரதேசத்து அகதிகள்...? பலாத்காரமாக குடியிருப்பதற்கான காரணங்கள் யாவை...? குடும்பத் தலைவர்கள் யாவர்...? உழைக்கக்கூடியவர்கள் இருக்கின்றனரா...? என்றெல்லாம் வினா எழுப்பிக் கொண்டிருந்தவர்களிடம், தமிழ்க்குடி வாசிகள் பலர் வந்து எதிர்ப்பு தெரிவித்தார்கள்....

இங்கே குடியிருப்பவர்கள் மலைநாட்டுத் தமிழர்கள் என்றும், சொந்த ஊர்களுக்கு அவர்கள் போய் விடுவார்கள் என்றும்... அவர்களுக்கு இங்கே காணிகள் கொடுக்கக் கூடாது என்றும்... அவர்கள் இந்த ஊர் தமிழர்கள் அல்ல என்றும்... கண்டனக் குரல்கள் எழுப்பிக் கொண்டிருந் தார்கள்.

"நாய்கள் நாய்களின் இறைச்சியை சாப்பிடுகின்றன..." ஒரு சீன நாட்டுப் பழமொழி... இந்தப் பரபரப்பான சூழ்நிலையை அங்கீகரித்துக் கொண் டிருந்தது ..

வந்திருந்த சிங்கள கிராம சேவகர்களுக்கு நாட்டில் வாழும் தமிழர்கள் வெவ்வேறு இனங்களானவர்கள்... என்பதை அன்றுதான் விளங்கிக் கொள்ள முடிந்தது. இவ்வளவு காலமும் தமிழர்கள் எல்லாம் ஒரே இனம் என்று நினைத்துக் கொண்டிருந்த தங்களது முட்டாள்தனத்தை எண்ணி, விபரங்கள் சேகரிக்காமலேயே , மனதுக்குள் சிரித்துக் கொண்டு, திரும்பிச் சென்றார்கள்...!

(தொடர்ச்சி _33_ பக்கம்)

(_32__ பக்கத் தொடர்ச்சி)

வேலாயுதம் மாஸ்டர் நேற்று இரவு நடந்த அந்தக் கொடூரமான சம்ப வத்தை மீண்டும் நினைத்துப் பார்த்தார்.

அந்திப் பொழுது...

இருள் கவ்வும் நேரம்...

அந்தச் சம்பவம் நடந்தது...

சண்டியர்கள் பலர் மது அருந்தியவர்களாக வெறியோடு, சத்தம் போட்டுக் கொண்டு, குடிசைகளில் இருந்தவர்களை, குழந்தைக் குட்டிகளோடு வெளியே விரட்டி, குடிசைகளுக்கு நெருப்பு வைத்தனர்... அவர்கள் சிங்களவர்கள் அல்ல... தமிழ் வாலிபர்கள்... பயங்கரமாகத் தோற்ற மளித்தார்கள்... கம்பு, தடிகள், வெட்டருவாள் என ஆயுதங்களோடு அவர்களை நெடுஞ்சாலைக்கு விரட்டிக் கொண்டிருந்தார்கள்...

இதுவரை காலமும் சிங்களச் சண்டியர்களின் அட்டகாசங்களையே அனுபவித்து வந்தவர்களுக்கு, இந்தக் காடையர்கள் புதுமையாகவும் நம்ப முடியாதவர்களாகவும் தெரிந்தார்கள்...

“ஐயோ தம்பிகளா..! ஐயோ ராசா..” என்று வயதானவர்கள் கூக்குர லிட்டார்கள்... கண் மண் தெரியாமல், அடிகள் விழுந்தன. காய்ந்த ஓலைக-ளால் வேயப்பட்டிருந்த குடிசைகள், சுடர் விட்டு எரிந்து... சாம்பலாகின... வி-வசாயப் பயிர்களுக்கு எந்த சேதங்களையும் அவர்கள் ஏற்படுத்தவில்லை...

சுட்டெரிக்கும் பட்டப் பகலில், வியர்த்து வடியும் அவர்களின் முகங்கள் கண்ணீரையும் கொட்டிக் கொண்டிருந்தன...

திடுதிப்பென பொலிஸ் வண்டிகள் பறந்து வந்தன... பின்னால் ஓடி வரும் இரண்டு மூன்று அரசாங்க பஸ் வண்டிகளில் நிர்க்கதியாக நின்ற மக்கள் பலவந்தமாக ஏற்றப்பட்டார்கள்... அவைகள், எந்த பிரதேசத்தை நோக்கி ஓடும் என்று எவருக்கும் புரியாமலிருந்தது... வாகனத்துக்குள் திணிக்கப் பட்டவர்கள் பரிதாபகரமாகக் கூக்குரலிட்டார்கள்....

திக்கற்ற அவர்கள் அதிகாரங்களையும்... அதிகாரிகளையும்... காக்கிச் சட்டைகளின் துப்பாக்கிகளையும்... எதிர்த்துப் போராடும் திராணியிழந்து நின்றார்கள்... எத்தனை காலங்கள்தான் இவர்களுக்கும்... இவைகளுக்கும் எதிராகப் போராடி மாய்வது...?

அகதிகளாக செட்டிக்குளத்துக்கு வேலாயுதம் மாஸ்டரும் அவரது மனைவியும் இளங்காளைகளான இரண்டு மகன்மார்களோடும், மகளோடும் வந்தார்கள்... இயக்கங்களின் நடவடிக்கைகள் துளிர்விட்ட காலம் அது...

போராளிகள் “வீட்டுக்கு ஒரு பிள்ளை...” என்று வாகனங்களோடு வந்து நின்றார்கள்...

மறுக்க முடியாத நிலை...

வேலாயுதம் மாஸ்டர் ஒரு கணம் கலங்கிப் போய் நின்றார்... மேட்டுக்குடியினரிடம் போகாது, தரித்திரப்பட்ட அடிநிலை மக்களிடமே அவர்கள் வந்து நின்றார்கள்.

போரின் முதல் குண்டு வெடிச் சத்தத்திலேயே விமானமேறி வெளி நாடுகளுக்கு ஓடிவிடத் தகுதி பெற்றவர்கள், அகதி விசா வாங்கிக்கொள்வதற்கு யுத்தத்தை சாதகமாக்கிக் கொண்டார்கள். தஞ்சம் புகுந்த நாடுகளில் அகதி விசா மறுக்கப்பட்டவர்கள், தமிழர்கள் வகை தொகையாக சாக வேண்டும்... அது சர்வதேசச் செய்தியாக வெண்டும்... அதன் மூலம் விசா கிடைக்கவேண்டும் என்று கந்தனையும், கணபதியையும் வேண்டிக் கொண்டார்கள் !

பாமர மக்களோ, தங்கள் பிள்ளைகளைக் கட்டியணைத்து முத்தமிட்டு, கண்ணீருடன் யுத்தக்களத்துக்குத் தாரை வார்த்துக் கொடுத்தார்கள்...

அந்தக் காட்சிகளை அவர் மனத் திரையில் ஓடவிட்டுப் பார்த்துக் குமு-றினார்...

ஒரு மகனை போராட்டத்துக்கு காணிக்கையாகவும், இன்னொருவனை ராணுவத்துக்குப் பலியாகவும் பறிகொடுத்துவிட்டு, இன்று இந்த பஸ்ஸுக்குள், ஒரு பக்கம் மனைவிக்கும் மறுபக்கம் மகளுக்கும் இடையில் மூவருமாய் இருப்பதை உறுதி செய்துகொண்டு ஜடமாக அமர்ந்திருந்தார்...

சாலையோரத்து வீர மரம், பாலை மரம், நாவல் மரங்களும் அசையாது நிற்பதை அவரது கண்கள் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தன...

டீ.ஆர்.ஓ. காரியாலய ஜன்னல்களுடே அரச பணிபுரியும் விசுவாச ஊழியர்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர்...

தேசிய இருப்புக்கான நிலமும், குடியிருப்புமற்ற ஒரு சிறுபான்மைத் தேசிய இனம்... போக்கற்றுப் போய், பிறந்த நாட்டுக்குள்ளேயே பரதேசி களாக அலைக்கழிக்கப்பட்டு... பேரினவாதப் பகையாலும், ஒரே இனத்தின் பிரதேசவாதப் பேதங்களாலும், எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டு வரும் நிலைமையை நினைத்து அவர்கள் விம்மி அழுதார்கள்...

பாரதி வேதனையடைந்ததைப் போன்று அவர்கள் விம்மி விம்மி... விம்மி விம்மி... அழுங்குரலை காற்றிடம் மட்டுமே சாட்சி சொல்லி விட்டு, அயர்ந்துவிட முடியுமோ...?

பஸ் வண்டிக்குள் தலையைக் குப்புறக் கவிழ்த்துக் கொண்டிருக்கும் வேலாயுதம் மாஸ்டரின் செவிப்பறையில் இரண்டு வார்த்தைகள் வந்து விழுந்தன...

அந்த மந்திரச் சொற்கள் எவ்வளவு பரிச்சயமானவை...!

“த...மி...ழ...ர்.. தா...ய...க...ம்... த...மி...ழ்...த்...தே...சி...ய...ம்...”

அந்த நிழலுக்குள் அண்டிக் கொள்ள முடியாத, அந்தத் தமிழரும், கடைசியாக ஒருமுறை அதே வார்த்தைகளை உச்சரித்துவிட்டு வாயை மூடிக் கொண்டார் !

பஸ் வண்டிகள் பறந்துக் கொண்டிருந்தன...

**(யாவும் கற்பனையல்ல!)**
**நவம்பர் 2013**


# கனடா ‘உதயன்’ ஏற்பாட்டில் மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்களின் 6–ஆவது முழக்கம்



**நக்கீரன்**

கோலாலம்பூர், டிச.02:

**பு**லம் பெயர்ந்த தமிழர்களிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி வரும் பன்னாட்டு ஊடகமான கனடிய “உதயன்” வார இதழ்., கடந்த சில வருட காலமாக மலேசியத் தமிழ்ப்பள்ளி மாணாக்கர்களுக்கான நாவன்மை நிகழ்ச்சியை மாதந்தோறும் நிறைவு ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தி வருகிறது.







அதன் தொடர்ச்சியாக நவம்பர் மாதத் திற்குரிய நாவன்மை நிகழ்சி கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றபோது, இதில் தமி-ழகமும் இணைந்து கொண்டது மிகச் சிறப்பாக அமைந்தது. தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சி மண்டலத்தைச் சேர்ந்த சென்னைவாசியும் தமிழாசிரியர்-கவிஞர்- எழுத்தாளர் என்னும் பரிமாணங்களைக் கொண்டவருமான அ. தமிழரசியும் இணையவழியான இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவர்களையும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளரையும் இதற்கெல்லாம் அடிநாதமான உதயன் இதழின் தலைமை ஆசிரியர் நாகமணி லோகேந்திர லிங்கம் அவர்களையும் பாராட்டினார்.

மலேசியாவில் மாலைப் பொழுதில் 7:00 மணி அளவில் இந்த நிகழ்ச்சி தொடங்கியபோது, தமிழகத்தில் மாலை 4:30 மணியாகவும் கனடாவில் காலை 6:00 மணியாக இருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

உதயன் இதழின் தலைமை ஆசிரியர் வழக்கமாக நள்ளிரவைக் கடந்து, உறக்கத்தையும் சமாளித்தபடி எந்தப் பணியையும் அடுத்த நாளுக்கு ஒத்திவைக்காமல் அன்றையன்றைக்கே நிறைவேற்றிவிட்டு உறங்கச் செல்லும் வழக்கமுடையவர் என்றாலும் மலேசிய மாணவர்களின் பிஞ்சு முகத்தையும் அவர்களின் கொஞ்சு தமிழையும் கேட்க காலை 6:00 மணிக்கெல்லாம் தயாராகிவிட்டார்.





சிலாங்கூர் மாநிலத்தின் கோல சிலாங்கூர் சுங்கை தெராப் தோட்டத் தமிழ்ப் பள்ளி மாணவி கேஷ்வினி ராஜா, ஜோகூர் மாநிலம் தெலுக் செங்காட் தோட்ட தமிழ்ப் பள்ளி மாணவர் பிரியநேசன் முருகேஷ், பினாங்கு மாநிலம் தென் செபராங் பிராய் நிபோங் திபால் சுங்காட் தோட்ட தமிழ்ப் பள்ளி மாணவர் சர்மிந்திரன் சிவநாதன், கோலாலம்பூர் அப்பர் தமிழ்ப் பள்ளி மாணவர் சக்தீஸ்வரன் நாகேந்திரன், மலாக்கா மஸ்ஜித் தானா சுங்கை பாரு தோட்ட தமிழ்ப் பள்ளி மாணவி லேனுஷா இளங்கோவன் ஆகியோர் இயற்கையைப் பாதுகாப்போம் என்னும் தலைப்பில் வெவ்வேறு கோணத்தில் எழுச்சிமிகப் பேசினர்.

வழக்கம்போல, நிகழ்ச்சியின் தொடக்க உரையாகவும் தலைமை உரையாகவும் இடம்பெற்றது மூத்த இதழாளர் திரு. லோகேந்திர லிங்கனின் உரை.

மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணாக்கர்களை அரும்பாடுபட்டு ஒன்றிணைத்து நாவன்மை நிகழ்ச்சியை சளைக்காமல் ஏற்பாடு செய்துவரும் பாடாகர் ரவாங் ராஜாவும் இதற்கு அமைதியாக இருந்து பாடாற்றிவரும் அவரின் மனைவி ஸ்ரீயும் பாராட்டிற்கும் நன்றிக்கும் உரியவர்கள் என்று குறிப்பிட்டார். அத்துடன் காலத்திற்கு ஏற்ப ஒரு தலைப்பை ஏற்று சிறுவயதுச் சொற்பொழிவாளர்கள் “சிரத்தையும் சிறப்பும் கொண்டு கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள வந்துள்ளமை உலகத் தமிழர்களைப் பெருமை கொள்ளச் செய்கின்றது” என்றார்.

மாணவர்களின் உரைக்குப் பின் பாராட்டுரை வழங்கிய திருமதி தமி-ழரசி, “இயற்கையை மிஞ்சிய ஆற்றல் உலகில் இல்லை மனித ஆற்றல் அறிவியல் துணை கொண்டு எத்தனை உயரத்தை எட்டினாலும், இயற்கையின் பேராற்றலுக்கு ஈடுகொடுக்கவோ அதை வெல்லவோ இயலாது” என்றார்.

ஆனாலும், இயற்கையை யொட்டிய வாழ்க்கைப் பயணத்தை மனிதன் அமைத்துக் கொண்டால் அதனால் மனித குலம், இயற்கை என இருதரப்புக்கும் நன்மை உண்டு. மாணவர்கள் இன்று தேர்ந்தெடுத்து பேசிய தலைப்பு காலத்தால் பொருத்தமானதும் சாலச்சிறந்ததும் ஆகும் என்றார்.

புவி வெப்பமயத்தாலும் அதனால் விளைந்த பருவகால மாற்றத்தாலும் உலக நாடுகள் வகைதொகையின்றி பேரிடர்களை அடுத்தடுத்து எதிர்கொண்டு வருகின்றன. இதன் விளைவாக, உலக மக்களும் பலவித இன்னல்களை







அண்மை ஆண்டுகளாக எதிர்கொண்டு வருகின்றன. இதில் பங்குபற்றிய-வர்கள் கனடா, மலேசியா, தமிழகம் என மூன்று நிலப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இம்மூன்று நிலங்களும் அண்மைய நாட்களாக தொடர் மழைய எதிர்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதை யெல்லாம் கருத்தில் கொண்டுதானோ என்னவோ “இயற்கையை நேசிப்போம்” என்னும் தலைப்பைத் தேர்ந்தெடுத்து பேசிய மாணவர்கள் அழகு தமிழ் நடையில், செறிவான கருத்தை வெளிப்படுத்தினர்.

இவர்களைத் தயார்ப்படுத்திய மாணவர்களின் ஆசிரியர்களும் அந்தந்தப் பள்ளியின் தலைமைஆசிரியர்களும் போற்றுதலுக்கு உரியவர்கள். இந்த நிகழ்ச்சியை மலேசியாவில் ஏற்பாடு செய்த இசைக் கலைஞரும் சமூக ஆர்வலருமான தம்பி ராஜாவையும் பாராட்டுகிறேன் என்றார்.

இந்த நிகழ்ச்சியக்கு அடியும் முதலுமாக இருக்கும் உதயன் இதழின் ஆசிரியர் சமூகத்தின் மிகுந்த பாராட்டுக்கு உரியவர் என்று மகுடம் சூட்டி தன் உரையை நிறைவு செய்தார் தமிழரசி.

ஆசிரியை திருமதி சரளா சுப்பிரமணியம் நிகழ்ச்சி நெறியாளராக இருந்து வழிநடத்திய இந்நாவன்மை நிகழ்ச்சி, பேராக் சொகமானாத் தோட்ட தமிழ்ப் பள்ளியின் மேநாள் தலைமை ஆசிரியர் திரு. ஏழுமலை ஆறுமுகத்தின் நன்றி உரையுடன் நிறைவுபெற்றது.

தொடர்ந்து நிகழ்ச்சியில் பங்குகொண்ட மாணவர்கள் சார்ந்த பள்ளிகளின் ஆசிரியர்களும் தலைமை ஆசிரியர்களும் தங்களின் கருத்தை பதிவு செய்தனர். ஐம்பதுக்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

**நக்கீரன்** - Nakkeeran

# கடந்தவையும் கடப்பவையும் (12)

- உமா மோகன் -

என்ன செய்ய, வீதிகளில் கதறுவது
எம்மினத்து விதி என்றே கூறிக்கொண்டு

இடம் பெயர்ந்து போன - அந்த
இடச் செய்திகளை தொடர்கின்றேன்,

வீட்டிற்கு முன்னால் ஒரு கோயில்
பூட்டுப் போட்டாலும் கும்பிடலாம் - எம்

மனம் கவர்ந்த கண்ணன் கோவிலது
தினமும் ஒரு கொண்டாட்டம், காலையானால்

மனதில் ஒரு திண்டாட்டம் ஏன்?
அனுதினமும் போவோர் வருவோர் எல்லாம்

பக்தியுடன் கண்ணனைக் கும்பிட்டே நல்ல
சக்தியோடு அந்நாளைத் தொடங்குகின்றார்

பாடசாலைப் பிள்ளைகளும் வேளையோடு
கூடி நின்று கும்பிட்டே செல்லுகிறார்

நாங்கள் மட்டும் நாட்கணக்காய் நாட்களை
எண்ணிக்கொண்டு வீட்டுக்கள் இருப்பது தான்.

வேளை ஒன்று வந்தது, சேர்த்து விட்டார்
நாளும் அன்று வந்தது நடந்தும் கூடப்
போகலாம்

பத்திரம் ஒன்றும் கொடுக்கவில்லை - அங்கு
பணம் எதுவும் வாங்கவில்லை

நெருக்கடி நிறைந்த நேரம் விருப்போடு
சேர்த்துக் கொண்டார் - அங்கு

படிப்பவர் நெற்றிகளில் பளிச்சென்று விபூதி
நடுவினிலே பெரும் பொட்டுக்களும் - இந்து

மகா வித்தியாலயம் என்றாலே இப்படியோ?
மனதிற்குள் நினைத்தபடி இருக்கும் வேளை

நாலைந்து பிள்ளைகள் அன்பாகப் பேச
அவசரமாய் வந்தனர் ,பேசவும் தொடங்கினர் - அன்று

அவ்விடத்தில் தொல்காப்பியர் இருந்திருந்தால்
அவர்கள் மாத்திரைக்காய் இன்னுமொரு சூத்திரத்தைத் தந்திருப்பார் -
அங்கு

அவர்கள் 'ஓம்' என்று சொல்லுதற்கே ஒரு நிமிடம்
ஆகி விடும் - நல்லவர்கள்
இவர்களோடும் நாட்கள் பல கழிந்தன

அத்தோடு விட்டனரா வீட்டில், மாலை நேரம்
வந்திருந்த வீட்டில் பெடியன் படிக்கப் போறான்

சேர்த்தாச்சு இரண்டெழுத்துத் தனியார் நிறுவனத்தில் - அங்கு
சேர்ந்து போய் வரவும் வசதி உண்டு

ஆசிரிய மாணவ சமத்துவம் அதிகம் - அங்கு
சிரிப்பொலிக்கும் குறைவு இல்லை - பெரும்

நினைப்புக் கொண்ட மாணவர்கள் பலர் - அதில்
கதைப்பதற்கு என்று வருபவர்கள் சிலர்

நாம் தான் பதில் கூற என்பது போல்
தாம் மட்டும் வாய்திறக்கும் ஒரு கூட்டம்

ஏன் வந்தோம் என்பதே தெரியாமல்
போய் வந்த நாட்கள் பலவும் உண்டு

ஏன் அந்தக் குழப்பம்? அங்கு
நான் என்போர் பலர் இருந்தார்

ஆர் அவர்கள்? கூடப் படிப்பவள்

'வடித்து எடுக்கும் கல்லூரிக்கு
வால் பிடித்துப் போனவர்கள்'

என்றே அவள் சொன்னாள்

(தொடரும்)

# குளிர் கால பராமரிப்பு வழி முறைகள்



குளிர் காலம் ஆரம்பித்து விட்டால் எமது உடல் மற்றும் சரும ஆரோக்கியத்தில் மேலதிக கவனம் செலுத்த வேண்டும்.

**பனிக்காலத்தில் சருமம் தொடர்பான குறிப்புகள்**

குளிர் காலத்தில் சருமம், முடி போன்றவை வெகுவாக பாதிக்கப்படுகின்றன. பலருக்கு உடம்பு முழுவதுமே வறண்டு காணப்படும். முறையான ஊட்டச்சத்தான உணவு, எமது சருமம் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது.

ஆரஞ்சு பழமும், தேனும். வறண்ட சருமம் உடையவர்கள் மட்டுமல்லாது எண்ணெய் வடியும் முகத்தை கொண்டவர்களுக்கும் இந்த இரண்டும் அற்புத மாற்றத்தை ஏற்படுத்திவிடும். வைட்டமின் ஏ மற்றும் சி சத்துக்கள் அதி-கம் நிறைந்த இந்த பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், மேனி மினு மினுப்படையும்.

உதடு வெடிப்பிற்கான எண்ணெய் அல்லது வெண்ணையை உதட்டில் தடவலாம் அதனால், வெடிப்பு குணமாவதுடன், உதட்டுக்கு கூடுதல் மென்மை கிடைக்கும்.

இரவு உணவுக்கு பின் ஒரு டம்ளர் சுடுநீரில் சிறிதளவு தேன், 6,7 சொட்டு எலுமிச்சை சாறு கலந்து குடியுங்கள், குளிர் காலத்தில் காலையில் வரும் வறட்டு இருமல், சளி குணமாகும்.

வாக்கிங் போகிறவர்கள் காலை தவிர்த்து மாலையில் போவது நல்லது குளிர் காலத்தில் ஜீரண சக்தி குறைவாக இருக்கும், எனவே கடின மற்றும் அசைவ உணவுகளை தவிர்த்து, எளிய சைவ உணவுகளையே எடுத்து கொள்ளுங்கள்.



**பனிக்காலத்தில் பாதம் தொடர்பான குறிப்புகள்**

இக்காலங்களில் சருமம் மீது கவனம் கொள்ளும் அதே வேளையில் எமது பாதங்களை பராமரிப்பதும் அவசியமாகும்.

**உங்கள் பாதங்களை பாதுகாத்து கொள்ள சில குறிப்புகள்:**

- தினமும் இரண்டு வேலை பாதங்களில் மாய்ஸரைசர் தடவி வந்தால் பாதங்கள் வறண்டு போகாமல் இருக்கும்.
- வெதுவெதுப்பான தண்ணீரில் கொஞ்சம் தேன் சேர்த்து அந்த தண்ணீரில் காலை வைத்தால் பாதங்கள் வறண்டு போகாமல், அழகாக இருக்கும்
- ஆலிவ் எண்ணெயை பாதங்களில் மசாஜ் செய்து வந்தால் வெடிப்பு, வறண்ட பாதங்களிலிருந்து தீர்வு கிடைக்கும்
- பாத வெடிப்பில் இருந்து பாதுகாக்க தினமும் பாதங்களில் மாய்ஸரைசர் தடவி ஷாக்ஸ் அணிந்த கொள்ளவும்.

**பனிக்காலத்தில் மூட்டு வலிக்கான குறிப்புகள்**



பனிக்காலங்களில் சருமத்தை பற்றி சிந்திப்பது போல உடல் ஆரோக்கியத்தில் ஏற்படும் சில பாதிப்புக்களையும் கவனிக்க வேண்டும். அவ்வாறானவற்றில் முக்கியமான ஒன்று தன மூட்டு வலி.

குளிர், பனிகாலம் மூட்டுவலி நோயாளிகளுக்கு ஒரு கெட்ட காலம் என்று கூறலாம். ஏனெனில் குளிர் காலத்தில் உடல் உ'ணம் குறைவதாலும் நரம்புகள் பிடிப்பதாலும், தசை நார்கள் இறுக்கம் அடைவதாலும் மூட்டுகள் பாதிப்படைகின்றன.

மூட்டுவலியில் இருந்து குணமடைய எளிய தீர்வுகளை:-

- தினசரி மூட்டுகளுக்கும் கால் விரல்களுக்கும் பயிற்சி கொடுத்து வர மூட்டுவலி மறையும்.
- குளிரால் மூட்டு வலி ஏற்பட்டால் அப்பகுதியில் வெந்நீர் ஒத்தடம் கொடுக்கலாம்.
- கால்சியம் சத்துள்ள உணவுகளை எடுத்துக் கொள்வதால் எலும்பு வலிமை அடையும். குளிர் காலத்தில் மூட்டுக்கான பயிற்சிகளை செய்வதன் மூலம் வலி ஏற்படுவதை தடுக்கலாம்.
- குளிர் காலங்களில் அதிகாலை குளிரில் வெளியில் வருவதை தவிர்க்கவும். வெளியில் வர நேர்ந்தால் மப்ளர், சாக்ஸ், ஷூ பயன்படுத்தி கால்கள், கழுத்து பகுதி கதகதப்பாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளலாம்.

"தகுந்த பராமரிப்புடன் செயற்பட்டால் பனிக்காலமும் இன்பமே"

- இரா. சஹானா

## ஜீவன் முக்தி (பகுதி ) 132

# கர்ம வினைகளை எரிக்கும் விழிப்புணர்வு



விழிப்புணர்வைக் கொஞ்சம் கொண்டு வந்தால் போதும். கர்மச்சக்கரத்தை நிறுத்தி விடலாம். கஷ்ட்டங்களை நிறுத்திவிடலாம்.
கர்ம வினைகள் வாழ்க்கையின் போக்கைத் தீர்மானிக்கும், வாழ்க்கையையே தீர்மானிக்காது.

அந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஓர் எளிய முறைதான் தியானம்.

அந்தந்த காலத்து மக்களுக்கு ஏற்றாற்போல தியானத்தையும், ஆன்மீகச் செய்திகளையும் மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கான ஞானிகள் இவ்வுலகிற்கு வருகிறார்கள். விழிப்புணர்வைச் சேர்ப்பதாலேயே கர்மச் சக்கரத்தை நிறுத்தி விடலாம் என இவர்கள் சொல்வது ஆச்சரியமானதாக இருக்கலாம். ஆச்சரியமாக இருந்தாலும், அது சாத்தியம்தான் என வாழையடி வாழையாக வரும் ஞானிகள் நிருபித்திருக்கின்றார்கள்.

செய்யும் செயல்களிலெல்லாம் விழிப்புணர்வைச் சேர்ப்பதே கர்ம வினைகளை எரித்துவிடும் அபாரமான சக்தி பெற்றது.

ஆகாமிய கர்மங்கள் மேலும் சேராமல் காக்கும் சக்தி விழிப்புணர்வுக்கு உண்டு.

### பிராரப்தத்தை வாழச் செய்து உங்களை தூய்மைப்படுத்தும் குரு பூஜை

குரு பூஜையில் வரும் மானஸ பூஜை என்பது மந்திரங்களை மனதிற்குள் எழுப்பி மானஸீகமாய் செய்யும் பூஜை ஆகும். இது உங்களுக்குள் உள்ள ஆழுமான உணர்வுகளை மேலெடுத்து வரும் தியானம்.
நீங்கள் உங்களுக்குள்ளேயே சக்தியை எழுப்பும் நுட்பம்தான் குருபூஜை, உங்களுக்குள் பக்திப் பெருக்கு ஏற்படும்போது, உங்களுடைய மனதில் எழும் எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் தானாகவே சுத்தமாக ஆரம்பிக்கும். பக்தி பொங்க ஒருவர் செய்யும் செயல்கள் மேலும் மேலும் கர்ம வினைப்பலன்களை ஈர்க்காத நிலைக்கு அவரை எடுத்துச் செல்லும்.

இதை எளிமையாகத்தரும் குருபூஜை ஒரு அருமையான தியான நுட்பம். தேவையில்லாத எண்ணங்கள், பேச்சுக்கள், செயல்கள் யாவுமே உங்களை விட்டுப்போய், குருவின் கருணை மிகவும் எளிதாக உங்களுக்குள் இறங்க உதவும்.

பிராரப்த கர்ம வினைகளைத்தானே வாழுவது ஒருவகை. குருசக்தி உதவி-யோட பிராரப்தத்தை வாழ்ந்து கடந்து, தூய்மைப்படுத்துவது இன்னொரு வகை. குருபூஜை, பிராரப்த கர்மத்தை தூய்மை செய்யும் ஒரு அற்புதமான தியானம்.

### கர்மவினைப் பதிவுகளை எரிக்கும் உள்வாங்கும் தன்மை

சூரியனுடைய கதிர்கள் பிலிம்சுருள்மீது நேரடியாகப் பட்டுவிட்டால் என்ன நிகழும்? பிலிம் சுருளில் பதிவான காட்சிகள் எல்லாம் அழிக்கப்பட்டுவிடும்.

படச்சுருளை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தால், அதில் ஏற்கனவே பதிவாயிருந்த காட்சி எத்தகைய கொடுரமானதாக இருந்தாலும் அவை அழிந்துவிடும். படச்சுருளைப்போல் கர்மவினைப்பதிவுகள் என்று உண்டு. படச்சுருளை சூரிய வெளிச்சத்திற்கு முன்பு வைப்பதுபோல், ஒரு குறிப்பிட்ட நேரம்வரை விழிப்புணர்வ எனும் ஞானஒளிக்கு முன்பு மனச்சுருளை திறந்து வைக்க முடியும்.

இருளுக்குள் சுருண்டிருக்கும் படச்சுருள் முதலில் சூரியனைப் பார்த்து தயங்கும் பயப்படும்.
*குருசக்திக்கு முன்பு கர்மவினைப் பதிவுகளை திறந்தால் போதும் மீதியைக் குரு சக்தி பார்த்துக்கொள்ளும்.*
'ஐய்யோ எங்கு என்னையே அழித்துவிடுவார்களோ' என்று எதிர்க்கும். தன்னைத் திறந்தால் அழியப்போவதுதான் அல்ல தன்னுள் பதிவாகியிருக்கும் காட்சிதான் என்று தெரிந்ததும் எப்படி முழுமையாக தன்னைத் திறக்கிறதோ...
அதுபோல் உங்களுக்குள் பதிந்திருக்கும் கர்மப் பதிவுகளை, விழிப்புணர்வு எனும் ஞானிகளுக்கு முன் திறந்து வைக்க உதவுபவர் ஞானகுரு. உங்களைத் திறப்பதற்கு உதவ வந்தவரே குரு.

உங்களுக்காகவே, சீடர்களுக்காகவே பூமியில் பூத்திருக்கும் ஞானகுருநாதரின் கருணையும், சக்தியும் உங்களுக்குள் ஆழமாக இறங்கி ரசவாதம் செய்வதற்கு உங்களின் இதயத்தை திறந்து வைத்தாலே போதுமானது. விழிப்புணர்வின் வெளிப்பாடு இருக்கும் குருவிடம் தன்னைத் திறக்கும் தன்மையே போதும். எப்படி தன்னை அனுமதிக்கும். படச்சுருளில் படப்பதிவுகள் அழிகிறதோ
அதுபோல் விழிப்புணர்வுக்கு முன்பு, குரு சக்திக்கு திறந்தால் போதும் மீதியை குருசக்தி பார்த்துக்கொள்ளும்.

எவ்வளவு தூரம் திறந்து வைக்கிறீர்களோ அவ்வளவு ஆழம் குரு சக்தியால் உங்களை ஊடுருவ முடியும்.

நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் ஒரு அடி எடுத்து வைத்தால் குரு உங்களை நோக்கிப் பத்து அடி எடுத்து வைப்பார். நீங்கள் உள்வாங்குவதற்கு உங்களைத் திறந்து வைக்கும் நுட்பமே போதுமானது.

### பழை கர்மப் பதிவுகளை எரிக்கும் மறுவாழ்வு

கர்மபினைப் பலன்களை நீக்குவதற்கான வழியாக உங்களுக்கு ஒரு மிக எளி-மையான, நுட்பமான முறையை அளிக்கின்றோம்.

இந்த நிமிடத்திலிருந்து உங்களுடைய வாழ்க்கையில் நடந்த அனைத்து நிகழ்ச்சிகளையும் நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள்.
இந்த நேரத்திலிருந்து உங்களுடைய குழந்தைப்பருவம் வரை பின்நோக்கிச் சென்று எவையெல்லாம் உங்களுக்கு நினைவிலிருக்கிறதோ அவைகளை நினைவுக்குக்கொண்டு வாருங்கள். உங்களால் நினைவுபடுத்தி பார்க்கமுடியாத நிகழ்ச்சிகளைப் பற்றி கவலைப்படாதீர்கள். அது உங்களுடைய ஆழ்மனதையும் தொடவில்லை. அதனால்தான் இந்த நிகழ்ச்சிகள் யாவும் உங்கள் நினைவில் நிலைத்து நிற்கவில்லை.

இந்த தியான நுட்பமுறையை ஆழமாக செய்து பாருங்கள். ஒவ்வொரு சம்பவத்தையும் எடுத்து ஆழமாக வாழுங்கள். மீண்டும் முழுமையாக வாழுங்கள்.

அதனால்தான் Re-living is relieving என்று சொல்வோம்.

மீண்டும் வாழ்வது எனபது வாழ்க்கையிலிருந்து விடுபடுவதற்கான ஒரு அழகிய அபூர்வமான வழியாகும். ஒரு குருவின் நேரடி வழிநடத்துதலின் இந்த தியானத்தை செய்யும்போது அது வாழ்வையே உலுக்கிக கொண்டிருக்கும் பழைய கர்மப் பதிவுகளைக்கூட எரித்துவிட முடியும்.

அதுபோல் நித்யானந்த ஸ்பூரண நிகழ்ச்சியானது, ஒருவரது கர்ம வினைப்பலன்களை தீர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள் மீது கவனம் செலுத்துகின்ற தியான முகாமாகும்.

இந்த தியான நுட்பமுறையானது ஒரு ஞானியின் முன்னிலையில் நடக்கின்ற ஞானக்குவியல் ஆகும்.
இந்த ஒரு விஷயத்தை புரிந்து கொள்ளுங்கள்.

ஞானிகள் குருமார்கள் கர்மவினைப்பலன்கள் அற்றவர்கள். அவர்களுக்கு சாதிக்க வேண்டியது ஒன்றுமில்லை. அவடைய வேண்டியது ஒன்றுமில்லை. அப்படியென்றால் அவர்கள் ஏன் உடலெடுக்கின்றார்கள். காரணம் மனித சமுதாயத்தின் மேலுள்ள கருணையினாலும், அன்பினாலும் மட்டுமே. அவர்கள் மேலும் பல உயிர்களை பிறப்பிலிருந்தும் இறப்பிலிருந்தும் விடுவிப்பதற்காகவும், கர்மவினைகளின் பிடியில் இருந்து விடுவிப்பதற்காகவும்தான் மனிதப்பிறவி எடுக்கிறார்கள்.

குரு உங்களுடைய கர்மவினைப்பலன்களில் தலையிடுவதில்லை.
எவ்வாறு சூரியன் உதிக்கும்போது இருட்டு தானாகவே மறைந்து போய்விடுகிறதோ, அவ்வாறே குருவின் சாந்நித்தியத்தில் உங்களுடைய கர்மவினைப்பலன்களும் எரிந்துபோய்விடும்.

கர்மவினைப்பலன் இருளைப்போன்றது. எதிர்மறை இருப்பு போன்றதாகும். கரமவினைப்பலனுக்கு நேர்மறையான இருப்பு நிலை இல்லை.

ஒரு மைக்கை கையில் எடுத்து தூரமாக வைப்பது எறிவது போல கர்மவினைப்பலனை அவ்வளவு எளிதாக நம்மால் தூக்கி வெளியே எறிய முடியாது. எவ்வாறு வெளிச்சம் இல்லாத நிலை இருட்டு என்று சொல்லப்படுகின்றதோ அதைப்போலவே கர்மவினைப்பலனும் நமக்குள் உள்ளொளி இல்லாத நிலை, அறியாமை ஆகும். அது சக்தி இல்லாத நிலையே!

உங்களுக்குள் அனுபவமாக மாறிய தீட்சைகளையும், மாற்றங்களையும், தெளிவி-னையும், நினைவில் கொள்வதாலும் இந்த தெளிவு மூலமாக புரிந்துகொண்டதின்படி அதை நடைமுறையில் வாழ்க்கையாக வாழ்வதானால் எந்த ஒரு கர்மவினைப் பலனையும் எரித்து அழித்துவிட முடியும். உங்கள் வாழ்க்கையாக அது மாறுமா-னால் வாழ்வே ஆனந்தமயமாகும்.

### 1. மேலும் மேலும் கர்மவினைகளை சேர்க்காமலிருக்க என்ன செய்ய வேண்டும்?

**உங்களுக்குள் அனுபவமாக மாறிய தீட்சைகளையும், மாற்றங்களையும், தெளிவினையும் நினைவில் கொள்வதாலும், இந்த தெளிவு மூலமாக புரிந்துகொண்டதின்படி அதை நடைமுறையில் வாழ்க்கையாக வாழ்வதனால் எந்த ஒரு கர்மவினைப்பலனையும் எரித்து அழித்துவிட முடியும்.**

கர்மவினைகளைப் பற்றி தெளிவாகப் புரந்து கொள்வதனாலும், விழிப்புணர்வைக் கொண்டுவருவதாலுமே அகற்றி விடலாம். விழிப்புணர்வோடு முடிவெடுப்பதனால் கர்மவினைப் பலன்களை எண்ணங்களாலும், பேச்சினாலும் செயலாலும் மேலும் மேலும் சேர்த்துக் கொள்ளமாட்டோம்.

### 2. வேதகாலத் திருமணங்களுக்கும் சாதாரண திருமணங்களுக்கும் என்ன வித்தியாசம்?

கர்மவினைப் பலன்களை சேர்க்காது கரமவினைப் பலன்களை தீர்க்கும் வாழ்க்கையை வாழ்வது ஒவ்வொருவருக்கும் அவசியமானது.

சாதாரணமான திருமணங்களில், ஆண், காம உணர்விலிருந்தும், பெண், பய உணர்விலிருந்தும் இயங்குகிறார்கள். ஆண், பெண்ணின் பயந்த சுபாவத்தை உபயோகப்படுத்திக்கொள்கிறான். பெண் ஆனவள் ஆணினின் ஆசையை உபயோகித்துக்கொள்கிறாள், இதனால் கர்மவினைப்பலன்களை சேகரிக்கும் வாழ்க்கையை வாழ்வார்கள்.

ஆனால் ஞானிகள் வடிவமைத்த சப்தபதி விரத திருமண நிகழ்ச்சிகளில் எடுத்துக் கொள்ளும் சத்தியபிரமாணம் அவர்கள் இருவரும் அவரவரது வினைப்பலன்களை தீர்ப்பதில் முனைந்து செயல்படுவதாகவும், ஒருவரை ஒருவர் ஏமாற்றிக்கொள்வதில்லை என்றும், விண்ணப்பங்களை மேன்மேலும் சேர்த்துக்கொள்ளமாட்டோம் என்ற கருத்துக்கு முக்கியத்துவம் அளிப்பார்கள்.

'நம் திருமண வாழ்க்கையை விட ஆன்மீக வாழ்கையை மேம்பட்ட ஒன்றாகக் கருதி வாழ்வோம். ஒன்றிணைந்து செயல்படுத்துவோம்' என்றும் அக்னி சாட்ஷியாக சத்தியப்ரமாணம் எடுத்துக்கொள்வார்கள். இவர்கள் கரமவினைப் பலன்களை தீர்க்கும் வாழ்க்கையை வாழ்வார்கள்.

### 3. நாங்கள் இருக்கும் இடத்திலிருந்து கர்மவினைகளை கடந்து வாழ்வதற்காக தியான தீட்சையை பெற முடியுமா?

இந்த பூமிக்கோளின் வாழ்க்கைச் சங்கிலியிலிருந்து விடுபட்டு இருக்கும் பல கோடிக்கணக்கான மனிதர்களில் நீங்களும் ஒருவராகுங்கள்.
அன்றாடம் செய்யக்கூடிய நித்ய தியான நுட்பமுறை, மொத்த மனித சமுதாயம் தி-னமும் தியானிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட மிகவும் சக்திவாய்ந்த தியான முறை ஆகும்.
இந்த தியான சூத்திரம் ஒரு பூரணமான தியான முறை ஆகும். முழுமனித உயிரினை மாற்றுவதற்காகவும், அனுபவமாகிய இறுதிநிலை ஞானமடைதல் என்ற அனுபவம் மனிதருள் நிகழ்வதற்கு தயார் செய்யும் நுட்பமாகவும இயங்குகின்றது. அந்த தியான நுட்பமுறையின் எவ்வொரு பகுதியும் மீதியுள்ள பகுதிகளுக்கு உறுதுணையாக விளங்கி தனிமனிதனின் மனத்தெளிவை உயர்த்த உதவுகிறது.

இந்த தியான நுட்பமுறை பேரானந்த மயமான வாழ்வு வாழ பயிற்சி. இந்த தியான நுட்ப முறையானது கர்மவினைச் சுமைகளில் இருந்து உங்களை விடுவித்து நிலையான பேரானந்த நிலைக்குள் கொண்டு செல்கிறது.

**நித்தியானந்த பரமசிவம் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அமுத மொழிகள். மேலதிக தொடர்புகளுக்கு: (416) 880-8585**

# இவ்வார ராசிபலன்

**03-12-2021 வெள்ளி தொடக்கம் 09-12-2021 வியாழன் வரையும்**


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதி-யோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**மேஷம்:** பணவரவு தரும் வாரம். பேரியோர்களின் ஆதரவு பெருகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயத்தில் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பண விரயம் உண்டு. புதிய சிந்தனை உருவாகும். கலையார்வம் கூடும். கடன் வாங்க நேரி-டும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். காரியத்தடை அகலும். சிறப்புக்கள் சேரும். பொறுப்புக்கள் கூடும். திருமுனை ஏற்படும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. விவசாயம் விளைச்சல் தரும். குழந்தைகள் நலனில் அதிக அக்கறை தேவை. இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. புத்திரரால் பூரிப்பு உண்டு. போட்டிகள் மறையும். தொல்லைகள் அகலும். வில்லங்கம் விலகும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். பொருள் சேர்க்கையுண்டு. வரவுகள் மிகுதியாகும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். காலணிகள் காணாமல் போகும். புதிய பொருள் சேரும். காதல் எண்ணம் உருவாகும். உடல் சோர்வு ஏற்படும். கடன் பிரச்சனைத் தீரும். பணியில் நிரந்தரம் உண்டாகும். புதிய நட்பினால் பலன் உண்டு. பாசம் அதிகரிக்கும். தொழில் முன்னேற்றம் அடைவீ-ர். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். கணவன், மனைவி இடையே நல்ல உறவு ஏற்படும். உடல் நோயிலிருந்து விடுதலையாவீர்கள். உடல் பொலிவு கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வினைதீர்க்கும் பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 4,2,1,7
அதிர்ஷ்ட நிறம்: கருநீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K




**ரிஷபம்:** புத்துணர்வோடு செயல்படும் வாரம். உஷ்ண நோய் வந்து நீங்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். வெற்றி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. கல்விச் செலவு உண்டு. உறவி-னர் வருகை ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். முடிவுகள் சாதகமாகும். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. பணவரவு தாமதமாகும். பாராட்டு பெருகும். உடல்சோர்வு நீங்கும். சந்தர்ப சாதகம் உண்டு. உத்யோகம் உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். சந்தோ'ம் பெருகும். மாணவர் பாராட்டு பெறுவர். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். கற்பனை ஆற்றல் பெருகும். உண்மைகள் வெளிப்படும். கன்னிப்பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமைகள் சேரும். இயந்திர பணியில் நிதானம் தேவை. சொல்லில் கவனம் தேவை. விபரீத போக்கு மாறும். சிக்கனத்தை கையாள வேண்டும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வீடு வாங்கும் யோகம் உண்டு. திட்டங்கள் நிறைவேறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,5,7,2
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,N




**மிதுனம்:** அதிர்ஷ்ட வாய்ப்புகள் வரும் வாரம். வரவுகள் அதிகரிக்கும். குடும்ப உறவு பலப்படும். பெண்களால் பெருமை சேரும். வணிகத்தொழில் விரிவடையும். விவேகம் அதிகரிக்கும். வேற்று இன நட்பு கிட்டும். மாற்றுத்தொழில் உருவாகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். கல்வி தடை ஏற்படும். உத்தியோகம் உன்னதம் தரும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். காதல் இனிக்கும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். எண்ணெய் நி-றுவனம் ஏற்றம் தரும். தாய் வழி உறவு லாபம் தரும். குடும்ப அன்யோன்யம் பெருகும். எதிலும் எச்சரிக்கை தேவை. அரசாங்க அனுகூலம் கூடும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். புது நண்பரால் அதிகப் பலன் உண்டாகும். சுபச்செய்தி கூடி வரும். விவசாயம் லாபம் தரும். நிதி நிலைமை சீராகும். தோற்றப் பொலிவு கூடும். கைப்பொருள் களவு போகும். பூர்வீகச் சொத்து சேரும். தொழில் வளர்ச்சி கூடும். உத்தியோகத்தில் தளர்வு ஏற்படும். புதிய தொழில் அமையும். உடல்சோர்வு ஏற்படும். உணவு பிரியம் அதிகரிக்கும். முகப்பொலிவு கூடும். உடல் நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள். சமூக சேவை செய்ய முன்வருவீர்கள். மருத்துவத்துறையில் ஆர்வம் கொள்வீர்கள். வாய்ச்சொல் பலன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வரதராஜப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,3,1,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**கடகம்:** மங்களகரமான வாரம். மெத்தனப் போக்கு விலகும். பயணம் அனுகூலம் தரும். கலை ஈடுபாடு கூடும். விருந்தினர் வருகை உண்டு. தொழில் லாபம் தரும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மனோ-தைரியம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலை விலகும். சோதனை நீங்கி சாதனையான காலம் வரும். ஞாபக மறதி ஏற்படும். திடீர் லாபம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். மற்றவர் உதவி கிட்டும். புதிய நட்பு உருவாகும். திட்டம் வெற்றி பெறும். தகுதிகள் உயரும். கவ-லைகள் ஒழியும். புதிய எண்ணம் உருவாகும். கடன் பிரச்சனை அகலும். சுபச்செலவு அதிகரிக்கும். நண்பர்களால் உதவி உண்டு. அரசு வழி ஆதாயம் உண்டு. விவசாயம் பலன் தரும். புதிய நட்பு ஏற்படும். திறமைகள் வெளிப்படும். கமி'ன் தொழில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். புகழ் கூடும். காரியத்தடை அகலும். கூட்டுத்தொழில் திருப்தி தரும். அந்தஸ்து உயரும். உடல்நலம் சீராகும். விளையாட்டுத்துறையில் வெற்றிக் கிட்டும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். பழைய கடன் வசூலாகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 3,8,1,9
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Z




**சிம்மம்:** உதவிகள் கிடைக்கும் வாரம். வெளிநாட்டுப் பயணம் உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டாகும். சொத்துச் சேர்க்கையுண்டு. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் வருகை ஏற்படும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். வழக்கு வெற்றி தரும். வீடு, மனை யோகம் உண்டு. எதிரிகள் பலம் குறையும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவுக்கு வரும். பதவி உயர்வு வரும். வர்த்தக தொழில் லாபம் தரும். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். புதிய முயற்சியில் கவனம் தேவை. முன் கோபத்தை குறைக்கவும். காரிய வெற்றி உண்டு. கலைத்துறை முன்னேற்றம் உண்டு. குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல்நலம் திருப்தி தரும். திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். அரசு வகையில் அனுகூலம் உண்டு. பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். ச-கோதர வகையில் சகாயம் கிட்டும். தன வரவுகள் தடைப்படும். புகழும், பொருளும் பெருகும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லைத் தந்தவர் விலகிவிடுவர்.
வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 2,7,6,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,B




**கன்னி:** சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டிய வாரம். ஆனந்தம் குடிகொள்ளும். அணிகலன் ஆர்வம் கூடும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். தனம் சேரும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். எதிரிக-ளால் ஏற்றம் கிட்டும். பொதுவாழ்வில் புகழ் கூடும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் நன்மை பயக்கும். பெண்களின் ஆலோசனை பெருமை சேரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். உற்சாகம் களைகட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். சொந்த தொழிலில் உயர்வு கிட்டும். பணிவும், துணிவும் கூடும். கஷ்ட காலம் மறையும். வாகன மாற்றம் உண்டாகும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். பயணங்களால் இடையூறு ஏற்பட்டு சரியாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். வசந்தம் தேடி வரும். மேன்மைகள் தொடரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: 6,4,3,7
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,H




**துலாம்:** துலாம்: கனமான லாபம் கிடைக்கும் வாரம். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரிய தடை விலகும். திருஷ்டிகள் ஒழியும். பணவரவு திருப்தி தரும். பேச்சில் நிதானம் தேவை. பெற்றோர்கள் ஆலோசனை பலன் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பிரிந்த தம்பதியினர் ஒன்று சேருவர். நண்பர்களால் ஏற்றம் உண்டு. சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் கூடும். பழையக் கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். கடன் சுமை குறையும். விபரீத போக்கு மறையும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். உறவினர் வருகை உற்சாகம் தரும். பிரச்சனைகள் அகலும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். வெளிநாட்டு நபரால் வெகுமதி உண்டு. குதூ கலமான மனநிலை காணப்படும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். மன சந்தோஷம் அதிகரிக்கும். கல்வியில் மாணவர்கள் சிறப்பார்கள். மங்களச் செய்தி வரும். செயல் திறமை அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தன தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,1,3,5
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P





**விருச்சிகம்:** தொட்டது துலங்கும் வாரம். தெய்வீகப் பற்று கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். முயற்சிகள் பலன் தரும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். மங்களச் செய்தி வரும். வாகனச் செலவு உண்டு. வாழ்வில் மேன்மை உண்டு. பண-வரவு உயரும். செயல்திறமை அதிகமாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. கட்டிடத்தொழில் லாபம் தரும். திருமண வாய்ப்பு கூடி வரும். தாய், தந்தை உதவி உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு கூடும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தொழில் மேன்மை உண்டு. வி-வசாயம் பலன் அளிக்கும். வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். தீர்த்த யாத்திரை உண்டு. திக்கற்ற நிலை மாறும். கனவுகள் நிறைவேறும். பங்குச்சந்தை லாபம் தரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். வெற்றி வீடு தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அலமேலுமங்கை, அதிர்ஷ்ட எண்: 5,4,2,3
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,K




**தனுசு:** தன வரவு பெருகும் வாரம். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். கணவன், மனைவி உறவு சீராகும். இடமாற்றம் உண்டு. கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. தன்னம்பிக்கை கூடும். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த வி' யம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமி வாங்கும் யோகம் உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். வேண்டும் வரம் கிடைக்கும். உற்சாகம் அலைமோதும். வேலையாட்களிடம் கவனம் தேவை. மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணம் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்கள் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வெற்றியை எட்டும் காலம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். கட்டிட தொழிலில் கவனம் தேவை. கற்பனை திறன் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீரங்கநாதர், அதிர்ஷ்ட எண்: 4,3,1,9
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,P




**மகரம்:** முத்தான வாய்ப்புகள் பெருகும் வாரம். தொல்லைகள் வில-கும். கமி'ன் தொழில் லாபம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்யம் அதிகரிக்கும். சுறுசுறுப்பு அதிகமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவி கௌரவம் உயரும். நன்மைகள் நாடி வரும். வராத கடன் வந்து சேரும். பணவரவு உண்டு. ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு பெருகும். பேரியோர்களின் ஆலோசனை பலன் தரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் தேவை. பயணத்தால் பலன் உண்டு. குழப்பங்கள் அகலும். திடீர் செலவு ஏற்படும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. உயர்கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். மங்கள செய்தி வரும். சாதகமான வாய்ப்பு உருவாகும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். அன்னதானம் ஆரோக்கியம் தரும். உடல்நலம் சீராகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீமூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 5,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,Y




**கும்பம்:** சுபிட்சங்கள் பெருகும் வாரம். கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். பணவரவு தரும். பாகப்பிரிவினை ஏற்படும். வாகன மாற்றம் உண்டு. புதிய நட்பு ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேச பயணம் உண்டு. வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். அலைபேசியால் அலைச்சல் ஏற்படும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். சகோதர வழியில் கவனம் தேவை. அணிமணிகள் சேரும். விரும்பியது நிறைவேறும். கட்டிட தொழில் ஒப்பந்தங்கள் குவியும். கடன் பாக்கிகள் வசூலாகும். பதற்றம் குறையும். சுறுசுறுப்பு பெருகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. தொழில் முன்னேற்றம் ஏற்படும். சேமிப்பு பெருகும். திறமைகள் வெளிப்படும். பங்குச்சந்தை லாபம் தரும். மன ஆரோக்கியம் சிறக்கும். தொலைதூரப் பயணம் லாபம் தரும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ சண்டிகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,L




**மீனம்:** நினைவாற்றல் பெருகும் வாரம். மங்கள நிகழ்ச்சியில் பங்கு பெறுவீர்கள். பணமும், பாராட்டும் சேரும். வரன் வாயில் தேடி வரும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. நல்ல சம்பவங்கள் நடைபெ-றும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். விளையாட்டில் கவனம் தேவை. பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். கனவுகள் பலிதமா-கும். விலகி சென்றவர் விரும்பி வருவர். மருத்துவச்செலவு குறையும். கனிவான பேச்சு அவசியம். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். ஆண்களுக்கு அதிக-ாரம் உயரும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். பணிச்சுமை குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். இனம் புரியா சந்தோ'ம் மனதில் குடிக்கொள்ளும். பிரயாணம் வெற்றி பெறும். மாலை நேரத்தில் மிக கவனத்துடன் இருக்க வேண்டும். வறுமையின் வாட்டம் குறையும். பெண்களால் பெருமை சேரும். தன வரவில் தாமதம் உண்டு. சுபச்செய்தி தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மஹாகணபதி, அதிர்ஷ்ட எண்: 4,3,1,0
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,P

# மரண அறிவித்தல்



பிறப்பு:
10 - 08 - 1931

இறப்பு:
26 - 11 - 2021

## திருமதி. ஜானகி புஷ்பராஜா

**(கொக்குவில்)**

**கொக்குவிலை பிறப்பிடமாகவும், தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. ஜானகி புஷ்பராஜா அவர்கள் 26-11-2021 அன்று இறைவனடி சேந்தார்.**

காலஞ்சென்ற சுப்பையா - மாணிக்கம் அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற ராசையா - சின்னதங்கச்சி அவர்களின் அன்பு மருமகளும்,

அன்னார் காலஞ்சென்ற ராசையா புஷ்பராஜாவின் அன்பு மனைவியும்,

காலஞ்சென்றவர்கைளான பாக்கியம், பவளம், ஞானம், தம்பிஜயா, ஏகாம்பரம், அன்னரத்தினம், பொன்னுதுரை, பொன்னம்பலம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரியும்,

நளினி (Alberta), பவானி (Sri Lanka), ஷாமினி, மனோராஜ், பாலகுமார், ராஜ்குமார், யுமானி (India) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

ராஜகுமார் (Alberta), ராஜகாரியர் (Sri Lanka), காலஞ்சென்ற கதிர்காமநாயகம், மாலினி, பூமாதேவி, லசந்தி, குற்றாலநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,

பிரியதர்ஷினி (ரமணா), சுரேஷ் (விசாயினி), பிரதீபன் (ரக்ஷிதா), பிரஷாந்தன், அனோஜன் (நட்டாஷா) நிரோஜினி, மரினா, அபிசின்ட் (கஸ்தூரி), விபிஷினி (கோகுல்), கிஷோரி, வர்ஜினி (விமல்), சரண்கா (பாலாஜி), தர்மினி ஆகியோரின் அன்பு பேத்தியும்,

சாயிரா, சாயிஷா, ஆர்த்தி, கேஷா, டினோஷ், ஆர்யா, சயன், டியா வான்யா, ரியோன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

***அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக 04-12-2021 சனிக்கிழமை மாலை 6:00 மணி தொடக்கம் 9:00 மணி வரையும், 05-12-2021 ஞாயிற்றுக்கிழமை காலை 6:00 மணி தொடக்கம் 8:15 மணி வரையும் Chapel Ridge Funeral Home & Cremation Centre (8911 Woodbine Ave, Markham) இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, தொடர்ந்து ஈமைக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.***

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தொடர்புகளுக்கு:

Nalini: (403) 957-0927
Bavani: 94779590771
Sharmini: (416) 318-1145
Mano: (647) 988-7810
Bala: (416) 451-4845
Rajan: (647) 224-3546
Jumani: 9840233983
Anojan: (647) 400-6964
Niro: (647) 628-5638

# ஈழத்துத் திருக்கோவில்கள் 975



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) கோயில் மட்டக்களப்பு

*“கரந்தைபுனை கண்ணுதலுங் கண்ணன் றானும்*
*களிப்புடனே கலந்துதவு காரி தன்மேல்*
*உரந்தரு பொன்னூஞ்சலிசை ஓதுதற்கு*
*உம்பல்முகத் துடனுதித்தெய் வுலகு முய்யப்*
*புரந்தரன்பூ சனையியற்றப் பொன்னி யாற்றைப்*
*பூங்காவில் வரச் செய்த புனிதன் றன்னை*
*நிரந்தரமா யுயிர்தோறும்தம் நிறைந்து நிற்கும்*
*நின்மலனாய் ஐங்கரன்றாள் நினைகுவாமே.”*

தற்காலத்திலே மானிடவியல், சமூகவியல், ஒப்பீட்டுச்சமயம், தென்னாசிய வரலாறு ஆகிய துறைகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இந்து சமய வழக்காறுகள், வழமைகள், இந்து சமூக அமைப்பிலே ஆலயங்களும், சமயமும் பெறும் பங்கு, குடும்பம், தொழில் போன்றவற்றோடு சமயம் கொண்டுள்ள தொடர்பு, போன்ற பல விடயங்களை கல்வித்துறைசார்ந்த அறிஞர்கள் பலமொழிகளிலும் எழுதி வருகின்றனர். தற்காலத்தில் மேற்குலகிலும் இந்துசமயத்தின் கூறுகள் பலவும் மேற்குலக மக்களால் பின்பற்றப்பட்டு வருவதோடு, வளர்ந்துவரும் விஞ்ஞானத்தின் ஆய்வுக்குட்பட்ட பொருளாகவும் இந்துசமயம் விளங்கி வருகின்றது. இவை யாவற்றினுடைய அடிநாதமாக விளங்குபவை இந்து ஆலயங்கள் எனின் அவை மிகையாகாது.

இந்துக்களின் வாழ்க்கையில் ஆலயங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. ஆலய வளாச்சியின் மூலம் மக்களிடையே ஆன்மீக வளாச்சி ஏற்பட்டு வந்தமையை வரலாறுகள் மூலம் அறிய முடியும். பண்டைக்காலத்திலே அரசர்களும், சான்றோர்களும், அறங்காவலர்களும், ஆலயங்களைப் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர். ஆலயங்களின்மூலம் சமயஉண்மைகளையும், சமய வாழ்க்கை முறையையும் உணர முடிவதோடு, நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் சான்றோராகவும் விளங்க ஆலயங்கள் வழிகாட்டி வருகின்றன.

பாரம்பரியம் மிக்க இனமான தமிழர்களுடைய வரலாறு, பண்பாடு, கலாச்சாரத்தை அழித்தொழிக்க எண்ணுவோர், இந்து ஆலயங்களை அழிப்பதில் முதன்மை வகிக்கின்றனர். தற்காலத்திலும் தமிழீழ தாயகத்திலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலுமுள்ள பல ஆலயங்கள் அழிவுக்குள்ளாகி இருப்பது கண்கூடு. இத்தகைய சூழ்நிலையில் ஆலய வரலாறுகளையும் அதனோடு தொடர்புடைய தமிழர் வரலாறு, மற்றும் தமிழர் பின்பற்றும் மரபுகளையும் அறிந்து பாதுகாப்பது அவசியமாகின்றது.

காவும் பொழிலும் கழிமுகமும், புள்ளணிந்து ஏரியும், இலங்கையின் சீரார் குணதிசையில், ஏரால் இயன்ற செந்நெல் இன்சுவை, தெங்கின் இளநீரும் தீம்பலாவின் கனிகளும் எங்கும் குறையாது வழங்கும் நன்னாடு, எனப் பல்லோராலும் போற்றப்படும் தகமை சான்ற திருநாடு மட்டக்களப்பு. இத்தகைய இயற்கை எழில்சூழ் மட்டக்களப்புத் திருநாட்டின் தென்பால், ஆரையம்பதி என்னும் அழகிய கிராமம் காணப்படுகின்றது. ஆரையம்பதியின் எல்லைகளாக தெற்கே தாழங்குடாவும், மேற்கே வாவியும், கிழக்கே கடலும், வடக்கே காத்தான்குடியும், அமைந்துள்ளன.

ஆரையம்பதியின் முகத்துவாரம்தெரு சனத்தொகை கூடிய பிரதேசமாகக் காணப்படுகின்றது. ஆரையம்பதியின் முகத்துவாரமாய் விளங்கியதால் முகத்துவாரம்தெரு எனக் காரணப்பெயர் ஏற்படலாயிற்று. ஸ்ரீ பரமநயினார் கோயிலென வழங்கும் ஐயனார்கோயில், முகத்துவாரம் தெருவிலுள்ளது. பரமநயினார் என்னும் பெயரானது, எல்லாம்வல்ல இறைவன் என்னும் பொருள் கொண்டதாகக் காணப்படுகின்றது. அத்தோடு பரமநயினார் என்னும் பெயர் எல்லாம் வல்லவரான ஐயனாரைக் குறிப்பதாகவும் அமைகின்றது.

ஐயனார் வரலாறு புராணக்கதைகளோடு தொடர்புடையதாகக் கூறப்பட்டுள்ளது. புராணக்கதைகள் மக்களுக்குச் சில விடயங்களை உணர்த்தவேண்டி எழுந்தவையாகக் கொள்ளவேண்டும். புராணக் கதைகள் புனைகதைகள் எனக் கருதுவதை விடுத்து, அவற்றிலே காணப்படும் சாரம் எவ்வாறு மக்கள் வாழ்க்கையை நெறிப்படுத்த அன்றுதொட்டு இன்று வரை உதவி வருகின்றது என்பதைக் கருத்திற் கொள்வது அவசியமாகின்றது. புராணக்கதைகளிலே அறிவியலின் கூறுகளும் புதைந்துள்ளதை மனதிற்கொள்ளவெண்டும். கற்றோரும் மற்றோரும் வாழ்வாங்கு வாழவேண்டி எழுந்தவையாகவே புராணக்கதைகள் காணப்படுகின்றன. புராணக்கதைகள் கற்பனைவளங் கொண்டவையாகக் காணப்படினும், தற்காலவாழ்வியலில் இவற்றின் கூறுகளை உய்த்துணர முடிகின்றது. புராணம் என்பதற்குத் தொன்மை, பழமை என்ற கருத்துக்களும் காணப்படுகின்றன. அனேகமான புராணக் கதைகளின் சாரமாக, மக்கள் மனங்களிலே காணப்படும் ஆணவம், கன்மம், மாயை இவற்றை அகற்றி, மக்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் தன்மைகொண்டனவாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையிலேயே ஐயனாரின் தோற்றம்பற்றிய புராணக்கதையும் காணப்படுகின்றது. ஐயனாரின் தோற்றம் சாதாரண நிலையிலுள்ள மக்களிடையே பல்வேறு கேள்விகளை எழுப்பினாலும், கால, தேச, வர்த்தமானங்களுக்கமையவும், வாழ்வியலை பல்வேறு நிலைகளில் மக்கள் வாழ்ந்தமையைப் புலப்படுத்தவும், சிவ, வைணவ ஐக்கியத்தை ஏற்படுத்தவும் நிகழ்ந்ததாகக் கொள்ள முடியும்.

அநீதிகள் பல புரிந்த மகிஷாசுரனை துர்க்கை கொன்றபோது, அவனது தங்கையாகிய மகிஷி கோபமுற்று, தேவர்களைப் பழிக்குப்பழி வாங்கப் பிரம்மதேவனை நோக்கித் தவம் இயற்றிப் பல வரங்களைப் பெற்றாள். அரிகரசுதனைத் தவிர வேறு யாராலும் தனக்கு மரணம் ஏற்படக் கூடாது என வரம் பெற்ற மகிஷி, தேவர்களையும், மற்றவர்களையும் கொடுமைப்படுத்தி வந்தாள். அவளிடமிருந்து தப்பித்து நெடுநாள் வாழ எண்ணிய தேவர்கள், பாற்கடலைக் கடைந்து அமுது எடுக்க விரும்பினர். ஆனால் அசுரர்கள் தாம் நீண்டநாள் வாழவிரும்பி தேவர்களிடமிருந்து அமுதைப் பறித்து உண்ணத் தொடங்கினர்.

*வளரும்...*

---

***(_29__ பக்கத் தொடர்ச்சி)***

*பஞ்சாபின் சிங்கம் என்று அழைக்கப்பட்ட ரஞ்சித் சிங்கை மக்கள் போற்றினர். கோஹினூர் வைரத்தை ரஞ்சித் சிங் மீட்டது முதல் அடுத்த 20 ஆண்டுகளுக்கு அவரது வலது கை மணிக்கட்டில் தஞ்சம் அடைந்திருந்தது கோகினூர் வைரம். மக்களின் நெஞ்சங்களில் நீங்கா இடத்தைப் பிடித்திருந்த ரஞ்சித் 1837 ஆம் வருடம் மரணமடைந்தார்.*

*ரஞ்சித் சிங் மறைந்த பிறகு அவருக்கு சொந்தமான கோகினூர் வைரத்தை இன்றைய ஒடிசாவில் உள்ள ஜெகநாதர் கோவிலுக்கு தானமாக வழங்க வேண்டுமென்று அவரது ஆசையை உயிலில் எழுதியிருந்தார். ஆனால் அவரது ஆசை நிறைவேறவில்லை ரஞ்சித் சிங் மறைவைத் தொடர்ந்து அவரது மூத்த மகன் பஞ்சாபை ஆள துவங்கினார். ஆனால் அரசியல் சர்ச்சைகளில் இவரும் இவருக்குப் பின் அரசரான பஞ்சாப் சிங்கத்தின் மற்றொரு மனைவியின் மகனான மன்னர் ஷேர் சிங் என்பவரும் அடுத்தடுத்து ஐந்து ஆண்டுகளுக்குள் கொலை செய்யப்பட்டு இறந்தனர். இவ்வாறு அடுத்தடுத்து ரஞ்சித் சிங்கின் அரசு வாரிசுகள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக இறந்துவிட ஆளும் பொறுப்பை ஏற்றார் இளவரசர் துலீப் சிங்.*


*பஞ்சாபின் மன்னராக துலிப் சிங்கிற்கு முடிசூட்டிய போது அவருக்கு ஐந்து வயது தான் ஆகியிருந்தது. அவரது தாயார் இவர் சார்பாக ஆட்சி புரிந்தார். இதற்கு அரசியின் சகோதரரும் உதவி செய்தார். ஆனால் அரசி அதிகாரிகளுடன் முறை தவறிய உறவு வைத்திருந்ததாக புரளி கிளம்பியதால் ராணுவம் கட்டுப்பாடின்றி களத்தில் இறங்கியது. இந்த சூழலில் பஞ்சாப் அரசில் நிலவிய குழப்பங்களை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள இந்தியாவின் பெரும் பகுதிகளை தங்கள் ஆளுகைக்குள் வைத்திருந்த பிரிட்டிஷாரின் கிழக்கிந்திய கம்பெனி முடிவு செய்தது. 1849 ஆம் வருடம் பிரிட்டிஷாரின் ஆளுகைக்குட்பட்ட பகுதியாக பஞ்சாப் அறிவிக்கப்பட்டது.*

*சூழ்ச்சியின் உச்சமாக தோல்வியுற்ற நாட்டின் மன்னன் தனது மதிப்புமிக்க செல்வங்களை இங்கிலாந்து பேரரசி விக்டோரியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. பஞ்சாப் சிங்கம் ரஞ்சித் சிங் தனது கையில் அணிந்திருந்த உலகப்புகழ் பெற்ற கோஹினூர் வைரம் பதித்த அணிகலன் விக்டோரியா அரசியிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்காக தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் கையெழுத்திட்ட மன்னர் துலிப் சிங்கிற்கு வயது பத்து மட்டுமே. இந்த சதித்திட்டத்தில் தனி அக்கறை எடுத்துக் கொண்டு அதை வெற்றிகரமாக செயல்படுத்தியவர் டல்ஹௌசி. கோஹினூர் வைரம் கைமாறிய விவகாரத்தில் பின்னாட்களில் கிழக்கிந்திய கம்பெனிக்கு சிக்கல் ஏற்படாமல் இருக்க இந்தியாவில் இருந்து வெளியேற்றப்பட்டு இங்கிலாந்திற்கு நாடுகடத்தப்பட்டார் துலிப் சிங். ஆங்கிலேயர் கொள்கைப்படி ஆங்கிலமும் கிறிஸ்தவ மதமும் அவருக்கு போதிக்கப்பட்டது சீக்கிய மதத்திற்கு எதிராக துலிப் சிங்கின் முடி வெட்டப்பட்டு வளர்க்கப்பட்டார். இந்திய மன்னர்களில் கிறிஸ்தவ மதத்தை தழுவிய முதல் மன்னன் துலிப் சிங் ஆவார். இதற்காக ஆண்டுதோறும் அவருக்கு சன்மானம் வழங்கி அரசு விருந்தினர் தகுதியும் அவருக்கு வழங்கப்பட்டது. ஆனால் கோஹினூர் வைரத்தின் சாபம் பிரிட்டிஷார் பக்கமும் தொடர்ந்ததாக கூறப்பட்டது.*

*இந்தியாவிலிருந்து கடல் வழியாக கோஹினூர் வைரத்தை லண்டன் கொண்டு சென்றபோது கப்பலில் இருந்த ஆங்கிலேயர்கள் வாந்தி, மயக்கம், மலேரியா என கடும் நோய்களால் அவதியுற்றதாக கூறப்படுகிறது. ஒரு வழியாக வைரம் ராணி விக்டோரியாவின் கையில் ஒப்படைக்கப்பட்ட போது பாபர் நாதிர் ஷா போல் அதன் மதிப்பை கேட்டு தெரிந்து கொள்ளாமல் அதன் வரலாற்றை அறிந்துகொள்ள விரும்பினார் விக்டோரியா. அவரது ஆணைக்கிணங்க கோஹினூர் வரலாற்றை ஆராய்ந்த ஆய்வாளர்கள் கோஹினூர் வைரமானது ஒரு சாபத்தை கொண்டு வருவதாகவும் அதை வைத்திருந்த அனைத்து ராஜாக்களும் ஒன்று அவர்களின் சிம்மாசனத்தை இழந்ததாகவும் அல்லது மற்ற பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.*

*ஆனால் கோஹினூர் வைரத்தை ஒரு பெண் வைத்திருந்தால் மட்டுமே அதன் சாபம் பலிக்காது என ராணி விக்டோரியாவிடம் தெரிவித்தனர். இதனால் பிரிட்டிஷார் விழிப்புடன் இந்த சாபத்தில் இருந்து விலகி அதனை பெண்கள் மட்டுமே அணிய வேண்டும் என்று முடிவு செய்தனர். இதனால் ராணி விக்டோரியாவிடம் வழங்கப்பட்ட கோஹினூர் வைரத்தை தனது மணிமகுடத்தில் பாதிக்கும் அளவிற்கு வெட்டி அதில் பதித்து அணிந்து கொண்டார். இதனால் 186 கேரட் இடையில் இருந்த கோகினூர் வைரம் 105 கேரட் ஆக குறைந்தது. ராணி விக்டோரியாவுக்குப் பிறகு அவரது மூத்த மகனான ஏழாம் எட்வேர்ட் மன்னனின் ராணியான அலெக்சாண்ட்ரியாவின் மகுடத்தில் அது பிரகாசித்தது. பின்னர் விக்டோரியாவின் பேரனான ஐந்தாம் ஜார்ஜ் மன்னனாக அவரது மனைவி முதலாம் எலிசபெத் மகுடத்தில் 1937இல் அது ஒளி வீசியது. இங்கிலாந்து அரச குடும்பத்தின் தற்போதைய ராணியான இரண்டாம் எலிசபெத்தின் தாயார் தான் முதலாம் எலிசபெத். 2002ஆம் ஆண்டு எலிசபெத் மறைந்தபோது அவரது சவப்பெட்டியின் மீது கோஹினூர் வைரம் பதித்த மகுடம் வைக்கப்பட்டது. லண்டனில் நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட லட்சக்கணக்கான மக்கள் அதனை பார்த்தனர். கோஹினூர் வைரத்தை அனைவரும் கடைசியாகப் பார்த்த தருணம் அதுதான். பின்னர் கோஹினூர் பாதிக்கப்பட்ட ராணியின் மணிமகுடம் இரண்டாம் எலிசபெத் வசம் ஒப்படைக்கப்பட்டது. இப்பொது லண்டனில் உள்ள அரச குடும்பத்திற்கு சொந்தமான அருங்காட்சியகத்தில் கோகினூர் வைரம் வைக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதிலும் காலனி ஆட்சி நடந்தபோது பல்வேறு நாடுகளிலும் பிரிட்டிசார் கொள்ளையடித்த அரிய வகை விலை உயர்ந்த பொருட்கள் இந்த அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. 1947-ல் இந்தியா சுதந்திரம் அடையவே நமது நாட்டில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட செல்வங்களை பற்றி நாட்டு மக்கள் சிந்திக்கத் தொடங்கினர். ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்த காலத்தில் கோஹினூர் வைரத்தை மீட்க முயற்சிகள் செய்தாலும் அது பலிக்கவில்லை. இந்தியாவின் மதிப்புமிக்க பெருமைமிக்க கருவூலம் கோஹினூர் வைரம் என்றாலும் அதை இங்கிலாந்திடம் இருந்து மீட்பதில் சிக்கல்கள் இருக்கிறது. கோஹினூர் வைரத்தை மீட்பது ஒரு நாட்டின் அருங்காட்சியகத்தில் இருக்கும் கற்சிலைகளை மீட்பது போன்று சாதாரணமான செயல் இல்லை. இங்கிலாந்து அரசியின்ன் மணி மகுடத்தில் பதிக்கப்பட்ட வைரத்தை பெயர்த்தெடுத்து கொடுக்கச் சொல்வது நடக்காத செயல். 2010ல் இந்தியா வந்த அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கோஹினூர் வைரம் இங்கிலாந்திற்கு தான் சொந்தம் என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.*

*காலனி ஆதிக்கத்தின் போது கொண்டு சென்ற பொருட்களை ஒவ்வொரு நாட்டினருக்கும் திருப்பிக் கொடுத்தால் அரச குடும்பத்திற்கு சொந்தமான அருங்காட்சியகத்தில் ஒரு பொருளும் இருக்காது என்றும் கூறினார் இந்தியா மட்டுமல்ல பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசம் உள்ளிட்ட நாடுகளும் கோஹினூர் வைரத்தை சொந்தம் கொண்டாடி வருகின்றன. தாலிபான் கூட தங்களுக்கு சொந்தமான கோஹினூர் வைரத்தை ஒப்படைக்க வேண்டுமென ராணி இரண்டாம் எலிசபெத்திற்கு கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால் கோஹினூர் வைரத்தை சொந்தம் கொண்டாடி நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளின் வாதம் பிரதிவாதங்கள் இன்னும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது.*



# மரண அறிவித்தல்

தோற்றம்:

19 - 09 - 1942





மறைவு:

26 - 11 - 2021



## திருமதி. மகேஸ்வரி திருநாவுக்கரசு (பாக்கியம்)

**யாழ். கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், நோர்வே, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. மகேஸ்வரி திருநாவுக்கரசு அவர்கள் 26-11-2021 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - உத்தமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், திரு.திருமதி. கதிரவேலு தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற திருநாவுக்கரசு (VKT - பிரபல தொழிலதிபர்) அவர்களின் அன்பு மனைவியும்,

காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, இராஜரட்ணம், மற்றும் சாம்பசிவம், நல்லம்மா, தேவராஜா, சொர்ணலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

திருச்சாந்தி (பிரித்தானியா), திருச்சிவம் (பிரித்தானியா), திருக்குமார் (பிரபல தொழிலதிபர் - கனடா), திருஞானம் (பிரித்தானியா, திருச்செல்வி (பிரித்தானியா), திருக்கேதீஸ்வரன் (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

தேவபாலன் (பிரித்தானியா), இரஞ்சிதவதனி (பிரித்தானியா), சுதர்விழி (கனடா), அருள்செல்வி (பிரித்தானியா), அற்புதராஜா (பிரித்தானியா), தவராஜினி (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

யதுர்சன், Dr. யட்சன் (UK), கவின், கவிதா, கபில், திமேத்தி (சட்டத்தரணி, கனடா), Dr. தனிஷா (கனடா), தனிக்கா, திகர்ணன், தியாணி, அஜேன், டெசியா, திசோக், திவ்யன், தஜினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும்,

சயன் அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

***அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05-12-2021 அன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 11:00 மணி தொடக்கம் 2:00 மணி வரை நடைபெறும்.***

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:**

**திருக்குமார் (மகன்): (416) 726-7748**









# UTHAYAN உதயன்

25 வெள்ளி விழா 2021






உதயம் 1339 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 3, 2021


# கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் ஏற்பாடு செய்த 'தமிழர் நினைவெழுச்சி நாள்' தொடர் நினைவேந்தல் சிறப்பாக இடம்பெற்றது





கடந்த 27ம் திகதி கனடாவில் மார்க்கம் பெயர்கிறவுண்ட்ஸ் என்னும் மைதானத்தில் கொட்டகை அமைத்து 'தமிழர் நினைவெழுச்சி நாளை' ஏற்பாடு செய்த 'கனடிய தமிழர் நினைவெழுச்சி அகவம;' விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்படி நினைவேந்தல் சிறப்புற நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளுத. இங்கே காணப்படும் படங்கள் சில அங்கு எடுக்கப்பட்டவையாகும். (படங்கள்:- சத்தியன்)

# தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்ட உலகளாவிய தமிழ்த் தேசிய அரசியல் பேரியக்கமே தற்போது தமிழ் மக்களுக்கான காலத்தின் தேவை



## மாவீரர் நாள் செய்தியில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன்


"தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்ட உலகளாவிய தமிழ்த் தேசிய அரசியல் பேரியக்கமே தற்போது தமிழ் மக்களுக்கான காலத்தின் தேவை. அத்துடன் இலங்கை அரசினது தமிழினவழிப்பு முயற்சியினைத் தடுத்து நிறுத்த, தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல தாயகத் தமிழ் மக்கள், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள், தமிழக மற்றும் உலகத் தமிழ் மக்கள் ஓரணியில் அணிவகுத்து நின்று செயற்படுதல் என்பதும் அவசியமானது".

*(உள்ளே விபரமான கட்டுரை 10ம் பக்கத்தில்)*

# Heritage Beyond Borders - A Multicultural Organization Hosted its Annual Awards Festival

# கனடாவின் Heritage Beyond Borders அமைப்பு நடத்திய விருது விழா





கனடாவில் மிக நீண்ட காலமாக இயங்கிவரும் **Heritage Beyond Borders** அமைப்பு நடத்திய வருடாந்த விருது விழா மற்றும் "மகளிர் திறன் போட்டி" மற்றும் அனைத்து சமூகம் சார்ந்த வெற்றியாளர்களை கௌரவிக்கும் விருது விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பல பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும். மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்ட இந்த விழாவில் கனடிய தமிழர் சமூகம் சார்ந்த இருவருக்கு சாதனையாளர் விருதுகள் வழங்கப்பெற்றன

கனடா "உதயன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அவர்களுக்கு அவரது பத்திரிகையின் 25 வருட கால ஊடகச் சேவைக்கும் மற்றும் சமூகப் பணிக்கும் மற்றும் **Miss Tamil Canada and 'Miss Tamil Globe'.** ஆகிய இரண்டு அமைப்புக்களை நிறுவி தமிழர் கலாச்சாரத்தை புலம்பெயர் நாடுகளில் பேணி வருவதற்காகவும் திருமதி சசிகலா நரேந்திராவிற்கு **Impact Award** விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றார்கள். இங்கே காணப்படும் படங்கள்அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

# மாணவர்களை பாடசாலை நேரத்திற்கு பின்னரான செயற்பாடுகளில் ஈடுபத்தும் அமைப்புக்களுக்கான நிதி ஒதுக்கீடு




**Dec. 1st> 2021. Scarborough-Agincourt MP, Aris Babikian, joined Ms. Lee Soda, Agincourt Community Services Association (ACSA) Executive Director, and staff to make a $369,600 funding announcement to Scarborough-Agincourt students for the after-school programs to support safe and supervised activities for students during the school year in priority neighborhoods across our community. The program helps kids stay active and engaged. Students in 9 Scarborough-Agincourt schools will benefit from this timely funding.**

*(உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கத்தில்)*

# 'கனடா உதயன்' ஏற்பாட்டில் மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்களின் 6வது நாவன்மை முழக்கம்





புலம் பெயர்ந்த தமிழர்களிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி வரும் பன்னாட்டு ஊடகமான கனடிய "உதயன்" வார இதழ். , கடந்த சில வருட காலமாக மலேசியத் தமிழ்ப்பள்ளி மாணாக்கர்களுக்கான நாவன்மை நிகழ்ச்சியை மாதந்தோறும் நிறைவு ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக நவம்பர் மாதத்திற்குரிய நாவன்மை நிகழ்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது, இதில் தமிழகமும் இணைந்து கொண்டது மிகச் சிறப்பாக அமைந்தது. தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சி மண்டலத்தைச் சேர்ந்த சென்னைவாசியும் தமிழாசிரியர்-கவிஞர்- எழுத்தாளர் என்னும் பரிமாணங்களைக் கொண்டவருமான அ. தமிழரசியும் இணையவழியான இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்

*(உள்ளே விபரமான செய்தி 33ம் பக்கத்தில்)*